# கிராம நலம்

ஏப்ரல் - 1968

4196



"உழவர் உலகத்தார்க்கு ஆணி"



# இதோ,
# மகிழ்ச்சி நிறைந்த
# சீதா...

அவள் மகிழ்ச்சிக்குக் காரணம்·


அறிவுள்ள கணவன்



இனிய குழந்தைகள்· தனக்கே உரிய ஒரு வீடு வளமிக்க வயல்



## பிஎஸ்ஜி பம்பு
## அளிக்கும் நிறைந்த விளைச்சல்.



PSG *the hallmark of high standard*

- நீங்களும் பிஎஸ்ஜி பம்பு செட்டை இன்றே வாங்குங்கள்.
- என்ஜின் அல்லது மோட்டாரில் இயங்குவது.
- தாராளமாக தண்ணீர் பெறுங்கள்.
- ஏராளமாக விளைச்சல் காணுங்கள்
- நிறைய செல்வம் அடையுங்கள்.

**விவரங்களுக்கு எழுதுங்கள்:**

**பி எஸ் ஜி இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிட்யூட்**

கோயமுத்தூர் 4 தென்னிந்தியா

**விற்பனைக் கிளைகள்:**

**311, தம்பு செட்டித் தெரு, சென்னை 1**

**217, 218, மேலமாசி வீதி, மதுரை 1**

**Nalin-PSG-240 TL**

# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 13 ஏப்ரல் 1968 நெல் 7


## இரு பெரும் நாடுகளின் பண்பாட்டுணர்வு

" நவில் தொறும் நூல் நயம் போலும் பயில் தொறும்,
பண்புடையாளர் தொடர்பு "

" வால்கா கிராட்" நகரத்தின் துணை மேயர், நகராட்சி உறுப்பினர்கள், ஆகியோரை வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

உங்கள் நாட்டைப் போலவே, எங்கள் நாடும் பழம் பெருமை வாய்ந்தது. பல நூற்றுண்டுகளாகவே, கவிதை, இலக்கியம், நுண்கலைகள் ஆகியவற்றின் சிறப்பியல்புகளை அடிப்படையாகக் கொண்டு, மிக உயர்ந்ததொரு பண்பாட்டை நாங்கள் உருவாக்கி வந்துள்ளோம். எங்களுடைய சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், கடந்த ஜூன் திங்களில் உங்களுடைய நகரத்திற்கு வருகை தந்தனர். அதை ஒட்டி, இன்று 'வால்கா கிராட், நகராட்சி உறுப்பினர்களாகிய நீங்கள், எங்களுடைய நகரத்திற்கு வருகை தந்திருக்கிறீர்கள். நம் இரண்டு நகர மக்களிடையே உள்ள நட்புறவின் அறிகுறியாக இது விளங்குவதைக் கண்டு, நான் பேருவகை கொள்கிறேன்.

உங்களுடைய நகர மக்களுக்கு என்னுடைய உளமார்ந்த நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் அன்புகூர்ந்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்."

மா. முத்துசாமி

[சோவியத் நாட்டு "வால்காகிராட்" நகராட்சி மன்றத்தைச் சேர்ந்த அந்நகராட்சி மன்றத் துணை மேயர், மற்றும் இருவர் அடங்கிய குழுவினர், சென்னையில் 17—4—1968-ல் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்களைச் சந்தித்த பொழுது, அமைச்சர் அவர்கள் அக்குழுவினரை உபசரித்து, வாசித்தளித்த வரவேற்புரை.]

---

<u>முதல் அட்டைப்பட விளக்கம் :</u> சிந்தனைத் தூண்டுகோல்

" உழுவார் உலகத்தார்க்கு ஆணி "

தமிழ் மறை—

● " திருவள்ளுவர் காலத்திலும், அதற்கு முன்னும் பின்னும், நாட்டில் உழவு ஒன்றே மிகப் பெரும்பாலோரின் தொழிலாக இருந்து வருகிறது."

●● "விஞ்ஞான முற்போக்கு ஏற்பட ஏற்பட, பெரும்பாலோர் செய்யும் உழவைச் சிறுபான்மையோர் செய்து முடிக்க முடியும்."

●●● "எனவே 'உழவு' என்ற தலைப்பில் வள்ளுவர் பெருமான் அமைத்துள்ள அதிகாரம் (பத்து 'குறள்' கொண்டது), சிறப்புப்பற்றி, நிலத்தில் உழுது பாடுபடும் தொழிலைப் போற்றுவதாக இருந்தாலும் உடம்பால் உழைத்துப் பாடுபடும் எல்லாத் தொழிலையும், போற்றுவதாகக் கொண்டால், காலத்திற்கு ஏற்ற முறையில் பொருள் விளக்க வல்லதாகும்."

டாக்டர் மு. வ. அவர்கள் கருத்துரை—
("திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்"
என்ற நூலிலிருந்து)

# தமிழால் முடியும்!

## (மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணுதுரை)

**[பச்சையப்பன் அறநிலைய 120-வது ஆண்டுவிழா, பச்சையப்பன் கல்லூரியில் 22-3-68-ல் நடைபெற்றது. அவ்விழாவில் கலந்துகொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் ஆற்றிய உரையின் சாரத்தை இங்கே அளித்துள்ளோம்.**

**மாண்புமிகு முதலமைச்சர் தம்முடைய பேருரையில், மூன்று முக்கிய கருத்துக்களை வலியுறுத்தினர். கனிவு-தெளிவு-துணிவு-இம்மூன்று குண நலன்களும், வாழுகின்ற, வளர்ச்சி பெறுகின்ற சமுதாயத்திற்கு, குறிப்பாக மாணவர் சமுதாயத்திற்கு அவசியம் தேவை என்பதை, மாண்புமிகு முதலமைச்சர் தமக்கே உரித்தான கம்பீர நடையில் எடுத்துரைத்தார். பாடமொழி பற்றிய தமிழக அரசின் கொள்கையை தெளிவுபட விளக்கிக் காட்டும் அவருடைய சொல்லோவியம், நம் சிந்தனைக்கெல்லாம் அரிய விருந்தாகும்—ஆசிரியர்.]**

"தமிழ், பாடமொழியாக முடியுமா" எனச் சந்தேகம் எழத் தேவையில்லை. எதுவும் முயன்றால் முடியும். எல்லாம் தமிழால் இயலும்.

ஆங்கிலத்தின் அவசியம் பற்றி திரு முத்தையா செட்டியார் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, சில மாணவர்கள் தமிழால் முடியும் என்று குரல் எழுப்பியது கண்டு மகிழ்ச்சியடைந்தேன். ஆனல் அந்த மாணவர்கள் 'தமிழால் முடியும்' என்று கூறியதோடு 'எங்களால் முடியும்' என்று கூறி இருந்தால், நான் இன்னும் மகிழ்ச்சியடைந்திருப்பேன். ஏனெனில், இன்றைய தினம் தமிழுக்கு ஒரு குறையும் இல்லை. ஏற்கெனவே அது வளர்ந்திருக்க வேண்டிய அளவு வளர்ந்திருக்கிறது. இருக்கிற குறையெல்லாம், தமிழின் அளவுக்கு நாம் வளர்ந்திருக்கிறோமா என்பதுதான்.

உயர்தனிச் செம்மொழியான ஒருமொழியை-வன்மையும் மென்மையும் பெற்றிருக்கிற ஒரு மொழியை-நாம் பெற்றிருக்கிறோம். அந்த மொழியின் பெருமையைக்கூட நாம் எவ்வளவு காலம் கழித்து உணர்ந்தோம் என்பதையும் இந்த நேரத்தில் எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன்.


### மயக்கத்தின் அடிப்படையில்......

படிக்கும்போதே தமிழார்வம் மிக்கவர்கள், படிப்பை முடித்து வெளியே சென்று பணியாற்றத்துவங்கும்போதும், தமிழ் உணர்வோடு இருந்தார்கள் என்றால், நிச்சயம் இப்போதைக்கிருப்பதைவிட தமிழின் ஆக்கம் பெருகும். தமிழ்ப்பற்று மிக்கவர்கள் என்ஜினியர்களாக வந்த பிறகுதான்-ஹைரோடுகள், நெடுஞ்சாலை என்ற அழகு தமிழ் பெயரில் அழைக்கப்படுகின்றன. இல்லையென்றால் 'ஹைரோடு' என்ற ஆங்கிலச் சொல்லே தமிழ் வரி வடிவத்தில் இருக்கும்.

பாடமொழி தமிழில் முடியுமா என்பது துவக்கத்தில் கொஞ்சம் மயக்கம் தருவதுதான். அது தூங்கி எழுந்ததும் வரும் மயக்கம் போன்றது.

தூங்கி எழுந்ததும், ஆயாசமும், அப்பாடா என்ற சோர்வும்-கொட்டாவி விடுவதும் போலத்தான், பல்லாண்டுகளாய் வேறு மயக்கத்தில் இருந்த நாம் தமிழால் முடியுமா என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

டாக்டர் ஏ. வேணுகோபால் அவர்கள் தமிழில் புதிதாகப் பேசினர். அதில் எவ்வளவு சுவையும் இனிமையும் கண்டோம்? அந்தப் பேச்சு, முயன்ருல் முடியும் என்பதைப் பறைசாற்றுவதாக அமைந்தது.




## தகவல் அறிவும் மொழி அறிவும்

ஆங்கிலத்தைப் புறக்கணிக்கக் கூடாது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனல் ஆங்கிலத்தைப் பாடமொழியாக வைத்துக் கொண்டால்தான், ஆங்கில அறிவைப் பெற முடியும்—என்பதிலிருந்து நான் மாறுபடுகிறேன். ஆங்கிலத்தைச் சிறப்புப் பாடமாக ஏற்றுப் படித்தாலே, அந்த மொழியில் போதிய அறிவுபெற முடியும். பாடமொழியாக இருந்துதான் அறிவுபெற முடியும் என்பதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். கணக்குப் பாடத்தை ஆங்கிலத்தில் படிப்பதால் மட்டும் ஆங்கில நடையழகைப் பெறமுடியுமா? பூகோளப் பாடத்தை ஆங்கிலத்தில் படிப்பதால் மட்டும் போதுமான ஆங்கில அறிவு பெற்றுவிட முடியுமா? வெறும் தகவல் அறிவு பெறுவதால், மொழி அறிவு வளர்ந்து விடாது—என்று நினைப்பது, நீண்ட காலப் பழக்கத்தின் காரணமே தவிர வேறல்ல!

நான் பாடங்கள் அனைத்தையும் ஆங்கிலத்தில் படித்தவன். ஆனல் தமிழார்வம் வளரும் காலத்தோடு நானும் வளர்ந்ததால், எனக்கும் ஏதோ கொஞ்சம் தமிழறிவும்-ஆர்வமும் ஏற்பட்டது.

தமிழின் ஆர்வம் ஆங்கில அறிவின் வீழ்ச்சியாக இருக்கக்கூடாது-என்பதை ஒப்புக்கொள்கிறேன். நிலைமை அப்படி இல்லை என்பதையும் ராஜா சர் முத்தையா செட்டியார் போன்றோருக்கு விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனல் இன்றைய தினம் சட்டமன்றத்தில் ஆங்கிலத்தை விட்டுவிடாதீர்கள் என்று என்னிடம் வேண்டுகோள் விடுக்கிருர்கள். ஆனல் 20-30 ஆண்டுகளுக்குமுன், ஆங்கிலம் படிப்பதே தேசத்துரோகம் என்று பேசப்பட்டது அது ஆங்கில வெறுப்பாகவே மாறியது. அதை நினைத்துக்கொண்டுதான் இப்போது பேசுகிருர்கள்.


## தமிழே தகுந்தது...

தமிழைப் பாடமொழி ஆக்குவதில் புதிய அரசு முழுமூச்சுடன் முனைந்து நிற்கிறது. அதில் வெற்றியும் பெறும். அவ்விதம் தமிழ் பாடமொழியான பிறகும், இந்திய துணைக் கண்டத்திலேயே ஆங்கிலத்தின் தரம்-தமிழ் நாட்டில்தான் முதல்தரமாயுள்ளது என்ற பெரும் புகழை நிச்சயம் நிலைநாட்டுவோம்.

ஏனெனில் இன்று உலகம் வேகமாக ஒன்று பட்டு வருகிறது. உலகின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்ல முடிகிறது. ஒரு பகுதியின் கருத்து வேகமாக இன்னொரு பகுதிக்குப் பரவுகிறது.

### ஆங்கிலத்தின் இடத்தில் எந்த மொழி?

வெண்டல்வில்கி என்னும் பேராசிரியர் சொன்ன ஒரே உலகத்தை நோக்கி-நாம் முயலாமலேயே முன்னேறிக்கொண்டிருக்கிறோம். ஆகவே ஆங்கிலத்தின் மூலமே அந்த உலகத் தொடர்பை நாம் பெற முடியும். இப்போது அந்த ஆங்கிலத்தின் இடத்தை நமது நாட்டில் பெறும் தகுதியுள்ளது எந்த மொழி? நாடாளுமன்றத்திற்கு, நீதிமன்றத்துக்கு ஆங்கிலத்தின் இடத்தைப் பெறும் தகுதியும், திறனும், வளமும் மிக்க மொழி இந்தியாவிலேயே தமிழ் மொழி ஒன்றுதான். இதை நான் தமிழன் என்பதால் கூறவில்லை. தமிழின் பெருமையை உணர்ந்தவர்கள் அதை ஒப்புக்கொள்வார்கள். ஏனெனில் இந்தி மொழியில் அந்த அளவுக்குத் தனிச் சொற்கள் குறைவு.




தமிழில் 'பட்ஜெட்' என்பதற்கு நிதிநிலை அறிக்கை என்று சுமார் பத்தாண்டுகளுக்கு முன்பே பெயரிட்டிருக்கிறோம். பட்ஜெட் என்பதற்குரிய முழுப்பொருள் பட்ஜெட் என்ற ஆங்கிலச் சொல்லுக்கே இல்லை. பட்ஜெட் என்பது, அந்த காகிதங்கள் உள்ள பெட்டியைத்தான் குறிக்கும். ஆனால் நிதிநிலை அறிக்கை என்றால்—மாநிலத்தின் நிதி எவ்வளவு?—அது எந்த நிலையில் இருக்கிறது? அதை அமைச்சர் எப்படி அறிக்கையாகத் தருகிறார் என்பதை எல்லாம் அந்தச் சொல் காட்டுகிறது.

யார் பேசுவதில் எவ்வளவு இன்பம் இருந்தாலும், தாய் நம்மை 'வாடா மகனே' என்று கூறும்போது ஏற்படும் இன்பத்திற்கு நிகரில்லை. அதுபோல தாய்மொழியின் இன்பத்திற்கு—னுக்கு—நிகர் ஏதுமில்லை.


பச்சையப்பன் கல்லூரியில் நான் படித்த போது கணக்குத் துறையைச் சார்ந்த சின்ன தம்பி பிள்ளையும் வேதாந்தத் துறையைச் சார்ந்த சர்மாவும் பொருளாதாரத் துறையைச் சார்ந்த நாராயணசாமியும், அரசியல் துறையைச் சார்ந்த ராஜேஸ்வரனும் கல்லூரி முதல்வராக இருந்தார்கள். இப்போது ரசாயனத் துறையைச் சார்ந்த சண்முகநாதன் அவர்கள் கல்லூரி முதல்வராக வராக இருக்கிறார். இது ஆங்கில இலக்கியப் புலமை மட்டும் இருப்பவர்களால்தான் நிர்வாகம் செய்ய முடியும் என்ற வாதத்தைப் பொய்யாக்குவதாகும். அடுத்தக் கட்டம் தமிழ்த்துறை தலைவரும் கல்லூரி முதல்வரானால், பச்சையப்பன் கல்லூரி மரபு வளர்ந்து வருவதைக் காட்டும்.

### உயர்ந்த எண்ணங்கள்

தமிழர்கள் முதலில் உலகத் தொடர்பு கொண்டிருந்தவர்கள். அதனால்தான் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்று கூறினார்கள். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றார்கள். 'நல்லதும் தீதும் பிறர் தர வாரா' என்றார்கள். சீர் திருத்தவாதிகளே வெளியே கூற அஞ்சும் 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்றார்கள்.

அவ்வளவு உயர்ந்த இடத்தில் நாம் இருந்தோம். என்ன காரணமோ கீழே விழுந்தோம். கீழே விழுந்ததால், எண்ணம் கீழ்நோக்கிப் போய்விடவில்லை. மேலேயே பார்த்துக்கொண்டிருக்கிறோம். மேலே வேகமாக ஏறுங்கள் என்கிறார்கள் சிலர். நாங்களோ-காலை ஊன்றி வழுக்காதவாறு முன்னேற விரும்புகிறோம். நான்கு அடி ஏறி எட்டு அடி கீழே சறுக்குவதில் பயனில்லை. படிப்படியாக-உறுதியாக முன்னேற வேண்டும். இதுவே நமது கொள்கை."

# 1967-68-ல் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்—ஓர் ஆய்வுரை



மாண்புமிகு சட்டம்—கூட்டுறவு அமைச்சர்
திரு செ. மாதவன்

இம் மாநிலத்திலே கூட்டுறவு இயக்கம் எல்லாத் துறைகளிலும் 1967-68-ம் ஆண்டில் மேலும் வளர்ச்சி அடைந்துள்ளது.

வேளாண்மைக் கடன் வசதி, கூட்டுறவு விற்பனை, கூட்டுறவுப் பண்ணை, பயன் கொள்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், பலவகைக் கூட்டுறவு சங்கங்கள் பணியாளர் பயிற்சி முதலியவை "கூட்டுறவு" என்பதன் கீழ் வரும் பெருந் திட்டங்களாகும்.

**கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உழவர்களுக்குக் கடன்வசதி**

வேளாண்மை உற்பத்தித் திட்டங்களிலே கூட்டுறவுச் சங்கங்கள் முக்கியமான பணியாற்றி வருகின்றன. குடியானவர்களுக்கு வேண்டிய கடன் வசதியில் பெரும் பகுதியைக் கூட்டுறவுச் சங்கங்களே வழங்கி வருகின்றன; அவர்களுடைய விளைபொருள்களை விற்பனை செய்வதற்கும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கின்றன. நான்காவது திட்ட இறுதிக்குள் கூட்டுறவுச் சங்கங்கள் குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்கள் வகையில் ரூ. 80 கோடி கடன் வசதியளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது வேளாண்மையில் ஈடுபட்டோரின் மொத்தத் தேவையில் 50 சத வீதமாகும்.


நிதி உதவும் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்துவதற்காகவும், அவற்றின் கடன் வாங்கும் சக்தியைப் பெருக்கும் பொருட்டும், கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்களில் பங்கு மூலதனத்திற்கு அரசாங்கம் ஆண்டு தோறும் தொகை வழங்கி வருகிறது. 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை அரசாங்கம் தமிழ்நாடு கூட்டுறவு வங்கியில் பங்கு மூலதனத்திற்கு ரூ. 126 லட்சமும், மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகளின் பங்கு மூலதனத்திற்கு ரூ. 174 லட்சமும், தமிழ் நாடு மத்திய நில அடமான வங்கியின் பங்கு மூலதனத்திற்கு ரூ. 45 லட்சமும், ஆரம்பக் கடன் வழங்கு சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கு ரூ. 108 லட்சமும் வழங்கியுள்ளது.

இம் மாநிலத்திலே முழு நிதி உதவித் திட்டம் 274 வட்டாரங்களிலே நிறைவேற்றப்பட்டு வருகிறது.

வசதியற்றவர்களுக்குக் கடன் வழங்குவதனால் ஏற்படக் கூடிய இழப்புகளைச் சரிக்கட்டுவதற்காக முழு நிதி உதவித் திட்டம் செயலிலுள்ள பகுதிகளில் இருக்கும் சங்கங்களுக்கு ஏற்படக்கூடிய இழப்பினை ஈடு செய்ய அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளது. அச்சங்கங்கள் வழங்கிய குறுகிய காலக் கடன்கள், நடுத்தரக் காலக் கடன்கள் இவற்றில் 10 சத வீதம் வரை மேற்சொன்னபடி இழப்பினை ஈடு செய்ய அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது. தனிப்பட்ட நேர்வுகளில் ஏற்படுகிற இழப்பில் மூன்றில் இரு பங்கினை அரசாங்கமும் எஞ்சியுள்ள ஒரு பங்கினை மாநிலக் கூட்டுறவு வங்கியும், மத்திய வங்கிகளும், ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களும் ஏற்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு அது உட்பட்டதாகும்.

மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம், தஞ்சாவூர் மாவட்டத்தின் 36 சமுதாய நல வளர்ச்சி வட்டாரங்களில் செயற்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் 1,045 கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இவற்றில் 4·43 லட்சம் உறுப்பினர் உள்ளனர். இம்மாவட்டத்தில் இந்தத் திட்டம் நெல் விளைவிப்பது குறித்து முதற்கண் கொண்டு வரப்பட்டது. இத்திட்டம் இப்போது ஏனைய பயிர்களுக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்க உறுப்பினர் ஒருவர் வாங்கக்கூடிய கடனில் மேல் வரம்பு இம்மாநிலம் எங்ஙனும் ரூ. 15,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சர்க்கரை ஆலைகளின் பதிவு பெற்ற கரும்பு உற்பத்தி உறுப்பினரைப் பொறுத்த வரையில், இந்த மேல் வரம்பு ரூ. 20,000 ஆகும். இந்த வரம்புகளுக்கு உட்பட்டு, பதிவு பெற்ற கரும்பு பயிரிடுவோரைப் பொறுத்த வரையில், ரூ. 15 ஆயிரம் வரையிலும், மற்றவர்களைப் பொறுத்த வரையில் ரூ. 10 ஆயிரம் வரையிலும், ஆள் பிணையத்தின் மீது கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் கடன் பெற உரிமையுள்ளவர்களாவர். உறுப்பினர்களின் நிகர சொத்து மதிப்பில்




எட்டில் ஒரு பங்கு வரை சங்கங்கள் கடன் வாங்கலாமென்றிருந்த மேல் வரம்பு இப்போது ஐந்தில் ஒரு பங்கு வரை வாங்கலாமென உயர்த்தப்பட்டுள்ளது.

### மும்முர உற்பத்தித் திட்டங்கள்

மேற்பட்ட முறைகளை முனைந்து மேற்கொண்டு உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன், புகையிலை, வாழை, வேர்க்கடலை, தென்னை, பருத்தி முதலிய வணிகப் பயிர்களுக்கென மும்முர உற்பத்தித் திட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளன. குடியானவர்களுக்கு வேண்டிய கடன் வசதியையும் ஏனைய வேளாண்மை உற்பத்தித் தேவை பொருள்களையும் வழங்குவதே மும்முர வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதில் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாகும்.

கிராம மக்கள் சேமித்து வைத்துள்ள தொகைகளைத் திரட்டுவதற்காக, கிராமப் பகுதிகளில் கிளைகளை ஏற்படுத்துவதற்கு மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. இம் மாநிலத்தில் நான்காவது திட்டக்காலத்தில் 16 மத்திய வங்கிகள் 100 கிளைகள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் 41 கிளைகள், 1966-67-ம் ஆண்டில் தொடங்கப் பட்டுள்ளன. 1967-68-ம் ஆண்டில் 20 கிளைகள் தொடங்குவதெனத் திட்டமிட்டிருக்க இதுவரை 10 கிளைகள் தொடங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிளைக்கும் மூன்றுண்டு வரை ரூ. 10 ஆயிரம் அரசாங்கம் நிதி உதவுயளித்து வருகிறது. மத்திய வங்கிகள் இக்கிளைகளை வைத்து வருவதற்காகவே இவ்வாறு ஆண்டுதோறும் படிப்படியாகக் குறையும் நிதி உதவியளிக்கப்படுகிறது.

### நீண்டகாலக் கடன் வசதிகள்

தமிழ்நாடு கூட்டுறவு மத்திய நில அடமான வங்கியும் அத்துடன் இணைந்துள்ள 105 ஆரம்பச் சங்கங்களும் இம் மாநிலத்திலுள்ள குடியானவர்களுக்கு நீண்ட காலக் கடன் வழங்கி வருகின்றன. 1966-67-ம் ஆண்டில் இந்த வங்கிகள், மொத்தம் ரூ. 3·79 கோடி கடன் வழங்கியுள்ளன. பரம்பிக்குளம், ஆளியாறு திட்டத்தின் கீழ் நிலமீட்பு நிதி உதவித் திட்டத்தின்படிக் கொடுக்கப் படுகிற கடனும் இதிலடங்கும். நடப்பாண்டாகிய 1967-68-ல் இயல்பான திட்டத்தின்கீழ் இந்த வங்கிகள் நீண்டகாலக் கடனை ரூ. 2·19 கோடி வழங்கியுள்ளன.

### கடன் வசதியைப் பயன்படுத்திக் கொள்ளுதல்

கடனுதவியளிக்கும் நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் உதவியை இயன்ற வரை முற்றிலும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதைக் கருதி அடுத்த ஆண்டிலிருந்து கிணறுகளை தோண்டுதல், விசை ஏற்றங்களை நிறுவுதல் ஆகியவற்றுக்கான கடன்களையும், நில அடமான வங்கிகள் மூலமாகவே வழங்குவதென முடிவு செய்யப் பட்டுள்ளது என்று முதல் அமைச்சர் அவர்கள் தமது நிதிநிலை அறிக்கை உரையில் தெரிவித்துள்ளார். 1968-69-ல் மத்திய நில அடைமான வங்கியின் கடன் பத்திரங்களில் அரசாங்கம் ரூ. 2 கோடி முதலீடு செய்யும். மத்திய நில அடைமான வங்கி அடுத்த ஆண்டில் கடன் பத்திரங்களை வெளியிட்டு ஏறத்தாழ 8·7 கோடி


ரூபாய் திரட்டும் என்றும், சிறு பாசனத் திட்டங்களுக்காக குறைந்தது ரூ. 6·7 கோடியாவது பயன்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**வணிகப் பண்டக சாலைகள்**

விலைவாசிகள் உயராமல் தடுக்கவும், பொது மக்களுக்கு முக்கியமான பொருள்கள் நியாய விலையில் கிடைக்கச் செய்வதற்காகவும் மொத்த வணிகப் பண்டகசாலைகளையும் ஆரம்பப் பண்டகசாலைகளையும் நிறுவுவது குறித்த திட்டம் 50,000-மும் அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையும் கொண்ட நகரங்களிலும், மாநகரங்களிலும் செயல் படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 29 மொத்த வியாபாரப் பண்டகசாலைகளும், 669 ஆரம்பப் பண்டகசாலைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

செயல்பட்டு வருகின்றன. இச் சங்கங்களின் பங்கு மூல தனத்திற்கும், கருவிகள் வாங்குவதற்காக அவற்றின் தொழில் மூலதனத்திற்கும் சேம நிதிக்கும் நிதி உதவி வழங்கப்படுகின்றது.

இம் மாநிலத்தில் 45 ஆரம்ப வீட்டு அடைமானச் சங்கங்களும், வீட்டு அடைமான மத்திய சங்கமொன்றும் செயல்பட்டு வருகின்றன. 1966–67-ம் ஆண்டில் இச் சங்கங்கள் ரூ. 99·98 லட்சம் அளவிற்கு கடன் வழங்கின. 1967–68-ம் ஆண்டில் 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையில் இவை ரூ. 60·80 லட்சம் அளவுக்கு கடன் வழங்கின. தமிழ்நாட்டு வீட்டு அடைமான மத்தியக் கூட்டுறவு வங்கியின் பங்கு மூலதனம் குறித்து அரசாங்கம் ரூ. 2 லட்சம் வழங்கியுள்ளது. வீட்டு அடைமான




இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகைகொண்ட நகரங்களிலும் மாநகர்களிலும் பல பொருள் அங்காடிகள் நிறுவும் திட்டம் 1966–67-ல் மேற்கொள்ளப்பட்டது. விலைவாசி உயராமல் தடுப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் 1966–67-ல் ஏற்படுத்த திட்டமிடப்பட்ட 6 அங்காடிகளில் 5 அங்காடிகள் தொடங்கப் பட்டன. தென் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் 1966–67-ல் ஓர் அங்காடி தொடங்கப்பட்டது. நடப் பாண்டில் வட சென்னையில் பல—பொருள் அங்காடி ஒன்று நிறுவப்படும். இது ஆறுவது அங்காடி ஆகும்.

1967–68-ல் பல பொருள் அங்காடிகள் நிறுவும் திட்டம் 1·50 லட்சம் முதற்கொண்டு 2·00 லட்சம் வரை மக்கள் தொகையுள்ள நகரங்களிலும், மாநகர்களிலும் செயல் படுத்தப்பட்டு வருகிறது. வேலூர், தஞ்சாவூர், கடலூர், திருநெல்வேலி, பாளையங்கோட்டை, தூத்துக்குடி, நாகர் கோயில் ஆகிய இடங்களில் பல பொருள் அங்காடிகள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் வேலூரில் உள்ள அங்காடி 1968 பிப்ரவரி 11-ம் தேதி முதற் கொண்டு செயல்படத் தொடங்கியுள்ளது.

**பின்தங்கியோர் நலனுக்காக**

சமுதாயத்தில் பின்தங்கியுள்ளோர் நலனுக்காக இம் மாநிலத்தில் 96 தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

மத்தியச் சங்கத்தில் முதலீடு செய்துள்ள தவணை வைப்புத் தொகையை ரூ. 50 லட்சம் வரையில் திருப்பிச் செலுத்தவும், ஆயுள் ஈட்டுறுதிப் பொறுப் பாண்மைக் கழகத்திடமிருந்து பெற்ற கடன்களை ரூ. 2 கோடி வரையில் திருப்பிச் செலுத்தவும் அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

கொள்முதல் பணிகளில் கூட்டுறவுச் சங்கங்களும் பங்கு கொள்கின்றன. ஆனால், இவை குறித்து திட்டவட்டமான இலக்கு எதுவும் முடிவு செய்யப்படவில்லை. ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களின் நிதி நிலைமை மனநிறைவு தரும் வகையில் இருந்து அவை எல்லா வசதிகளையும் பெற்றிருந்தால், நெல் கொள்முதல் வேலையில் அவை அரசாங்கத்தின் முகவர்களாக நியமிக்கப்படுகின்றன.

தஞ்சாவூர் மாவட்டத்தில், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கழகம் பெரிய அளவில் கொள்முதல் வேலையை மேற்கொள்கின்றது. 15 ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களும் 565 கிராமப் பிரிவுகளும் முகவர்களாக நியமிக்கப் பட்டுள்ளன. 1967-ம் ஆண்டில் இக் கூட்டுறவுச் சங்கங்கள் 1·10 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்தது. இந்த நெல்லின் மதிப்பு ரூ. 4·95 கோடியாகும். இதில் தஞ்சாவூர் மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட குறுவை நெல்லின் அளவு 95,102 டன் ஆகும்.

[கூட்டுறவு மானியக் கோரிக்கையின்போது, சட்டப்பேரவையின் முன் வைக்கப்பட்ட விவரக் குறிப்பிலிருந்து.]



G.N.—2A

# மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவோம்...

(மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா.)

"குடும்பக் கட்டுப்பாடு பற்றிய இக்கருத்தரங்கைத் தொடங்கி வைக்க என்னை அழைத்ததை நான் பெரியதொரு வாய்ப்பாகக் கருதுகின்றேன். சென்னை மருத்துவக் கல்லூரியில் இதனை ஏற்பாடு செய்த கருத்தரங்கு அமைப்பாளர்களை நான் பாராட்டுகின்றேன். இக் கருத்தரங்கில் பங்கு கொள்ளும் உறுப்பினர்கள், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு உருவான யோசனைகளை நல்குவார்கள் என நம்புகின்றேன்.

மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த இதயபூர்வமான முயற்சிகளும், விஞ்ஞான வழிமுறைகளும் பின்பற்றப் படாவிட்டால், ஐந்தாண்டுத் திட்டங்களால் ஏற்பட்டுள்ள, ஏற்படும் என நாம் எதிர்பார்க்கின்ற முன்னேற்றங்களால் பயன் எதும் விளையாது. நாட்டின் பொருளாதார முன்னேற்றம் குடும்பக் கட்டுப்பாடு பிரச்னையுடன் பின்னிப் பிணைந்துள்ளது.

## மாபெரும் பிரச்னை

குடும்பக் கட்டுப்பாடு என்ற பெயரிலிருந்தே அது குடும்பத்தை திட்டமிடுவது என்பது புலனாகும். இது தனி மனிதர்களின் பிரச்னையல்ல. அல்லது ஒரு குடும்பத்திற்கு மட்டுமோ, சமுதாயத்திற்கு மட்டுமோ உரிய பிரச்னையுமல்ல. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த மாபெரும் பிரச்னையாக இது வளர்ந்துள்ளது. நாட்டின் ஆட்சியாளர்களும், சமுதாயத்திலுள்ள நல்லறிஞர்களும் இந்தப் பிரச்னையைப் பெரிய அளவிலே சமாளித்தாக வேண்டியுள்ளது. சுகாதார நடவடிக்கைகளைக் கவனித்து வரும் மத்திய, மாநில அமைச்சகங்கள், பொதுச் சுகாதார அமைச்சகங்கள் என்ற பெயரை இதுவரை பெற்றிருந்தன. இப்பொழுது அவை பொதுச் சுகாதாரம் மற்றும் குடும்பக்கட்டுப்பாடு அமைச்சகங்கள் என வழங்கப்படுகின்றன. குடும்பக் கட்டுப்பாடு திட்டம் பெற்றுள்ள அதிமுக்கியத்துவத்தையே இது காட்டுகிறது.

அதிர்ஷ்டவசமாகவோ, துரதிருஷ்டவசமாகவோ குடும்பக் கட்டுப்பாடு கொள்கையையும், அதன் செயல் முறையையும் பொறுத்தவரை இதுவரை மத்திய அரசுக்கும் இந்த மாநில அரசுக்கும் இடையில் தகராறு எதுவும் ஏற்படவில்லை. பல்வேறு குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களின் அமலுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் பொழுது நமக்குரிய பங்கைச் சில சமயங்களில் உரிய நேரத்தில் பெற முடியாமல் போனதைத் தவிர, மத்திய அரசுக்கும் நமக்கும் தகராறு எதுவும் கிடையாது.


மாண்புமிகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு மிகுந்த ஆதரவளித்து வருவது உங்களனைவருக்கும் தெரிந்ததே. சுவைபடப் பேசும் சொல்லாற்றல் நிறைந்த அவர்கள், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் முக்கியத்துவத்தை, வாய்ப்பு நேரும்பொழுதெல்லாம் வலியுறுத்தத் தவறுவது இல்லை. 'சிவபெருமானே குடும்பக்கட்டுப்பாட்டைக் கடைப் பிடித்திருக்கிறார்; அதனால் தான் அவருக்கு இரண்டே பிள்ளைகள்' என்று அவர் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

> நாட்டை எதிர்நோக்கியுள்ள மிகப்பெரிய பிரச்னை, மக்கள் தொகைப் பெருக்கமாகும். அசுர வேகத்தில் பெருகிவரும் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி, தடுத்து நிறுத்த வேண்டியது, நாட்டின் நல்வாழ்விலே அக்கறைகொண்டுள்ள ஒவ்வொரு குடிமகனின் தலையாய கடமையாகும். மக்கள் தொகைப் பெருக்கமானது, கட்டுப்படுத்தப்படவில்லையென்றால், மக்களின் எதிர்கால நல்வாழ்வுக் காகச் செய்யப்படும் மற்ற முயற்சிகள் அத்தனையும் விழலுக்கிறைத்த நீராகிவிடும். இந்தக் கருத்தை, குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை வலியுறுத்திக் கூறும் மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சரின் உரை, இன்றுள்ள, நிலையில் அனைவரும் இதயத்தில் பதித்து வைத்துக்கொள்ளவேண்டிய ஒன்றாகும்.
>
> —ஆசிரியர்.

## தமிழக அரசின் அக்கறை

நாட்டில் மக்கள் பெருக்கத்தைக் கட்டுப் படுத்த நாம் இதய பூர்வமான முயற்சிகள் மேற்கொண்டு வருவதால்

நமக்கு இரண்டு நாடாளுமன்ற இடங்கள் குறைந்துவிட்டன என்று சிலர் சுட்டிக்காட்டுவதை நீங்கள் அறிவீர்கள். சட்டமன்றத்தில் உறுப்பினர் ஒருவர் இந்தக் கேள்வியைக் கேட்க, இவையெல்லாம் பொருட்படுத்தத் தேவையில்லாத சிறிய விஷயங்கள் என்று நம்முடைய முதலமைச்சர் பதிலளித்தார். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தும் அல்லது குடும்பத்தைத் திட்டமிடும் இப்பிரச்னையை, இந்த அரசு அமைச்சரவை துணைக்குழு அமைத்துக் கவனித்து வருகிறது, இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இன்று காலை குடும்பக் கட்டுப்பாடு அமைச்சரவை துணைக்குழு கூட இருக்கின்றது. அதில் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய பல்வேறு பிரச்னைகள் விவாதிக்கப்படுவதுடன், இந்தக் கருத்தைத் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் எடுத்துச் சொல்வதற்கான எதிர்காலத் திட்டங்களும் வகுக்கப்படும். குடும்பக் கட்டுப்பாடு கருத்தைத் திரைப்படங்கள், நடனங்கள், நாட்டுப் பாடல்கள் போன்றவற்றின் மூலம் மக்களுக்கு விளக்குவதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு புகழ் மிக்க திரைப்பட நடிகர்களை நம் முதலமைச்சர் இன்று அழைத்திருக்கிறார் என்பதையும் உங்களிடம் குறிப்பிட விரும்புகின்றேன்.



மகப்பேறு கட்டுப்பாடு என்பது இன்று உங்களது விவாதத்திற்குரிய பொருள் என்று நான் அறிகிறேன். இது கொச்சையாகக் 'கருத்தடை' என வருணிக்கப்பட்டு வந்தது. கருத்தடை என்றாலே பொதுமக்கள் முகம்சுளித்த காலம் இருந்தது. அதைப்பற்றி பேசுவது கண்ணியக் குறைவாகவும் கருதப்பட்டது. 'கருத்தடை' என்ற சுவையற்ற சொற்றொடருக்குப் பதிலாகக் 'குடும்பக்கட்டுப்பாடு' என்ற சொற்றொடர் வழக்கிற்கு வந்தது. கருத்தடையைக் கைக்கொள்வது பண்பற்றது, சமயத்திற்கு விரோதமானது எனக் கருதப்பட்ட காலம் இருந்தது, சமயத் தலைவர்கள் இதனை வன்மையாகக் கண்டித்து, அது கடவுளுக்கு விரோதமானது என்று சொன்னார்கள். கடவுள் குழந்தையைக் கொடுப்பதாகவும், அதைக் கட்டுப்படுத்துவது கடவுளுக்கு விரோதமான செயல் என்றும் கூறப்பட்டது. மனிதன் பகுத்தறிவுள்ளவன். அவனது பகுத்தறிவே அவனுக்குக் குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது. மனம்போன போக்கில் உடல் இன்பம் துய்த்து, குழந்தைகளைப் பெற்றுக்கொண்டே போவதற்குத்தான் இல்லை என்பதனை அவன் உணர்ந்துள்ளான். இன்று குடும்பக் கட்டுப்பாடு, அதன் ஆதரவாளராக இருந்தாலும் சரி, எதிர்ப்பாளராக இருந்தாலும் சரி, அனைவராலும் பேசப்படும் சொற்றொடராக இருக்கின்றது. அதன்பால் காட்டிய வெறுப்பு மெல்ல மறைந்து வருகிறது.

மேதைகள் உள்ள இந்த அவையில் மக்கள் தொகைப் புள்ளி விவரங்களைச் சொல்லவேண்டிய அவசியமில்லை என்று கருதுகின்றேன். அண்மை ஆண்டுகளில் மக்கள் தொகை இரு மடங்காகவும், மும்மடங்காகவும் பெருகி வந்துள்ளது யாவரும் அறிந்த உண்மையாகும். மக்கள் தொகை இதே வேகத்தில் பெருகுமாறு விட்டுவிட்டால், உலகில் மக்கள் நிற்பதற்கு மட்டுமே இடம் கிடைக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டுவிடும் என்று சொல்கிறார்கள்.

இந்திய அரசியல் அமைப்பின பீடிகையில்,

"இந்தியாவின் மக்களாகிய நாம், இந்தியாவை ஒரு முழு அதிகார ஜனநாயகக் குடியரசாக அமைதது, அதன் குடிகள் அனைவருக்கும்—

சமூகம், பொருளாதாரம், அரசு—இவற்றில் நீதியும், எண்ணம், வெளியீடு, கோட்பாடு, சமயம், வழிபாடு—இவற்றில் சுதந்திரமும்,

தகுதி, வாய்ப்பு—இவற்றில் சமத்துவமும்,


தனியொருவரின் கண்ணியமும் நாட்டுமக்களின் ஒருமைப்பாடும் நிலைபெறும் வண்ணம் அவர்கள் அனைவரிடமும் சகோதரத்துவம் ஓங்குமாறு செய்யவும் உறுதி பூண்டுள்ளோம்"

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நியாயமான வரம்புகள்**

இந்த உயரிய இலட்சியங்களை அடைவதற்கு, திட்டமிட்ட சிறு குடும்பமே நமக்கு இருக்க வேண்டும். அரசியல் அமைப்பு மக்களுக்கு அடிப்படை உரிமைகளை வழங்கியுள்ளது. அவை மிகப் புனிதமானவையாகப் போற்றப் படுகின்றன. இந்த அடிப்படை உரிமைகள், அல்லது அரசியல் அமைப்பில் கண்டுள்ள சில சுதந்திரங்களுக்குக்கூட, சில நியாயமான வரம்புகள் இருக்கின்றன. இதைப்போலவே, நாட்டின் நலனையும் நல்வாழ்வையும் முன்னிட்டு மனிதன் தனது நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு, குடும்பத்தைத் திட்டமிடக் கடமைப்பட்டுள்ளான்.

நம்முடைய நாட்டின் மக்கள் தொகை ஆண்டுதோறும் 12 மிலியன் என்ற அளவில் அபரிமிதமாகப் பெருகி வருகிறது என்பதை உங்களுக்கு நான் எடுத்துச் சொல்ல வேண்டிய தேவையில்லை. கடந்த முப்பதாண்டுகளில் அரிய மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டதாலும், நல் வாழ்வுத் திட்டங்கள் அமுலாக்கப்பட்டதாலும் இறப்பு விகிதம் குறைந்தது. ஆனால் பிறப்பு விகிதம் குறையவில்லை. இதனால் மக்கள் தொகைப் பெருக்கப் பிரச்னை மிகப் பயங்கரமாக உருவெடுத்துவிட்டது. 1961-ல் இந்தியாவின் மக்கள் தொகை 439 மிலியன். 1967–68-ல்




இது 514 மிலியனாக இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது. இந்த ஆறுண்டுக் காலத்தில் மட்டும் 75 மிலியன் மக்கள் அதிகரித்திருக்கிறார்கள். ஆண்டொன்றுக்கு நாட்டில் 2·46 சத விகித மக்கள் பெருகி வருவதாகச் சொல்கிறார்கள்.

**தமிழகத்தின் சாதனை**

தமிழகத்தைப் பொறுத்தவரை, 1956-ல் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து அதனைச் செயல்படுத்துவதில் நாம் பின்னடையவில்லை. அலுவலர்களின் ஊக்கமிகு முயற்சியாலும், பொதுமக்களின் ஒத்துழைப்பாலும் 1967 டிசம்பர் இறுதி வரை சுமார் 6·5 லட்சம் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

மக்கள் ஜாதி, சமய வேறுபாடின்றி, தங்கள் குடும்பத்தின் நல்வாழ்வும், குழந்தைகளின் ஆரோக்கியம், ஆனந்தம் ஆகியவையும் குடும்பத்தின் அளவையொட்டித்தான் இருக்கின்றன என்பதை அதிக அளவில் உணர்ந்து வருவதால்தான், இத்தகைய சிறந்த சாதனையை அடைய முடிந்திருக்கிறது. அறுவைச் சிகிச்சை, லூப் போன்ற பல்வேறு குடும்பக் கட்டுப்பாடு முறைகளை இங்கே விவாதிக்க நான் விரும்பவில்லை. அரசு எந்தவொரு குறிப்பிட்ட முறையை எதிர்க்கவோ, ஆதரிக்கவோ இல்லை. எல்லா வகை முறைகளையும் ஊக்குவிக்கவே விரும்புகின்றது. குடும்பக் கட்டுப்பாடு திட்டம் வெற்றியடைய அது மக்கள் தாமாக விரும்பி ஏற்றுக் கொள்வதாக இருக்க வேண்டுமே தவிர, கட்டாயம் எதுவும் இருக்கக்கூடாது. அரசு வழங்கும் சிறு தொகை ஓர் ஊக்குவிப்புதானே தவிர, வாசெக்டமி போன்றவற்றை மக்கள் மேற்கொள்ள அவர்களைக் கவர்ந்திழுப்பதற்கான பணம் அல்ல. அறுவைச் சிகிச்சை செய்கிறவர்கள் பக்கம் அரசு இருக்கிறது. அவர்களது உண்மையான நடவடிக்கைகளில் அரசு அவர்கள் பக்கம் இருந்து வரும்.

**கட்டாயமே கூடாது**

மக்கள் தொகைப் பெருக்கத்தை ஒரு நியாயமான காலத்திற்குள் நிலைப்படுத்தி, குறைந்த இறப்பு விகிதத்திற்குப் பதிலாகக் குறைந்த பிறப்பு விகிதத்தை அடைவதே குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் லட்சியமாகும். தற்போது திட்டமிடப்பட்டுள்ள குடும்பக் கட்டுப்பாடு திட்டம் முற்றிலும் விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொருவரும் அதனை ஏற்றுக்கொள்வதைப் பொறுத்தே அதன் வெற்றி அமைந்துள்ளது. மக்களுக்கு இதனை எடுத்துச் சொல்லி, ஏதாவது ஒரு முறையைக் கைக்கொண்டு, குடும்பக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளச் செய்வதே இப்போதைய உடனடித் தேவையாகும்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டம் வெற்றியடைவதற்கு, மகப்பேற்றுக்கான விஞ்ஞான அடிப்படை உண்மைகளை மேலும் அறிந்து கொள்வதும், அவற்றைப் பற்றித் தகுதி வாய்ந்த மருத்துவ அலுவலர்கள் மூலம் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்வதும் அவசியமாகும்.




இந்தியாவிலுள்ள மருத்துவக் கல்லூரிகள் இந்தத் திட்டத்தில் முக்கியப் பங்கு ஏற்றுப் பணியாற்ற வேண்டும்.

இம்மாதிரி கருத்தரங்குகளின் நடவடிக்கைகள், மக்கள் பெருக்கத்திற்கு முக்கிய இடங்களாக விளங்கும் சென்னை நகரக் குடிசைப் பகுதிகள், தொலைதூரக் கிராமங்கள் ஆகியவற்றை எட்டவேண்டும்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் பல்வேறு அம்சங்கள் பற்றி உங்களிடையே விவாதித்து, இந்தத் தேசீயப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதில் எங்களுக்கு வழி காட்டுவீர்கள் என நம்புகின்றேன். ”

**[1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ம் தேதி அன்று சென்னை மருத்துவக் கல்லூரியில் ‘குடும்பக் கட்டுப்பாடு’ கருத்தரங்கினைத் துவக்கிவைத்து, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை]**

# "வினை நலம் வேண்டிய எல்லாம் தரும்"

(மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி)

**[13—3—68 அன்று, 1968–69-ம் ஆண்டு சமுதாய வளர்ச்சி, ஊராட்சி, நகராட்சி மானியங்கள் கோரிக்கைகளை, சட்டப் பேரவையின் முன் வைத்து, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரையின் சாரம் இது. கிராம வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டிருப்போர் அனைவரும் தெரிந்துகொள்ளவேண்டிய அரிய விஷயங்களும், விவரங்களும் அமைச்சர் அவர்களின் பேச்சில் அடங்கியுள்ளன. படித்துப் பயன்பெற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்—ஆசிரியர்.]**

"நாட்டின் பெருமைக்கு இயற்கை வளத்தினும் ஊக்கமிக்க மக்கட் சிறப்பே பெருங் காரணமாகும். மக்களைப் பொதுப் பணிக்கு ஊக்குவிப்பதான கிராமக் குடியாட்சி முறை தமிழக மக்களுக்குப் புதியதல்ல. பண்டை நாள் தொட்டு இற்றை நாள் வரை தமிழகத்தில் கிராமக் குடியாட்சி நல்ல முறையில் வளர்ந்து, சமுதாயத்தின் நல்-வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்து வந்திருக்கிறதென்ற உண்மையைத் தமிழக வரலாற்றுப் பொன்னேடுகள் நமக்குத் தெரிவிக்கின்றன, சங்க நூல்களில் 'மன்றம்', 'பொதியில்' எனக் குறிக்கப்பட்டவை பின்னர்ஊராட்சிகளாக உருப் பெற்றுப் பெரும் புகழுடன் செயல்பட்டு வந்தன. இடையிலேற்பட்ட சில அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களால் அவ்வூராட்சிகளின் புகழ் குடத்திலிட்ட விளக்குபோல் மங்கத் தலைப்பட்டது. அதனை குன்றின் மேலிட்ட விளக்காக ஆக்க வேண்டுவது நம் தலையாய கடமையாகும்.

### தமிழகம் வழிகாட்டியாகத் திகழவேண்டும்

விடுதலை பெற்ற நாட்டின் உண்மையான வளர்ச்சிக்குக் கிராம வளர்ச்சியே அடிப்படை என்ற பேருண்மையை காந்தியடிகள் வலியுறுத்தினார்கள். கிராமக் குடியாட்சிகள் வேரும் விழுதுமாக நிலைபெற்று நல்ல முறையில் அமைந்து செயலாற்ற முற்பட்டாலன்றி, நமக்குக் கிடைத்துள்ள விடுதலை, குடியாட்சி என்பதெல்லாம் பேச்சளவிலும் ஏட்டளவிலேயுமே நின்றுவிடும். குடியாட்சி இந்நாட்டில் நல்ல முறையில் நிலைத்திருக்க வேண்டுமென்று நினைக்கின்ற அனைவரும் கிராமக் குடியாட்சிகள் சீரிய முறையில் இயங்கப் பாடுபடவேண்டியது இன்றியமையாததாகும். இத்துறையில், தமிழகம் நம் நாட்டிற்கு ஒரு வழிகாட்டியாக திகழவேண்டுமென்பது என் அவா. நம் அனைவருடைய அவாவும் அஃதேயென்பது பற்றி எனக்கு ஐயமில்லை.

சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் காரணமாகத் தமிழகத்தில் இன்று 12,407 ஊராட்சி மன்றங்களும், 457 பேரூராட்சி மன்றங்களும், 374 ஊராட்சி ஒன்றியங்களும், 14 நகரியங்களும், 88 நகராட்சிகளும், சென்னை மாநகராட்சி மன்றமும் சிறப்புறச் செயல்பட்டு

வருகின்றன. இவ்வமைப்புகள் ஆற்றி வருபவை அரும்பெரும் பணிகளாகும். மக்கள் வாழ் வாங்கு வாழ்வதற்கான வழிகள் வகைப்படுத் தப்பட்டு ஊராட்சிகளில் நிறைவேற்றப்படு கின்றன.

தென்னார்க்காடு மாவட்டம் கல்ராயன்மலைப் பகுதியில் உள்ள பழங்குடி மலைவாழ் மக்களின் நலனுக்காகத் தனியான வளர்ச்சி வட்டாரம் ஒன்றினை துவக்க அரசு ஆலோசனை செய்து வருகிறது. இம்மாதிரியான வளர்ச்சி வட்டா ரங்கள் சேலம் மாவட்டம் கொல்லிமலையிலும், ஏற்காடு மலையிலும் உள்ளன. நடப்பு ஆண்டில் இவ்வட்டாரங்கட்காக 19·81 இலட்சம் ரூபாய்கள் செலவழிக்கப்பட்டுள்ளன.




இந்த மானியத்தில் சமுதாய வளர்ச்சித் திட்டம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,61,73,600 மானியம் கோரியிருப்பினும் மொத்தமாக ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக ரூ. 52 கோடியே 62 இலட்சம் செலவாகுமென்று இவ்வாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் கணக்கிடப்பட்டுள்ளது. இது இவ்வாண்டின் மொத்த நிதி ஒதுக்கத்தில் 21 சத வீத மாகும்.

### உயிர்நாடிகளான பணிகள்

ஊருக்குத் தேவையான நல்ல ஒளியமைத் தல், ''அற்றம் காக்கும் கருவி'' யாய அறிவைப் பரப்ப நல்ல பள்ளியமைத்தல், பாலம்-பாசன வசதி செய்தல், மருத்துவ உதவியளித்தல், மண மகிழ் மன்றம் நிறுவல், குடிதண்ணீர் வசதியளித்தல், வானொலி நிலையம் அமைத்தல், விதையளித்தல், நல்ல உரம் அளித்தல், உழவர்க்குத் தேவையான உதவி யளித்தல் போன்ற உயிர் நாடிகளான பணிகளை ஊராட்சிகள் மேற்கொண்டுள்ளன.


ஆரம்பக் கல்வியைப் பரப்புவது ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொண்டுள்ள வளர்ச்சித் திட்டங்களில் மிகப் பெரியதாகும். ஆரம்பக் கல்விக்காக 2,274 இலட்சம் ரூபாய் இவ் வாண்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகச் செலவு செய்யப் படும் தொகையில் இது 43 சத வீதமாகும். இத்துறையில் 23,000 ஆரம்பப் பள்ளிகளும், 4,800 உயர் தொடக்கப் பள்ளிகளும் உள்ளன. இவற்றுள் 11,000 பள்ளிகளுக்கு மட்டுமே கட்டிடங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இன்று தமிழகத்தில் 37 இலட்சம் சிறுவர்களுக்கு 1,14,600 ஆசிரியர்கள் ஊராட்சிப் பள்ளிகளில் அறிவூட்டி வருகின்றனர். தரமான கல்வியைப் பரப்பும் வகையில் பல மானியத் திட்டங்கள் தொடக்கப் பள்ளிகட்கு அளிக்கப்பட்டுள்ளன.

### நாடு போற்றும் நண்பகல் உணவுத் திட்டம்

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்பட்டதினால் நண்பகல் உணவுத் திட்டத்தை செவ்வனே நிறைவேற்றுவதற்கு வாய்ப்புக் கிடைத்தது. 1957—58-ம் ஆண்டில் தொடக்கப்பட்ட இத்திட்டத்தின்கீழ் உணவு வழங்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் உயர்ந்து வருகின்றது. அரிசன நலப் பள்ளிகள், சென்னை மாநகராட்சிப் பள்ளிகள் உட்பட 30,000 பள்ளிகளில் இத் திட்டம் செயல்பட்டு வருகின்றது. இப்பள்ளி களில் 18·27 இலட்சம் பிள்ளைகள் நண்பகல் உணவு பெறுகின்றனர். பெருமளவில் முதன் முதலாக 7·30 இலட்சம் ரூபாய் இப்பள்ளி களுக்குத் தளவாட மானியமாக 1967—68-ம் ஆண்டில் கொடுக்கப்பட்டுள்ளது. இம் மானியம் தொடக்கப்பள்ளி ஒன்றிற்கு ரூ. 300 வீதமும், உயர் தொடக்கப் பள்ளி ஒன்றிற்கு ரூ. 1,000 வீதமும் அளிக்கப்படும். இதன் மூலம் 1,122 தொடக்கப் பள்ளிகளும், 394 உயர் தொடக்கப் பள்ளிகளும் பயன்பெறும்.

ஆண்டுதோறும் வழக்கமாகச் சமுதாய வளர்ச்சி நிதியிலிருந்து பள்ளிக் கட்டிடங்கட் கென ஒதுக்கப்படும் தொகையைத் தவிர, இவ் வாண்டில் கல்வி மானியத்திலிருந்து பள்ளிக் கட்டிடங்கள், ஆசிரியை குடியிருப்பு வீடுகள்

கட்டுவதற்கும், தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கும் 27·65 இலட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்நிதியைச் செவ்வனே பயன்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் பொதுமக்கள் ஒத்துழைப்புடன் செயலாற்றி வருகின்றனர். ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் கல்வித் திட்டங்கள் நிறைவு பெற ஆவன செய்ய வேண்டி துவக்கப்பட்ட கல்விப் பிரிவு இதற்கான வழி வகைகள் செய்து வருகிறது, 'என்னரும் தமிழ்நாட்டின்கண் எல்லோரும் கல்வி கற்றுப் பன்னறுங் கலைஞானத்தால்.




பராக்கிரமத்தால், அன்பால் உன்னத இமய மலை போல் ஓங்கிடும் கீர்த்தியெய்தி' இன்புற்று வாழும் நிலை விரைவில் மலரக் கல்வி வளர்ச்சியை மேலும் வளப்படுத்துவோமாக !

இவ்வாண்டில் கிராமப் பணிகள் திட்டத்திற்கென ரூ. 182·22 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1967 செப்டம்பர் 30-ம் தேதி முடிய 2,700 மேல் நிலை நீர்த் தொட்டிகள், 48,900 குடிநீர்க் கிணறுகள், 17,000 மைல்களுக்கு மேற்பட்ட இணைப்புச் சாலைகள் ஆகியவை அமைக்கப்பட்டிருக்கின்றன. பாதை பராமரிப்புக்கென ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் நபர் ஒருவருக்கு 40 காசு என்ற விகிதத்தில் கணக்கிடப்பட்ட ''சாலைகள் மானியம்'' தனியாக வழங்கப்படுகிறது. இதற்காக இவ்வாண்டில் 110 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் சுமார் 29.000 சிறு பாசன ஆதாரங்கள் உள்ளன. இவற்றில் சுமார் 23,800 ஆதாரங்களைப் பேணி வரும் பொறுப்பினை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொண்டுள்ளன. இதற்காக ''தல பாசன மானியங்கள்'' என்ற தலைப்பின்கீழ் இவ்வாண்டு ரூ. 52·83 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது· சாலைகளைப் பேணுவதற்காக ஊராட்சிகள் அரசினரிடமிருந்து நிதி உதவி பெற, தமிழக ஊராட்சிச் சட்டத்தில் வழிவகை செய்யப்படவில்லை. இது குறித்து அரசினரிடம் பல முறையீடுகள் செய்யப்பட்டு வந்துள்ளன. இவற்றிற்கிணங்க பேரூராட்சி மன்றங்களில் புழுதியற்ற மேற்பரப்பையுடைய சாலைகளை அமைப்பதற்காகும் செலவில் பாதியை மானியமாக வழங்கும் பொருட்டு, முதல் முறையாக வரவு-செலவுத் திட்டத்தில் ஐந்து இலட்சம் ரூபாய்கள் இவ்வாண்டு ஒதுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 1967-ல் வீசிய புயலினாலும், ஏற்பட்ட வெள்ளத்தினாலும் சாலைகள் பெரிதும் சேதமடைந்த மாவட்டங்களில் ஊராட்சி ஒன்றியச் சாலைகளையும், ஊராட்சிகளின் சாலைகளையும் செப்பனிடுவதற்கு ஊராட்சிகளுக்கு அரசு சிறப்பு மானியம் வழங்கியுள்ளது.

### உணவு உற்பத்தி

வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகுமென்று 1958-ம் ஆண்டு தமிழக ஊராட்சிச் சட்டத்தின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசின் வேளாண்மை மானியங்களைப் பொறுத்த வரை, ஊராட்சி ஒன்றியங்களின் வேளாண்மைத் திட்டங்கள், ''இன்றியமையாதவை , ''விருப்பத் திட்டங்கள்' என இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மேலும் ஊராட்சி ஒன்றியங்கள் தங்களுடைய மற்றத் திட்டங்களை மேற்கொள்ளுவதற்காக ''குறிப்பிட்ட பகுதிகளுக்கான வேலைகள்'' என்பதன் கீழும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வேளாண்மை மானியத்தின்கீழ் மீனள வளர்ச்சிக்காகத் தமிழகத்திலுள்ள ஒன்றியங்கள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதனால் மீனளத் திட்டங்கள் நன்கு செயல்பட்டு வருகின்றன.

மருத்துவ அகங்களை நிறுவுவதும் அவற்றைப் பேணி வருவதும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். இதற்காக அரசு ஒன்றியங்களுக்கு மானியம் வழ்ங்குகிறது.

தாய்-சேய் நல விடுதிகள் பல அமைக்கப்பட்டு அவை நன்கு பணியாற்றிவருகின்றன. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை ஊராட்சி ஒன்றியங்கள் செவ்வனே செயல்படுத்த இவை உதவியாக இருக்கின்றன.

கிராம மனித உழைப்புத் திட்டம் தமிழகத்தில் 72 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்பட்டு வருகின்றது.

#### முதலமைச்சரின் பிறந்த நாள் காணிக்கை

ஆண்டுதோறும் திட்டங்கள் தீட்டி அவற்றை நிறைவேற்றித் தங்களது வருமானத்தைப் பெருக்கும் வகையில் ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படவேண்டுமென்பது எனது கருத்து. இதனைக் கருத்தில் கொண்டு, 1967-ம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நன்னாளன்று ஓராண்டுத் திட்டங்களாக பல திட்டங்களை வகுத்துள்ளோம். விசைப்பொறியுடன்கூடிய சமுதாயப் பாசனக் கிணறுகள் தோண்டுதல், டிராக்டர்கள், டில்லர்கள், போன்ற விவசாயக் கருவிகளை வாங்கி அவற்றைக் குறைந்த கட்டணத்தில் விவசாயிகட்குக் கிடைக்க வழி செய்தல், பள்ளிகளில் காய்கறித் தோட்டங்கள் அமைத்தல் போன்ற சிறந்த பணிகளை உள்ளாட்சித்துறை இவ்வாண்டின் திட்டங்களாக மேற்கொண்டுள்ளது. இவைகளை நிறை மனதுடன் உரிய காலத்தில் செய்து முடிப்பதோடு நில்லாமல், மேலும் தொடர்ந்து பல ஓராண்டுத் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்த உங்கள் மேலான ஒத்துழைப்பு தூண்டுகோலாயிருக்க வேண்டும் என விரும்பி வேண்டி விழைகின்றேன்.

நாம் செய்யவேண்டிய வேலைகள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே செல்கின்றன. இதற்கு வேண்டிய நிதி வசதி அதே அளவில் பெருகாததினால், நம் திட்டங்கள் சில பாதிக்கப்படுகின்றன. மாநில அரசுக்கு மைய அரசின் உதவி ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வருவது நீங்கள் அறியாதது அல்ல. இத்தருணத்தில், ஊராட்சி நிறுவனங்கள் தங்கள் நிதிப் பெருக்கத்திற்கான வழிவகைகளை ஆராய்ந்து கருத்தூன்றி செயல்பட வேண்டும். வருமானத்தைப் பெருக்கும் திட்டங்களை ஊராட்சிகள் அமைத்து நிதிப் பற்றுக்குறையை நீக்க வழி முறை காண வேண்டும். இப்பணியில் பொதுமக்கள் பெரிதும் துணை நிற்பார்களென்று நம்புகிறேன்.

தமிழகத்தில் இன்று 88 நகராட்சி மன்றங்களின் மொத்த வருமானம் 1965—66-ம் ஆண்டுக் கணக்குகளின்படி 12½ கோடி ரூபாய் அளவில் உயர்ந்துள்ளது. இத்துடன் இம் மாநில அரசு மானியம் கடன் மூலமாக இரண்டு கோடியளவில் கொடுத்துள்ளது.

#### நகராட்சிகளின் வருவாய் பெருக....

பொதுவாகக் கூறுமிடத்து, உள்ளாட்சி மன்றங்கள் அனைத்தும் நிதிநிலைக்கேற்பத் தம் பணிகளை திறம்பட செயலாற்றி வருகின்றன. இன்னும் ஆற்ற வேண்டிய பணிகள் பலப்பல. இவற்றைச் செயல்படுத்த வேண்டுமானால் நிதி வசதி பெருக வேண்டியதாயிருக்கிறது. குடி தண்ணீர், வடிகால் துறைகளில் மானியம் வழியாக மற்ற ஆட்சித் துறைகளுக்கு அளித்துள்ள சலுகைகளை நகராட்சிகளுக்கும் அளிக்க மைய அரசு ஒப்புக்கொண்டால், நகராட்சி மன்றங்களின் நிதி நிலைமை குறிப்பாக முன்னேற்றமடையும் என்பது என் கருத்து.

நகராட்சி நிர்வாகத்துடன் நான் தொடர்பு கொள்ளத் தொடங்கியபின் கடந்த ஓராண்டில் பல நகராட்சிகளின் வேலை முறைகளை கண்டறிகின்ற வாய்ப்பு எனக்குக் கிட்டியுள்ளது. நாளங்காடிகள், பேருந்து நிலையங்கள், லாரி நிற்குமிடங்கள், கடைகள் போன்ற ஆதாயம் தரக்கூடிய முயற்சிகளில் பல நகராட்சி மன்றங்கள் ஆர்வம் காட்டுகின்றன. இத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி கண்டு நான் வியப்படைகிறேன். நகராட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற பணிகளில் ஒன்றான கல்வி வளர்ச்சியைப் பொறுத்தவரையில் நிதி நிலை பற்றுக்குறையினால் இம் மாநிலத்தில் நகராட்சிகள் பெரிய முன்னேற்றத்தை முற்றிலும் அடைய முடியாத சூழ்நிலை உள்ளது. நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்று நகராட்சி மன்றங்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. இந்த கோரிக்கைகளை அரசு ஆழ்ந்த கவனத்துடன் பரிசீலனை செய்து வருகிறது.

நகராட்சி மன்றங்கள் நெடுங்காலமாக வேண்டி வந்ததற்கு இணங்க, நகராட்சி சாலைகளைப் பேணுவதற்கென ரூ. 7·5 இலட்சம் ரூபாய் தனி மானியம் (ad hoc grant) வழங்கவும் அரசு முதன் முதலாக முடிவு செய்துள்ளது.

தற்போது நகராட்சித் துறையில் ஆணையர்களும், பணித்துறை அலுவலரும், சுகாதாரத் துறை அலுவலரும்தான் அரசின் ஊழியர்களாக—ஒய்வு ஊதியம் பெறும் ஊழியர்களாக—பணிபுரிந்து வருகின்றனர்: இன்னும் பல்வேறு சிப்பந்திகள் இதே போல அரசினர் அலுவலர்களாக மாற்றப்படவேண்டும் எனும் கோரிக்கை பல நாட்களாக இருந்துவருகிறது. இதுவும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

''துணை நலம் ஆக்கந்தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்''

என்ற பொய்யாமொழியின்படி வினை நலம் பெற்று ''எண்ணிய எண்ணியாங்கு எய்தும் நிலையை நாம் பெறுவதற்கு முயற்சிப்போமாக.

நான் பொறுப்பேற்றுக்கொண்ட ஓராண்டு காலமாக எனது ஆக்கப் பணியில் ஊக்கமுடன் ஒத்துழைத்த நகராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள், ஊராட்சித் தலைவர்கள் மற்றுமுள்ள அலுவலர் பலருக்கும் எனது உளங் கனிந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

''எல்லார்க்கும் தேசம், எல்லார்க்கும்
உடமைஎலாம் !
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும்
ஆகுகவே !
எல்லார்க்கும் கல்வி சுகாதாரம்
வாய்ந்திடுக !
எல்லார்க்கும் நல்ல இதயம்
பொருந்திடுக !

**[ 1968--69-ம் ஆண்டு சமுதாய வளர்ச்சி, ஊராட்சி, நகராட்சி மானியங்கள் கோரிக்கைகளை சட்டப் பேரவையின் முன்வைத்து, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரையின் சாரம்.]**

---

**த**மிழ்நாட்டின் மூலைமுடுக்குகளில் உள்ள எல்லாக் கிராமங்களிலும் பணியாற்றுகின்ற ஊராட்சிகள், நூல் நிலையங்கள், செய்தி நிலையங்கள், பள்ளிக்கூடங்கள், மகளிர் மன்றங்கள் முதலிய பல்வேறு நிறுவனங்களுக்கெல்லாம் செல்லும் "கிராமநலம்" இதழில், கிராம மக்களுக்குத் தேவையான பொருள்கள் பற்றிய தகவல்களும், கிராமங்களில் தயாராகும் பண்டங்கள் பற்றிய விவரங்களும் விளம்பரங்களாக ஏற்றுக்கொள்ளப்படும். ஏப்ரல் 1968 இதழிலிருந்து "கிராமநலத்"தில் விளம்பரங்கள் வெளியிடுவதென தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

## "கிராமநலம்" விளம்பரக் கட்டண விவரம்

| | | அவ்வப்போது வெளியிடப்படும் விளம்பரங்களுக்கு. (1) ஒவ்வொரு இதழுக்கும். ரூ | குத்தகையாக ஒரே இட அளவிற்கு (குறைந்தது 12 விளம்பரங்கள்). (2) ஒவ்வொரு இதழுக்கும். ரூ. |
|---|---|---|---|
| **இரண்டாவது, மூன்றாவது அட்டைப் பக்கங்கள் (ஒரே வண்ணத்தில்)** | | | |
| முழுப் பக்கம் | .. | 420 | 815 |
| அரைப் பக்கம் | .. | 215 | 165 |
| **நான்காவது அட்டைப் பக்கம் (இரண்டு வண்ணங்களில்)** | | | |
| முழுப் பக்கம் | .. | 450 | 825 |
| அரைப் பக்கம் | .. | 230 | 170 |
| **உள்பக்கம்—** | | | |
| முழுப் பக்கம் | .. | 400 | 300 |
| அரைப் பக்கம் | .. | 210 | 160 |

## சிறுகதை




# மதுவிலக்கு

(திரு. வி.எஸ். சுப்பையா)

[அனைத்திந்திய மதுவிலக்கு மாநாடு, தமிழகத்தில் 1968, ஏப்ரல் 12, 13. 14 தேதிகளில் சிறப்புடன் நடைபெற்றது. இந்தியாவிலேயே தமிழகம், குஜராத் ஆகிய இரண்டு மாநிலங்களில் மதுவிலக்குச் சட்டமானது முழுமையாக அமுல் நடத்தப்படுகிறது. டாக்டர் சுசீலா நய்யார், இராஜாஜி, திரு- காமராஜ் ஆகியோர் பங்குகொண்ட இம்மாநாட்டை, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னைப் பல்கலைக் நூற்றுண்டு விழா மண்டபத்தில் துவக்கிவைத்து, அனைத்திந்திய மாநிலங்களுக்கும் வழிகாட்டும் வகையில் அரியதொரு சொற்பொழிவாற்றினுர், (மாநாடு பற்றிய படங்களை இந்த இதழில் காணலாம்.]

இதை ஒட்டி, மதுவிலக்குச் சட்டம் அமுல் வராத காலத்தில் தமிழகத்தில் நடைபெற்றுவந்த நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு சுவையான ஒரு சிறு கதையை இங்கே வெளியிடுகிறேம். இந்தச் சிறுகதையின் ஆசிரியர் திரு வி. எஸ். சுப்பையா, ஐ.ஏ,எஸ். அவர்கள், தொழில், தொழிலாளர், வீட்டுவசதித்துறை இணைச் செயலாளர் (Additional Secretary) ஆவார். இவருடைய இலக்கியப் படைப்புகள் வானெலி, தனி நூல்கள், பத்திரிகைகள் வாயிலாக தமிழ் மக்களிடையே நன்கு பரவியுள்ளன

—ஆசிரியர்,]

**தா**மிரபரணி தன் தடக்கைகளை எட்டிய மட்டும் தொட்டுச் செழிப்பித்த தீரத்தில் உள்ளது மாவடி கிராமம். ஏறக்குறைய நூறு தலைக் கட்டுகள் கொண்டது. அந்த வட்டாரத்திலுள்ள கிராமங்களில் எல்லாம் மாவடி கிராமத்தார் தான் வறுமை இன்னதென்றே அறியாமல் வாழ்ந்தனர்.

ஆற்றுப்பாய்ச்சலில் அறுவடை நடக்கும் போது, ஏரிப்பாய்ச்சலில் நடுகை மும்முரமாக இருக்கும். நதி தீர நஞ்சைகளில் புழுதி உழவு நடந்து கொண்டிருந்தால் ஏரிக் கழனிகளில் களைபறியில் பெண்கள் ஈடுபட்டிருப்பார்கள். ஆக, ஆண்டு முழுவதிலுமே மாவடிவாசிகளுக்கு உழைப்பு இருந்துகொண்டே இருக்கும்.

களைபறி முடிந்து சூல்கொண்ட நெற்பயிர் இப்போதோ சற்று நேரத்திலோ கதிர்களை ஈன்று விடுவேன் என்று விம்மிக்கொண்டிருக்கும் சமயத்தில் கண்ணுக்கு எட்டியதூரம் கழனிக் காட்டைப் பார்த்தாலோ அப்பப்பா அந்தக் காட்சியே ஒரு தனி.

இந்தக் காட்சியை எல்லாம் நன்ருய் அனுபவிக்க மாவடி கிராமத்திலுள்ள ஜில்லா போர்டு பள்ளிக் கூடத்துக்கு ஆசிரியராக வந்து சேர்ந்தான் இளைஞன் நாகய்யா.

பழைய ஆசிரியர் வயதானவர், தலை வழுக்கை விழுந்து நடக்கும் போதே கொஞ்சம் தள்ளாடுவார். கையில் ஒரு கம்பும் முட்டை வடிவ மூக்குக் கண்ணுடியும் அவருடைய முத்திரைகள். பத்து ஆண்டுகளாக அந்த ஊரிலேயே பணி செய்தவர்.

ஆனுல் ஊரார் சிலர் அவருடைய மாற்றலைத் தடுத்து மறு உத்தரவு வாங்க முயன்ருர்கள். அவருக்கும் அந்த ஊரைவிட்டுப் போக மனம் இல்லை. அதனுல் நெருங்கிப் பழகிய அந்தரங்க நண்பர்களைக்கொண்டு உத்திரவை ரத்து செய்து இன்னும் ஒரு வருஷமோ இரண்டு வருஷமோ அங்கேயே பணி செய்து ஓய்வு பெற விரும்பினுர்.

நாகய்யாவுக்கு ஆசிரியர் பயிற்சி முடிந்து இது முதல் நியமனம். இளைஞன், கல்யாணமாகாதவன்.

இந்தக் காரணத்தையும் சுட்டிக்காட்டி அவன் அங்கே வேண்டாம் என்று மனுவில் குறிப்பிட்டு பெரும்பான்மையோர் கையெழுத்தும் கைநாட்டும் வாங்கப்பட்டன.

பழைய ஆசிரியர் புது ஆசிரியருக்கு வேலையை ஒப்புக் கொடுக்க மறுத்துவிட்டார், ஊரார் ஜில்லா போர்டு தலைவருக்கு அனுப்பிய மனுவுக்கு உத்திரவு வரும் வரை வேலையை அவனிடம் ஒப்படைக்க முடியாதென்று கண்டிபாகச் சொல்லிவிட்டார். உத்திரவும் வந்தபாடில்லை.

நாகய்யாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வேறு எந்த ஊருக்காவது மறுநியமனம் வந்தாலாவது போதும். வேண்டாத ஊரில் வலுக்கட்டாயமாக இருந்து பணி செய்வதில் மனக்கஷ்டமே தவிர வேறு என்ன லாபம்?

இந்த நிலையில் ஊரார், கள்ளுக்கடை கண்ணுசாமியை அணுகி அவன் ஜில்லா போர்டு தலைவரை நேரில் கண்டு உத்திரவை ரத்து செய்து வாங்கிவரும்படிக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, கண்ணுசாமியும் அதிகாலையில் போகும் ரயிலில் போய்விட்டான். இரண்டு மூன்று நாட்கள் ஆனாலும் அங்கேயே தங்கி உத்திரவை கையோடு வாங்கி வருவதாகச் சொல்லிவிட்டு அவன் போனதாக கமுக்கமாய் பேசிக்கொண்டார்கள்.

நாகய்யா அன்று மாலை ரயிலில் அந்த ஊரைவிட்டுப் புறப்பட்டுப் போகத் தீர்மானித்துவிட்டான், முதல் நியமனம் இப்படி ஆகிவிட்டதே என்ற கவலை அவன் முகத்தில் நன்றாகத் தெரிந்தது.

வந்து இந்த ஒரு வாரத்துக்குள்ளேயே மாவடி கிராமத்து இளைஞர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

எழுத்து வாசனை இதுவரை பெறாதவர்கள் அவனிடம் இரவில் கற்றுக் கொள்ள விரும்பினார்கள்.

நாகய்யாவின் மனதில் என்ன என்னவோ திட்டம் உருவாகியிருந்தது படிப்பைப்பற்றி. எல்லோரும் படிக்க வேண்டும். எல்லோருக்கும் எழுதப் படிக்கத் தெரிய வேண்டும். பெண்களும் படிக்க வேண்டும். ஒரு பெண் தன் கணவனுக்குக் கடிதம் எழுதும் அளவுக்காவது எழுதத் தெரிந்திருக்கவேண்டும். அதற்காக அவள் இன்னொருவர் துணையை நாடக்கூடாது என்றெல்லாம் திட்டம் வைத்திருந்த அவனுக்கு மாவடி கிராமத்தில் தொடக்க காலத்திலேயே ஏற்பட்ட எதிர்ப்பு பெரு வெறுப்பையும் சோர்வையும் விளைவித்தது.

கடைசியாக அதைவிட்டுப் போய் ஜில்லாபோர்டில் மறு நியமனம் பெறவேண்டியதுதான் என்று முடிவுகட்டி தன் கொஞ்ச நஞ்ச சாமான்களோடு ரயில் நிலையத்தை அடைந்தான். அவன் போகும்போது ஆண்களும் பெண்களும் அவரவர் வீட்டிலிருந்து எட்டிப்பார்த்தார்கள். பழைய ஆசிரியருக்கு வெற்றி. அந்த வெற்றிக்குப் பாடுபட்டவர்கள் பெருமிதம் அடைந்தார்கள். அதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

ஆனால் ரயிலடியில் அவன் போகும் வண்டி வருவதற்குள் இளைஞர்கள் கூட்டமாகச் சென்று அவன் போகக் கூடாது என்று தடுத்தார்கள்.

"மேலாளிலிருந்து உத்திரவு என்னதான் வருகிறது என்று பார்ப்போமே அதுவரை எங்களுக்காக தங்குங்கள். அப்புறம் நடக்கிறபடி நடக்கட்டும்" என்று வாதாடினார்கள்.

அவர்கள் அன்பைப் புறக்கணிக்க விரும்பவில்லை நாகய்யா.

"கள்ளுக்கடை கண்ணுசாமி செல்வாக்கு உள்ளவன் என்கிறார்களே, உத்திரவை ரத்து செய்து வாங்காமலா வருவான்." என்று ஐயம் தெரிவித்தான் நாகய்யா.

"அப்படி உத்திரவு வாங்கிவந்து விட்டால் நாங்களே உங்களை வழியனுப்பி வைக்கிறோம்" என்று சொல்லி ரயில் நிலையத்திலிருந்து திரும்பக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டார்கள்.

எதிர்பார்த்ததற்குமாறாக, கண்ணுசாமியின் பாச்சா ஜில்லா போர்டு தலைவரிடம் பலிக்கவில்லை. போன மச்சான் திரும்பிவந்த கதையாகத் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு வெறுங்கையோடு மாவடி வந்தான்.

நாகய்யா ஆசிரியர் பதவியை ஒப்புக்கொண்டதோடு மாற்றலாகிச் செல்லும் பழைய ஆசிரியருக்கு தக்கபடி ஒரு பிரிவு உபசாரம் வேறு நடத்திக் காண்பித்தான். பழைய ஆசிரியரின் ஆதரவாளர்கள் வெளிப்படையாக இந்த உபசாரத்தை ஆதரித்ததாகக் காட்டிக்கொண்டாலும் உள்ளுக்குள் அவர்களுக்கு ஒரே வேக்காடு.

கண்ணுசாமி உள்ளுக்குள் கருவினான். "இரு இரு உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று வன்மம் வைத்தான். நாகய்யாமீது என்ன பழியைச் சுமத்தி ஊரைவிட்டு விரட்டலாம் என்று இராப் பகலாய் யோசனை செய்ய ஆரம்பித்தான்.

## 2

யார் இந்த கண்ணுசாமி? கண்ணுசாமி குடும்பமே பரம்பரையாக கள்ளுக்கடை குத்தகை எடுக்கிறவர்கள். கண்ணுசாமி அக்கரை சீமையிலிருந்து அண்மையில்தான் ஊருக்கு வந்தவன். மலேயாவிலோ சிங்கப்பூரிலோ ஒரு சாராயக்கடையை நடத்துகிறதாம் அவன் குடும்பம். குடும்பத்தில் ஒருவர் மாறி மாறி அங்கேபோய் அதை மேற்பார்வை பார்ப்பார்கள். ஊரில் நிலபுலங்கள் பனந்தோப்பு தென்னந்தோப்பு சேர்க்கை நாளுக்குநாள் அதிகமாகிக்கொண்டே வந்தது.

கண்ணுசாமிக்கு நாற்பது வயதிருக்கும். சமீபத்தில் அவனில் ஏற்பட்ட மாற்றம் இரண்டு தங்கப் பல் கட்டிக் கொண்டு வந்திருப்பதுதான். அவன் சிரிக்கும்போது மற்றவர்களும் சிரிப்பார்கள்—ஏகத்தாளமாக அந்தப் பல்லைப் பார்த்து. கண்ணுசாமி வருவதற்குமுன் அவன் வரவுக்குக் கட்டியம் கூறுவது கள் வாசனை அல்ல; அவன் சிங்கப்பூரிலிருந்து கொண்டுவந்திருக்கும் ஒருவித வாசனை. அது சீமைச்சாராய வாசனைதான் என்று சிலர் மறைவாக தங்களுக்குள் எள்ளி நகையாடுவது வழக்கம்.

மதுவிலக்கு, மாவடியிலும் அதைச்சுற்றியுள்ள கிராமங்களிலும் வெகுகாலமாக தலைகாட்டவில்லை. சில இளைஞர்கள் மட்டும் அவ்வப்போது நகர்ப்புறங்களில் கேட்ட கொள்கைகளைப் பின்பற்றி மதுவிலக்கு பிரசாரம் செய்யத் தொடங்குவார்கள். ஆனால் கள்ளுக்கடை கண்ணுசாமி இரவோடு இரவாய் எல்லா பெரியதனக்காரர்களையும் அழைத்து அழகாக ஒரு கள் பார்ட்டி நடத்திக் காண்பித்துவிட்டானானால்—அவ்வளவுதான்—படம் எடுத்த பாம்புபோல அந்தப்பிரச்னை படுத்துவிடும்.

ஆயினும் கள்ளை ஒழித்தே ஆகவேண்டும் என்ற உணர்ச்சி அந்த வட்டாரத்தில் மறைந்துபோய் விடவில்லை. அதுவும் சங்கிலியோடு வளர்ந்து வந்தது என்றுகூடச் சொல்லலாம்.

சங்கிலி இதற்கு அகத்தானே என்னவோ புழுதியில் நட்ட சம்பா நடுகையைப்போல செழிப்பாக வளர்ந்து விட்டாள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் சிற்றாடையைக்கூட நன்றாகச் சுற்றிக்கொள்ளத் தெரியாத சங்கிலி, இப்போது நம்பமுடியாதபடி பச்சை மஞ்சளை முறித்ததைப்போல கண்ணைப்பறிக்கும் பொலிவோடு விளங்கினாள்.

பலதடவைகளில் வாய்க்கால்கரைகளிலும் வயல்வரப்புகளிலும் சங்கிலியை அவன், எதிரேவரக் கண்டிருக்கிறான். அவன்தான் புதிதாக வந்த ஆசிரியர் என்று அறிந்த பொழுது, சங்கிலியும் கண்களை அகலவிழித்து, தன் நெஞ்சகத்துப் புகவும் வழிவிட்டாள்.

இதற்குமுன்னில்லாத புத்தம்புது உணர்ச்சிகள் சங்கிலியிடம் தோன்றி வலுக்க ஆரம்பித்தன. நாகய்யாவின் அழகிய முகம், கூரிய விழிகள், தூய ஆடம்பரமற்ற தன்மை, இனிய மொழிகள் எல்லாம் அவளுடைய இதயத்தில் சதா உலவி அவனைப்பற்றி இடையறாமல் நினைக்கத் தூண்டின.

அறுவடை சமயத்திலும் அறுவடை முடிந்த வுடனுந்தான் கள்குடி அபரிமிதமாக இருக்கும். களங்களிலும் களத்துமேட்டுகளிலும் கள் மிடாக்களிலும் குடங்களிலும் குடுவைகளிலும் வந்து இறங்கிய வண்ணமாக இருக்கும். ஆண்களும் பெண்களும், ஓலைப்பட்டைகளிலும், கலயங்களிலும், கள்ளை ஊற்றி ஊற்றி குடித்து மயங்குவார்கள்.

காசை வாங்கிக்கொண்டு கள் விற்பதிலும், நெல்லுக்குக் கள்ளைப் பண்டமாற்று செய்வதில்தான் அதிக லாபம் என்பது கண்ணுசாமி கண்டு வைத்திருந்த சிதம்பர ரகசியம். அதனால்தான் வயல்களிலும் களத்துமேடுகளிலும் கள்ளை ஆறாகப் பாயவிட்டு வயல்நெல் வீடு வந்து சேர்வதற்குள்ளேயே அவன் நெல்லை அபகரித்துச் செல்லும் கொடுமையை மாவடி இளைஞர்கள் கண்டிக்கத் தலைப்பட்டார்கள்.

முதல்நாள் இரவில் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் தலைமையில் ரகசியக்கூட்டம் நடத்தி கள்ளை அடியோடு ஒழிக்க ஆலோசனை செய்தார்கள் அதில் முக்கியமான யோசனை கள்குடியின் தீமையைப்பற்றி முதலில் மக்கள் உணர்ந்து மனம் திருந்த வேண்டும்.

ஆகையால் ஊரில் பெரியவர்களை நேருக்கு நேர் சந்தித்து அதைப்பற்றி விளக்கவேண்டும். அடுத்து, கள் விற்பனை, கடையோடு மட்டும் நிற்காமல் வயல்களிலும் களங்களிலும் விற்கப்படுவது உடனே நிறுத்தப்பட வேண்டும்.

ஆலோசனைப்படி மறுநாள் இளைஞர்கள் வயல்களிலும் களங்களிலும் சுற்றித்திரிந்து, விற்பனை நிலவரத்தை அறிந்து வந்து மூன்றும் நாள் இரவில் ஊர்க் கூட்டம் போட்டு அதைத் தடுத்துவிடத் திட்டம். நாகய்யா தற்செயலாக போவதுபோல பல களங்களைப்போய்ப் பார்த்தான்.

சங்கிலி வீட்டார் களத்தை தங்கள் வயலிலேயே வைத்திருந்தார்கள்.

நெல்லும் நெற்கதிர் கட்டுகளும், வைக்கோலும், வைக்கோல் பொருளுமாக காட்சியளிக்கும். களத்தில், ஆடவரும் பெண்டிரும் இயல்பாக மகிழ்ச்சியோடு விளங்குவார்கள். பாடுபட்ட பலன் கிடைக்கும் சமயம் அல்லவா ? அறுவடை முடியும் வரை இரவும் பகலும் களங்களிலேயே தங்கி விடுவதும் உண்டு. வெயிலுக்கும்—பனிக்கும் மறைவாக சிறு சிறு குடில்களை அமைத்துக் கொண்டு, அங்கேயே உண்டு உறங்கி உழைப்பதில் ஒரு தனி மகிழ்ச்சிதான்.

நாகய்யா களத்தை அடைந்தபோது ஆசிரியருக்கு உரிய மரியாதையோடு அவனை வரவேற்றார்கள். சங்கிலியின் தமையன் அங்கே கிடந்த வைக்கோல் கட்டு மீது நாகய்யாவை அமரும்படி வேண்டினான்.

பக்கத்து கிராமத்துக்கு ஒரு வேலையாகத் தான் போவதாகவும் வரும் வழியில் தற்செயலாக அங்கு வந்ததாகவும் கூறிக்கொண்டு, அங்கு கள் நடமாடுகிறதா என்று நோட்டம் விட்டான்.

கள் வாசனை களத்து வாசனையோடு எங்கும் பரவியிருந்தது. அதிகாலையிலேயே கள் அங்கு வந்துவிட்டதற்கு அறிகுறியாக கள் பானைகள், முட்டிக்கலயங்கள், சொண்டான்கள் அங்கே தென்பட்டன.

சங்கிலியின் தமயன் முத்தன் அவனிடம் மிக மரியாதையாக உரையாடினாலும்–கள்குடி மயக்கத்தால் உளறினான். சங்கிலி அங்கே வைக்கோற் போருக்கு அருகே நின்று கொண்டிருந்தாள். இரண்டு மூன்று தடவைகள் அவர்கள் கண்கள் சந்தித்தன. நாகைய்யா முத்தனிடம் விடை பெற்றுக் கொண்டு அங்கிருந்து அகன்று வந்து விட்டான். அதற்குப் பின்னர் வேறு எந்தக் களத்துக்கும் போகவில்லை—போகத் தெம்பு இல்லை. சங்கிலி கள்குடி மயக்கத்தில் நின்றிருந்ததைக் கண்ட பாவம் தான். அவள் கண்கள் செவ்வலரி போல சிவந்திருந்தன. இயற்கையாக மலர விழிக்கும் மான் போன்ற மருண்ட விழிகள் எங்கே ! கட்குடியால் சிவந்து தன்னைப் பார்க்க கூசிய இந்த விழிகள் எங்கே !

இவ்வாறு நொந்து போயிருந்த அவன் உள்ளத்தில் இன்னொரு அடி வீழ்ந்தது உடனடியாக. அவனைப் போலவே களத்து மேட்டுகளில் சுற்றி வேவு பார்த்து விட்டு வந்த இரு உற்சாகமான இளைஞர்கள் இந்தச் சங்கதியையும் கொண்டு வந்தார்கள். அதாவது: சங்கிலி வீட்டுக்குக் கள்ளுக்கடை கண்ணுசாமி குடுவை குடுவையாகக் கள் அனுப்புவதைப் பற்றி மாவடியிலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் பலவித வதந்திகள் அருவருக்கத்தக்க விதமாக உலாவுவதைத்தான் அவர்கள் நாகய்யாவிடம் சொன்னார்கள்.

அந்தச் சங்கதி அவன் காதில் விழுந்த போது தூண்டில் புழுவைப் போல் துடித்தான். 'சே! இப்படி ஒரு நாளும் இருக்காது. ஒரு வேளை உள் நோக்கத்தோடு கண்ணுசாமி இலவசமாகக் கள் அனுப்புவதில் வேணுமானால் ஒரு வேளை உண்மை இருக்கலாம். ஆனால் அதற்காகச் சங்கிலி மீது இந்த அவதூறு சுமத்துவது அபாண்டம். அடுக்காது. இரவு பகலாக ஒரு புழு இருந்து குடைவது போல நாகய்யா துடித்துக் கொண்டிருந்தான்.

ஒரு வாரம் கழிந்தது. தற்செயலாக சங்கிலியின் தமையன் முத்தனை வாய்க்கால் ஓரத்தில் சந்தித்தான். முத்தன் மிகவும் நல்லவன். நாகய்யாவிடம் தனி மதிப்பும் கொண்டவன். அவனிடம் நாகய்யா முதலில் பொதுவாகக் கிராமத்தைப் பற்றிப் பேசிவிட்டு பின்பு சாமர்த்தியமாக அந்த வதந்தியைப் பற்றி விசாரித்தான்.

பெண்கள் குடிப்பது வழக்கம் என்றும் அம்மாதிரியே சங்கிலியும் குடிப்பது உண்டு என்றும் அதைத் தவிர மற்றபடி பேசுவது எல்லாம் வம்பு என்றும் சொன்னான்.

நாகய்யாவுக்கும் மகிழ்ச்சியும், துக்கமும் கலந்த ஓர் உணர்ச்சி. அந்த வதந்தியில் உண்மை ஏதும் இல்லை என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி. சங்கிலியும் குடிக்கிறாள் என்பதில் ஓரே வருத்தம்.

"போகட்டும், சங்கிலி சின்னவள் தானே? அவளாவது குடிக்காமல் இருக்கலாகாதா?" என்று உருக்கமாக வேண்டிக் கொண்டான்.



மறுநாள் அதிகாலையில் நாகய்யாவின் வீட்டுக் கதவைத் தட்டினான் முத்தன். நாகய்யா வெளியே வந்தான். முத்தன் சொன்னான்: "வாத்தியாரையா! நீங்க சொன்னதை சங்கிலியிடம் சொன்னேன். அவ்வளவு தான். தங்கச்சி என்ன சொன்னாள் தெரியுமா? கள்ளைக் கையால் இனிமேல் தொடுவது கூட இல்லை என்று என் தலையில் அடித்துச் சத்தியம் செய்து விட்டாள். உங்கள் மனம் நோகும்படி நடந்து கொண்டோமே என்று சங்கிலி ரொம்பச் சங்கடப்பட்டாள்" அதைக் கேட்ட நாகய்யா அது நனவு தானா என்று தன் காதுகளை நம்பமுடியாமல் திகைத்தான்.

நாகய்யா இவ்வளவு காலமும் தனிமையைத் துணையாகக் கொண்டு வாழ்ந்து வந்தான் அல்லவா! இப்போது சங்கிலியைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் வேரூன்றி விட்டது. இனி முத்தனிடம் தன் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டியது தான்.

ஒரு நாள் முத்தன் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது அவனை அணுகித் தன் விருப்பத்தை மெதுவாக அவனிடம் வெளியிட்டான்.

முத்தன் அங்கலாய்த்தான். "தம்பி இதை நீ முன்னமே சொல்லியிருக்கக்கூடாதா. சங்கிலிக்கு உனக்கு வாழ்க்கைப்படக் கொடுத்து வைத்திருந்தால் அது புண்ணியம் செஞ்சதாச்சே! இந்தக் கள்ளுக்கடை கண்ணுசாமியினால் ஏற்பட்ட புரளியினாலே அவளுக்குக் கருங்காட்டுக் கிராமத்தில் ஒருத்தனுக்கு கொடுக்க நிச்சயமாயிட்டதே!"

நாகய்யாவுக்கு அவன் மனதைப் போலவே, அவன் கண்ணுக்குத் தோன்றிய பொருள்கள் யாவும் சுழன்றன.

### 3

சங்கிலி மாவடியைவிட்டு கருங்காட்டுக் கிராமத்துக்குப் போன ஒரு வாரத்துக்குள், மாவடியும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களும் ஒரு நல்ல ஆசிரியரை இழந்து விட்டன எப்படியோ நாகய்யா அந்த ஊரை விட்டுத் தன்னை மாற்றிக் கொண்டான்.

நாகய்யா மாவடியை விட்டு நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்து விட்ட பின்னர், புளியங்குளம் என்ற ஊரிலுள்ள ஒரு பெரிய பள்ளிக்கூடத்துக்கு உதவி ஆசிரியராக அவன் நியமிக்கப்பட்டு மாற்றல் உத்தரவு வந்து சேர்ந்தது.

புளியங்குளத்தில் நாகய்யாவுக்கு வசதியான வீடு எதுவும் கிடைக்கவில்லை. ஆகையால் புளியங்குளத்துக்கு அருகில் உள்ள கருங்காடு என்ற கிராமத்தில் வீடு கிடைக்கும் என்று தலைமை ஆசிரியர் சொன்னார்.

'கருங்காடு' என்ற பேரைக் கேட்ட மாத்திரத்திலேயே திடுக்கிட்டது நாகய்யாவின் மனம். அலை அலையாக எண்ணங்கள் வந்து மோதின. பேசாது கற்சிலைபோல நின்றான்.

இதற்குள் தலைமை ஆசிரியர் கருங்காட்டிலிருந்து அங்கு வேலை செய்ய வந்திருந்த ஒருவனிடம் நாகய்யாவை அறிமுகப்படுத்தி வைத்து. அவனுக்கு வசதியாகவுள்ள ஒரு சின்ன வீடு பார்த்துக்கொடுத்து உதவி செய்யும்படி சொன்னார்.

உற்சாகமாக அதை ஒப்புக்கொண்டான் அவன். தன்னிடமே ஒரு வீடு இருப்பதாகவும் அந்த ஆசிரிய

குக்குப் பிடித்திருந்தால் அதிலேயே தங்கலாம் என்றும் சொன்னான். எனவே, அவனுடைய சாமான்கள் கொண்ட மாட்டு வண்டி மீண்டும் பூட்டப்பட்டது.

அப்போது பொழுது மறையும் வேளை. தடத்தின் வழியாக வண்டி முன்செல்ல இருவரும் பின்னால் நடந்து சென்றனர்.

அந்த மனிதனிடம் அப்போதே சங்கிலியைப் பற்றி விசாரிக்க வேண்டுமென்ற எண்ணம் அவனை உந்தித் தள்ளியது. ஆனால் அது அழகாக இருக்காது என்று படவே அதைப்பற்றி எதுவும் பேசாது அந்த எண்ணத்தை அடக்கிக்கொண்டான்.

சாலை ஓரத்தில் உள்ள ஒரு வீட்டின் முன்னால் வண்டி நிறுத்தப்பட்டது. அவன் சாவி கொண்டு வந்து வீட்டு முன்வாசலைத் திறந்து அரிக்கேன் லாந்தல் ஒன்றை ஏற்றி வைத்துச் சாமான்களையும் வீட்டினுள் கொண்டு வந்து சேர்த்தான் அங்கு கிடந்த ஒரு கயிற்றுக்கட்டிலில் அவனுடைய படுக்கையை விரித்துப் போட்டான், அதில் உட்கார்ந்துகொண்டிருந்தான் நாகய்யா.

"இந்தா, இவனைப் பிடி, எவ்வளவு சேட்டை பண்ணுது வர வர" என்று குழந்தையை அவனிடம் கொடுத்து விட்டு, "இவர்தான் புது வாத்தியார் அய்யாவா?" என்று அன்புடன் தன் வரவேற்பைத் தெரிவித்தாள் அவன் மனைவி, தானும் ஏதாவது பேசவேண்டும் என்பதற்காக.

"குழந்தைக்கு வயது என்ன?" என்று கேட்டான் நாகய்யா.

"மூணு வயசு முடிஞ்சு போச்சு" என்றாள் அவள்.

"பேரு?"

"பேரு நாகய்யா."

நாகய்யா திடுக்கிட்டது அந்த தம்பதிக்கு தெரியாது, "நாகய்யாவா......?" பலமான சிந்தனை ஓட்டம் அவன் இதயத்தில் ஓட ஆரம்பித்தது,

வந்த களைப்பினால் படுத்துக்கொண்டான் நாகய்யா. சுவர்க்கோழிகள் விடாமல் 'உய்ங்' என்று கத்திச் செவியைப் பிய்த்துக்கொண்டிருந்தது.

சற்று நேரம் கழிந்ததும் கதவு திறக்கும் சப்தம் கேட்டது. நாகய்யா எழுந்தான். அவன் கண்களை நம்ப முடியவில்லை. சங்கிலி: ஆமாம், சங்கிலியேதான்!!

மீண்டும் கதவைச் சாத்திவிட்டு அவன் அருகில் வந்தாள் சங்கிலி. அவள் கண்களில் கண்ணீர் வெள்ளம் புரண்டோடியது. நாகய்யா என்ன பேசுவது என்று தெரியாமல் திணறிக்கொண்டிருந்தான்.

"உங்களுக்காக நான் எவ்வளவு நாள் காத்துக்கொண்டிருக்கிறேன்; என்னை நீங்கள் மறந்துவிட்டீர்களா? என்னால் ஒரு நிமிஷம் கூட உங்களை மறக்க முடியவில்லையே. என் மனம் உங்களையேதான் சுற்றிக்கொண்டிருக்கிறது, மலரைச் சுற்றி சதா வட்டமிடும் வண்டைப் போல...." என்று கூறியவண்ணம் அவனை நெருங்கிக் கட்டிலின் மீது அமர்ந்தாள்.

சங்கிலி இவ்வளவு அழகாகப் பேச எங்கு கற்றுக் கொண்டாள்? சாதாரண கிராமப் பெண். மாவடி கிராமத்தை விட்டுக்கூட நகர்புறங்களுக்கு அவள் அதிகம் போனது இல்லை. தன்னிடம் இவ்வளவு தூரம் அவள் அன்புகொண்டிருந்தது தனக்குத் தெரியாமல் போயிற்றே. அவளுக்காக யாராவது காத்துக்கொண்டிருந்தார் என்றால் அது தான் அல்லவா? அவளை அல்லவா தான் மறந்து விட முடியவில்லை. அவளை அல்லவா தன் மனம் சதா சுற்றிக்கொண்டிருக்கிறது ....

இவ்வாறு நினைத்த நாகய்யா வெள்ளம் எனப் பாயும் அவள் கண்ணீரைத் துடைக்க எண்ணி கட்டிலில் படுத்துக் கிடந்த அவன் எழுந்து அவளை நெருங்கி அமர்ந்த பொழுது கதவு மீண்டும் கீச்சிட்டுக்கொண்டு திறந்தது!

நாகய்யா திடுக்கிட்டுக் கண்விழித்தான். சங்கிலி? —சங்கிலி எங்கே? என்ன பயங்கர இன்பக் கனவு!


அவன் உணவோடு உள்ளே வந்து அவனைச் சாப்பிட வேண்டினான். அவன் மனைவி பாத்திரத்தில் தண்ணீர் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போய்விட்டாள்.

அந்த மனிதனிடம் நாகய்யா, "ஆமாம்.. மாவடி கிராமத்திலிருந்து ஒரு பெண் இந்த ஊருக்கு வாழ்க்கைப்பட்டு வந்திருக்கிறாளே—சங்கிலி என்று பேர்—அவள் வீடு எங்கே? அவள் சவுக்கியமா? நான் நாலு வருஷங்களுக்கு முன்னால் மாவடி பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக இருந்தேன். அவர்கள் குடும்பத்தை எனக்கு நன்றாகத் தெரியும்" என்றான்.

அவன் முகம் திடீரென்று மாறுதல் அடைந்தது. விம்மலும் பொருமலும் அவன் தொண்டையை நெரித்தது. "இந்தப் பாவிக்குத் தான் தங்கம்போல அந்தப் பெண்ணைக் கொடுத்தார்கள். ஒரு வருஷத்துக்குள் இந்தப் பிள்ளையைப் பெத்துவிட்டுப் பாயும் படுக்கையும் ஆனாள். அவள் மனசில் என்ன கவலையோ தெரியாது. நீங்க உக்காந்திருக்கும் கட்டிலில்தான் ஆறு மாதம் கிடந்தாள். பணாத வைத்தியம் இல்லை. எண்ணாத தெய்வம் இல்லை. கடைசியில் என்னை விட்டுவிட்டுப் போய்விட்டாள்.."

நாகய்யாவின் மனமும் தலையும் பம்பரம்போல் சுற்றியது மேலும் சங்கிலியின் கணவன் சொன்னது அவன் காதில் விழவில்லை.

விவசாய வளமைக்கு வழிகோலான சிறந்த
பயிர்களின் விளைச்சலுக்கு—உலகப் பிரசித்திபெற்ற
**35 எச்.பி. மக்கார்மிக் இண்டர்நேஷனல்**
**பி-275 ட்ராக்டர்**
இப்பொழுது
இந்தியாவில்
தயாரிக்கப்படுகிறது



விரைவில் சேர்ப்பிக்கப்படும்

அனுமதிபெற்று, தயாரிப்பவர்கள்,

இண்டர்நேஷனல் டராக்டர் கம்பெனி ஆப்
இந்தியா லிமிடெட், பம்பாய்
(இண்டர்நேஷனல்
ஹார்வெஸ்ட்ர்அவர்களின்)

ஏகபோக வினியோகஸ்தர்கள்,

VOLTAS


**வால்டாஸ் லிமிடெட்**

அக்ரோ—இண்டஸ்டிரியல்—
பிராடக்ட்ஸ் டிவிஷன்,
150-பி. மவுண்ட் ரோடு,
சென்னை-2.



PRESYN/IT/1A/66

# BUY THE SENSATIONAL NEW GEM MONOBLOCK PUMP



FOR AMAZING RELIABILITY !

★ STURDY
★ STRONG
★ DEPENDABLE

by the makers of dependable GEM Motors

GEM

**GAUTAM ELECTRIC MOTORS**
42, Okhla Industrial Estate,
New Delhi-20

Sole Selling Agents:
Messrs
TURNER HOARE & Co. Ltd
Bharat Buildings
Mount Road, P. B. 2427
MADRAS.

IWT/GEM/4229

## ஏ. பி. சி. காரேஜ்,

**ஆட்டோமொபைல் இஞ்சினியர்ஸ், 84, பாலக்கரை, திருச்சிராப்பள்ளி-1.**

(தமிழக அரசினர் அங்கீகாரம் பெற்றது) தொலைபேசி எண்: 5619

சப்டீலர்ஸ்: எஸ்கார்ட் டிராக்டர், டெம்போ த்ரீ வீலர்,
வைக்கிங், வெஸ்பா ஸ்கூட்டர், வெஸ்பா ஆட்டோ
ரிக்ஷா மற்றும் எல்லா விதமான கார், ஜீப், பஸ்,
லாரி, டிராக்டர் முதலானவைகளை குறித்த
காலத்தில், குறைந்த சார்ஜில், நல்ல
முறையில் வேலை செய்து கொடுக்கிறோம்.


ஏ. பி. சின்னப்பன், உரிமையாளர்.

## திரஞ்சனா மோட்டார் வேர் ஹவுஸ்

84, பாலக்கரை, திருச்சிராப்பள்ளி-1

(இறக்குமதியாளர்கள்: சீல் டெஸ்ட் U.S.A., ஜீப் சாமான்கள், இங்கிலீஷ் ஸ்டாண் பார்ட்ஸ்,
பி.எம்.சி. பார்ட்ஸ், பெமாக்ஸ் பார்ட்ஸ் முதலியன)

எங்களிடம் கார், லாரி, ஜீப், டிராக்டர் முதலியவைகளுக்கு எல்லாவிதமான ஒரிஜினல்
சாமான்கள், குறைந்த விலைக்குக் கிடைக்கும்.




## இல்லம் நோக்கி

நாள் முழுவதும் கடுமை யான உழைப்பு. இன்ப இல்லம்—உங்களது சொந்த இல்லம்—நோக்கிச் செல்ல வேண்டும் என்ற அவா உங்களுக்கு இல்லையா?

பிறகு ஏன் தயக்கம்? இன்றே கட்ட ஆரம்பியுங்கள் உங் களது இல்லத்தை. நாங்கள் வேண்டிய அளவு தரு கிறோம்

# சங்கர் பிராண்ட் சிமெண்ட்

தேவைக்கு உங்கள் அருகாமையிலுள்ள எமது ஸ்டாக்கிஸ்டுகளை அணுகவும். அல்லது எமக்கு எழுதவும்.

## இந்தியா சிமெண்ட்ஸ் லிட்.

ரிஜிஸ்டர்ட் அலுவலகம்:
'தன் பில்டிங்', 175/1 மவுண்ட் ரோடு, சென்னை-2.
தொழிற்சாலைகள்: சங்கர்நகர், திருநெல்வேலி மாவட்டம்
சங்கரி மேற்கு, சேலம் மாவட்டம்

Criterion-ICT-1546T

விவசாயிகளுக்கு வேளாண்மை ஆண்டு முழுதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல;

விவசாயத்தின் மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானதல்ல.

## கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

* கதர் - கிராமத் தொழில்களை ஆதரிப்பது
* உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் ஆயத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பெற்ற

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய் * தோல் பொருள்கள் * பனைவெல்லம் * சர்க்கரை * மண்பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் * பனைப் பொருள்கள்—இன்னும்—

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்
கதர்-கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்
சென்னை "குறளகத்"தில் இயங்கும்
கதர்-கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு—

கதர்-கிராமத் தொழில் துறை,
2, சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4.

படத் தொகுப்பு விளக்கம்: முதல் பக்கம் (எதிரில்)

படம் 1: பத்து நாட்கள் தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு, இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு வி வி. கிரி, அவர்கள் 4-4-68 அன்று ரயில் மூலம் நெல்லூருக்குப் பயணமானார். சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில், அவருடன், மாண்புமிகு கல்வி அமைச்சரும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரும்.

படம் 2: 28-3-68 அன்று நடைபெற்ற மாநிலங்களவைத் தேர்தலில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தன்னுடைய வாக்கினைப் பதிவு செய்கிறார்.

படம் 3: செக்கோஸ்லேவியா நாட்டுத் திரைப்படக் குழுவினர் 19-4-68 அன்று, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களைச் சந்தித்து உரையாடினர்.

படம் 4: சோவியத் நாட்டிலுள்ள 'வால்காகிராட்' நகராட்சி மன்றத்தைச் சேர்ந்த மூவர் அடங்கிய தூதுக்குழு ஒன்று 17-4-68-ல், தமிழகத்திற்கு வருகை தந்தது. அத்தூதுக் குழுவினர், 17-4-68 அன்று, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கோட்டையில் சந்தித்து, அளவளாவினர்.

இரண்டாம் பக்கம் (அடுத்தது)

### தமிழக முதல்வரின் வெளிநாட்டுப் பயணம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணுதுரை அவர்கள், 15-4-68-ல் அமெரிக்க நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்ருர்.

படம் 1: சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில், தமிழக முதலமைச்சருடன், மாண்புமிகு தமிழக அமைச்சர்கள் (15-4-68).

படம் 2: மேதகு தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள், மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு வந்திருந்து, முதலமைச்சரை வழியனுப்பி வைத்தார் (15-4-68).


படம் 3: விமான நிலையத்தில் மாண்புமிகு முதலமைச்சருடன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள் (15-4-58).

விமான நிலையத்தில் மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற, தமிழக சட்டப்பேரவை உறுப்பினர்கள், அதிகாரிகள், பொது மக்கள் பெருந்திரளாகக் கூடியிருந்து, முதலமைச்சரை வழியனுப்பி வைத்தனர்.


கிராம நலம்-சந்தா விவரம்
ஆண்டு சந்தா ரூ. 2·00
தனிப்பிரதி விற்பனைக்குக் கிடையாது.



1





2



3




1


2



3



1


2


3


4









# அருமனை கூட்டுறவு விவசாய பாங்கு

(வரையறுக்கப்பட்டது)

நிர். ஓய். 47 அருமனை தொலைபேசி எண். 5.

அருமனை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்,

திரு. கே. வி. தம்பி, தலைவர்.

திரு. என். புஷ்பதரன், மேற்பார்வையாளர்—காரியதரிசி.

| | | | ரூ. |
|---|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | .. | .. | 1,00,000 |
| வழங்கப்பட்ட பங்கு மூலதனம் | .. | .. | 90,000 |
| டிப்பாசிட்டுகள் (Deposits) | .. | .. | 60,000 |
| நடைமுறை மூலதனம் | .. | .. | 8,50,000 |

பாங்கிலிருந்து விவசாய முன்னேற்றத்திற்காக குறுகிய கால கடன்களும், நிலச்சீர்த்தத்திற்காக மத்திய கால கடன்களும் வழங்கி வருகிறோம். ரசாயன உரங்கள், உணவு தானியங்கள் முதலிய அத்தியாவசியப் பொருட்களை அரசாங்கம் நியாயமான விலையுடன் பாங்கின் கீழ் நடக்கும் 11 டிப்போக்கள் மூலம் பொது மக்களுக்கு வழங்கி வருகிறோம்.

"கூட்டுறவே நாட்டுயர்வு"

என். புஷ்பதரன்,
மேற்பார்வையாளர்—காரியதரிசி.


படத் தொகுப்பு விளக்கம்: இடப்பக்கம்.

**படம் 1:** புதுடெல்லி ஜும்மா மஜீத் இமாம் அவர்கள், குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தைப் பற்றியும், மதவேறுபாடின்றி அனைவரும் அதைக் கடைப்பிடிக்க வேண்டியது பற்றியும் அறிவுரை கூறுகிறார்.

**படம் 2.** செங்கற்பட்டு மாவட்ட "கிராம நலப் பணிகள் நிறைவு விழா" 9-4-68 முதல் 30-4-68 முடிய நடைபெற்றது. தமிழக அமைச்சர்கள் இவ்விழாவில் பங்கு கொண்டு சிறப்பித்தனர்.

செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுபாக்கம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தின்னலூரில், பள்ளிக் கட்டிடம் ஒன்றை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள் 19-4-68-ல் திறந்து வைத்தார்.

**படம் 3:** இராமநாதபுரம் மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கணபதிபட்டி கிராமத்தில், சீரணிப்படையினர், ஊருணி ஒன்றினை மக்களுக்குப் பயன்படும் வகையில் திருத்தி அமைக்கும் பணியில் அண்மையில் ஈடுபட்டனர்.

**படம் 4:** செங்கற்பட்டு மாவட்டம் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கொல்லடிபேட்டை கிராமத்தில் சீரணிப்படையினர் பள்ளிக் கட்டிட வேலையில் ஈடுபட்டனர்.

படத் தொகுப்பு விளக்கம்: உள் பக்கம்.

## அனைத்திந்திய மதுவிலக்கு மாநாடு

**படங்கள் 1-2.** நான்காவது அனைத்திந்திய மதுவிலக்கு மாநாடு சென்னையில், 1968 ஏப்ரல் 12, 13, 14 தேதிகளில் நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் 12-4-68 அன்று மாநாட்டினைத் துவக்கிவைத்து சிறப்புரை ஆற்றினார். திருமதி டாக்டர் சுசீலா நய்யார் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். திரு கு. காமராஜ் பொருட்காட்சியைத் திறந்து வைத்தார். முன்னாள் முதலமைச்சர் திரு எம். பக்தவத்சலம் மாநாட்டு மலரினை வெளியிட்டார்.

**படம் 3:** மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு தமிழக முதல்வர் 14-4-68 அன்று விருந்தொன்று அளித்தார். இவ்விருந்து, சட்டமன்ற உறுப்பினர்களுக்கான புதிய விடுதியின் முகப்பில் நடைபெற்றது.

**படம் 4:** 'செங்கற்பட்டு மாவட்ட கிராம நலப் பணிகள் நிறைவு விழாவினை' ஒட்டி நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மாண்புமிகு உணவமைச்சரும் கலந்து கொண்டார். ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம் சந்தவேலூர் கிராமத்தில், குழாய் மூலம் கிராம மக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தை அவர் துவக்கிவைத்தார். (9-4-68).

**கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட் நிர். ஒய். 26**

நாகர்கோவில்

தந்தி : மார்க்கட்டிங்

தொலைபேசி எண் : அலுவலகம் : 261

கிடங்கு : 476 அரிசி ஆலை : 477

**திரு டி. சி. சுப்பிரமணிய பிள்ளை,**
தலைவர்.

**திரு வை. சுப்பிரமணியம்,**
உப-தலைவர்.

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் .. .. | ரூ. | 6,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் .. .. | ரூ. | 1,99,402 |
| அலுவல் நிதி .. .. .. .. | ரூ. | 8,92,355 |

**கிளைகள் :**—திங்கட் சந்தை, குளச்சல், தக்கலை, குழித்துறை, கன்னியாகுமரி, வீரநாராயண சேரி, ஆசாரிப்பள்ளம், குலசேகரம், அருமனை, கோதையாறு மேல் அணைக்கட்டு, கோதையாறு கீழ் அணைக்கட்டு, கேசவன்புதூர், கீரிப்பாறை.

**நாகர்கோவில் : 12 கிளைகள்**

- மாவட்டத்திலுள்ள கூட்டுறவுப் பண்டக சாலைகளுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்களை விநியோகம் செய்யும் மொத்த விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்.
- அரிசி, சர்க்கரை, கோதுமை, கோதுமைப் பண்டங்களின் மொத்த விற்பனையாளர்கள்.
- தமிழக அரசு சார்பில், இரசாயன உரம் விநியோகிக்க மாவட்டத்தின் ஏகபோக விற்பனையாளர்கள்.
- H.M.T. கைக்கடிகாரங்களுக்கு மாவட்டத்தின் ஏகபோக விற்பனையாளர்கள்.

பொதுமக்களின் தேவைக்கான அத்தியாவசியப் பண்டங்களை தங்களது 26 கிளைகளின் மூலம் விற்பனை செய்யும் ஒரே மொத்தக் கூட்டுறவு பண்டகசாலை.

உங்களுக்குத் தேவையான பொருள்களை எங்கள் கிளைகளின் மூலம் மொத்தமாகவும், சில்லறையாகவும் வாங்கிப் பயனடையுங்கள்.

ம. சுவாமிதாஸ், பி.ஏ.,
கூட்டுறவு உப-பதிவாளர்—செயலாளர்.



**“ கூட்டுறவே நாட்டுயர்வு ”**

**வடசேரி கைத்தறி நெசவாளர் (உற்பத்தி—விற்பனை) கூட்டுறவுச் சங்கம்**

**லிமிடெட் நம்பர் 2183**

ராமவர்மன் புதுத் தெரு, வடசேரி, நாகர்கோவில்.
(கன்னியாகுமரி மாவட்டம்)

**நிறுவனம் : 1941**

**தொலைபேசி எண் : 141**

எங்களிடம் 20s, 26s, 40s, 60s, 80s, நூல் ரகங்களில் தயார் செய்த வேட்டி, பீஸ், துவர்த்து, புளியிலைக்கரை வேட்டி, கலர் பீஸ், லுங்கி, பெட்ஷீட், பல டிசைன் களிலும் டேப், குண்டஞ்சு பார்டர் வேட்டி, டவல் முதலியவைகள் எப்பொழுதும் சிறந்த தயாரிப்புடன் குறைந்த விலையில் சில்லறையாகவும் மொத்தமாகவும் விற்பனை செய்யப் படுகிறது. எங்கள் உற்பத்தி ஜவுளிகள்

“ ஹான்லூம் ஹவுஸ் ”
“ கோவாப்டெக்ஸ் ”

விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

**சங்கத்தின் கிளைகள் :**

நாகர்கோவில், கோட்டாறு, ஒழுகினசேரி, எர்ணாகுளம், கோட்டயம், சென்னை முதலிய இடங்களில் உள.

K. சண்முக சுந்தரம், B.A.,
கூட்டுறவு உப-பதிவாளர்—செயலாளர்.

ஈ. இராமசாமி,
தலைவர்.

# அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்



சிவப்பு முக்கோணம்
குடும்ப நல திட்டத்தின் சின்னம்

## குடும்பக்கட்டுப்பாடு செய்திடுவீர்

# SAKTHI SUGARS LIMITED

*Manufacturers of :*

**HIGH QUALITY WHITE CRYSTAL SUGAR**

*Now produce also Seeds of :*

HYBRID SORGHUM
HYBRID MAIZE AND
HYBRID BAJRA

These seeds are marketed after Certification by the National Seeds Corporation Limited

*Registered Office :*
72, SENGUPTA STREET,
RAMNAGAR,
**COIMBATORE.**

*Sugar Factory at :*
APPAKUDAL POST
JAMBAI (via) BHAVANI TALUK
**ERODE** (RMS)

*Managing Agents :*

Messrs. BHAVANI ENTERPRISES, POLLACHI

## உலகத் தொழில்-வர்த்தக பொருட்காட்சியில்

# தமிழக அரங்கு

(திரு ஆர். பசுபதி, ஐ.ஏ.எஸ்., தொழில்—வாணிபத்துறை இயக்குநர், தமிழக அரசு)

> 1968 நல்லாண்டு, உலகத்தமிழ் மாநாட்டுடன் தொடங்கியது. தமிழ் மக்களின் உள்ளமெல்லாம் பூரிக்கும் வகையில் நடைபெற்று முடிந்த தமிழ் மாநாட்டை ஒட்டி, சிங்காரச் சன்னையிலே, இன்னொரு விழா, கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அமைந்தது. அந்த விழாவான உலக தொழில், வர்த்தகப் பொருட்காட்சியில், தமிழக அரசின் அரங்கு, மணிமகுடமாகத் திகழ்ந்தது. அவ்வரங்கின் சிறப்புகளை எடுத்து விவரிக்கிறது, இக் கட்டுரை—ஆசிரியர்.

"இணைந்து நின்று, வளம் பெருக்குவோம் (Prosperity through partnership) என்ற சீரிய நோக்குடன், நமது நாட்டின் வாணிபத்தை, வெளிநாடுகளில் மேன்மை அடையச் செய்யவும், விரிவுபடுத்தவும்—இந்த இலட்சியத்தை மையமாகக் கொண்டு, அகில இந்திய தயாரிப்பாளர்கள் சங்கமானது (All India Manufacturers' Association) சர்வதேசத் தொழிற் சந்தை ஒன்றினை ஏற்பாடு செய்வதென 1965-ல் விரும்பியது. மத்திய அரசு, தமிழக அரசுகளின் முழு ஆதரவுடனும், ஒத்துழைப்புடனும் இப்படிப்பட்ட ஒரு தொழிற் சந்தையை சென்னையில் நடத்த, தொழில் துறையில் பாரதத்தின் முக்கிய உற்பத்தியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள இச்சங்கமானது, விழைந்து முன் வந்தது- தொழில் துறையில் பாரதம் அடைந்துள்ள மகத்தான முன்னேற்றங்களையும் சாதனைகளையும், நாடு சுதந்திரம் பெற்ற பிறகு பல்வேறு பொருளாதார வளர்ச்சித் துறைகளிலும் கண்டுள்ள பாராட்டத்தக்க விரைவான முன்னேற்றத்தினையும், நாட்டு மக்கள் முன்னிலையில், அவர்கள் அறிந்து கொள்வதற்காகவும், நாட்டின் வெளிநாட்டு வர்த்தகத்தை அதிலும் குறிப்பாக புதிது புதிதாக தோன்றியுள்ள தொழில் வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கவும். பெருமளவுக்கு அதிகப்படுத்தவும் வேண்டும் என்ற சீரிய நோக்கமே, இப்படிப்பட்ட ஒரு தொழிற்சந்தையை ஏற்பாடு செய்வதின் அடிப்படை எண்ணமாக அமைந்திருந்தது.

பொருட்காட்சியை நடத்தும் பொறுப்பேற்றுள்ளவர்களிடம் தமிழக அரசு 300 ஏக்கர் நிலத்தை, இதற்காக வேண்டி, ஒப்படைத்தது. பாதை வசதி, ரயில் வசதிகளால் எளிதில் அடையக்கூடியதாக, சென்னை நகரில் புது ஆவடி பாதைக்கு அருகில் இந்த இடம் அமைந்தது. அரசுப்பகுதி, வெளிநாடுகள் பகுதி, தனியார்ப்பகுதி, கடைகள், விற்பனைப் பகுதி என்று, பல்வேறு பிரிவுகளாக, இந்த உலகச்சந்தையின் அமைப்பானது பாகுபடுத்தப்பட்டது.

தமிழக அரசு, இத் தொழிற் சந்தையில் பங்கெடுத்துக் கொள்ள முடிவு செய்தது. தொழில், விவசாயம், விலங்கின வளர்ப்பு, மின் விசை, பாசனம், கிராமிய வளர்ச்சி ஆகிய துறைகளில் நமது மாநிலத்தில் கண்டுள்ள முன்னேற்றங்களை விளக்கியும், அத்துறைகளில் உள்ள சிறப்பியல்புகளை மக்களுக்கு தெள்ளத்தெளிய விளக்கிக் காட்டும் வகையில் மாநிலத்தின் பல்வேறு துறைகளும் இப்பொருட்காட்சியில் பங்கேற்றன. தமிழக அரசின் அரங்குக்காக, ஒரு லட்சம் சதுர அடி உள்ள இடமானது ஒதுக்கப்பட்டது.


முதலில், இப்பொருட்காட்சியானது, 1967 ஜனவரியில் துவங்குவதாக இருந்தது. ஆனால் பின்னால் இது 1968 ஜன

வரிக்குத் தள்ளிப் போடப்பட்டது. இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் திரு வி. வி. கிரி அவர்களால் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ந் தேதி இப்பொருட்காட்சி துவக்கி வைக்கப்பட்டது.

பொருட்காட்சியில் பங்கு கொண்ட வெளிநாடுகளில், சோவியத் குடியரசு, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, போலண்டு, பல்கேரியா, ஹங்கேரி, ருமேனியா, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகள் முக்கியமானவைகளாகும். மைசூர், ஆந்திரம், மஹாராஷ்டிரம், அசாம், டெல்லி, உத்திரப் பிரதேசம், புதுச்சேரி, குஜராத் ஆகிய மாநிலங்களும் பொருட்காட்சியில் கலந்து கொண்டன.

**உள்ளம் கவர்ந்த உயரிய அரங்கு**

தமிழக அரசு சிறப்பான முறையில் இப்பொருட்காட்சியில் பங்கெடுத்துக் கொண்டது. 'தமிழக அரங்கு, எல்லோருடைய கண்களையும் கருத்தையும் கவர்வதாகி அமைந்திருந்தது எனலாம். கண்காட்சியின் முக்கிய நுழைவாயிலில் தமிழக அரசின் கம்பீரமான அரங்கம், பொருட்காட்சிக்கு வருகை தந்த இலட்சக்கணக்கான மக்களை வரவேற்கும் முறையில் எடுப்புடன் அமைந்திருந்தது. விவசாயம், தொழில், விலங்கின வளர்ப்பு, மீன்வளம், மின் விசை, பாசனம், செய்தித் துறை ஆகிய பலவேறு துறைகள் தமிழக அரசின் அரங்கில் இடம் பெற்றிருந்தன. கண்காட்சியில் நேரடியாக பங்கு கொண்டதோடு மட்டுமல்லாமல், தமிழக அரசானது, பொருட்காட்சியினை நடத்துபவர்களுக்கு எல்லாவித உதவியையும் ஒத்துழைப்பையும் அளிக்க முன் வந்தது. அரசுத் துறைகளுடன், அவ்வப்போது ஏற்படுகின்ற அன்றாடப் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்காக வேண்டி, தமிழக அரசானது, தன்னுடைய தொழில் துறை அரங்கினைச் சேர்ந்த சிறப்பு




அதிகாரி ஒருவரை, கண்காட்சியில் பங்குகொண்ட எல்லா மாநில அரசுத் துறைகளுக்கும்—கண்காட்சி பொறுப்பாளர்களுக்குமிடையே மாநில அரசின் ஒரு தொடர்பு அதிகாரியாகப் பணியாற்ற, நியமனம் செய்தது.

தமிழக மண்ணின் பண்பாட்டின் இலக்கணமாகத் திகழும் கண்ணைக்கவரும் வகையில் பிரமாண்டமான கோபுர அமைப்பு தமிழக அரசின் அரங்கின் நுழைவாயில் அமைந்திருந்தது. அற்புதமான 12 சிற்பங்கள் கோயில் முகப்பில் தீட்டப்பட்டு—கவர்ச்சிகரமான கண்ணைக் கவரும் ரதம் ஒன்று கோபுரத்தின் எதிர் முகப்பில் அமைந்திருப்பதுபோல அமைக்கப்பட்டிருந்தது. இந்த முகப்பு தமிழக அரங்குக்கே ஒரு தனிக்களையை ஊட்டியது. பழம் பெரும் சிற்பக்கலையும், ஓவிய வேலைப்பாடும் இணைந்து அற்புதமான தோற்றமளித்துக் கொண்டிருந்தது. முகப்பு கோபுரத்தின் வடகுப் பக்கத்தில் பெரிய பெரிய தூண்கள் வரிசை அமைக்கப்பட்டு கம்பீரமாகத் தோற்றமளித்துக் கொண்டிருந்தன. இத்தூண்களின் வரிசைகளினூடே, தூரத்திலிருந்து பார்க்கும்பொழுதுகூட, தமிழக அரங்கின் உள்ளே அமையப்பெற்றுள்ள பலவேறு துறைகளின் அரங்குகளும் மிகவும் அழகாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்தன.

அரசின் கட்டிடக்கலைத் துறைத் தலைவர், இந்த அரங்கின் அமைப்புக்கு வரிவடிவம் அமைத்துக் கொடுத்திருந்தார். பலவேறு துறைகளின் அரங்குகளின் புறத்தோற்ற அமைப்புகளை பொதுப் பணித்துறை அமைத்துக் கொடுத்திருந்தது. அந்த அமைப்புகள் எளிய அளவில் கம்பீரமான முறையில் அமைக்கப்பட்டிருந்தன. பலவேறு துறைகளின் உட்புற அமைப்பு, ஒளி அமைப்பு எல்லாம் அந்தந்தத் துறைகளால் செய்யப்பட்டிருந்தன. சவுக்கு, மரப்பலகைகள் இருப்புக்குழாய்கள், தகடுகள் போன்ற அதிக விலையில்லாத பொருள்கள் அரங்குகளை நிர்மாணிப்பதில் பயன்படுத்தப்பட்டன. கல் கட்டிடமாக இல்லாமல், இப்படி தற்காலிக அமைப்பாக இருப்பதினால் ஒரு பயன் உண்டு. பொருட்காட்சி முடிந்ததும், அநேகமாக இந்தப் பொருள்களை எல்லாம் மீண்டும் பயன்படுத்திக்கொள்ள முடியும்; அத்துடன் அவைகளை அப்படியே ஏலத்தில் விற்றுவிடலாம்; சேதம் ஒன்றுமில்லை.

**அற்புதக்கலவை—அழகுத்தோற்றம்**

தமிழக அரங்கினுள் அமைக்கப் பட்டிருந்த எல்லா அரங்குகளும் ஒன்றுசேர்ந்து ஓர் அற்புதமான கலவையாக இணைந்து அழகுடன் தோற்றமளித்ததுமட்டுமல்லாமல், கலைநோக்குடன் மாநிலத்தின் முன்னேற்றங்களை எடுத்துப் பறைசாற்றிக் கொண்டிருந்தன. தமிழகத்தின் பழம் பெரும்பண்பாட்டோடு இணைந்துஅவை சாட்சி அளித்துக்கொண்டிருந்தன. தமிழக அரங்கினுள் நுழைந்ததும், நம் கண்ணில் படுவது விவசாயத்துறை அரங்குதான். அதைச் சுற்றிப் பார்க்கும்பொழுது நமது மாநிலம் வேளாண்மைத் துறையில் பலவேறு வகைகளிலும் கொண்டுள்ள முன்னேற்றம் நம் கண் முன்னே அப்படியே

படம் பிடித்துக் காட்டப்பட்டது போல் தோற்றமளித்துக் கொண்டிருந்தன. பல்வேறு அதிக விளைச்சல் தரும் தானிய அபிவிருத்தித் திட்டங்கள்—விவசாய பொறியியல் துறையில் கையாளப்படும் நவீன முறைகள் தெளிவாக அங்கே விளக்கப்பட்டிருந்தன.

விவசாய அரங்கிற்கு அடுத்தபடியாக, தொழில் துறை அரங்கு அமைந்திருந்தது. அத்துறையில், பழங்காலத்து அழகுக் களஞ்சியங்களான கைவேலைப் பொருள்களுடன தனியார்த் துறை, அரசுத் துறைகளில் கண்டுள்ள தற்கால பொருளாதார வளர்ச்சியினை விளக்கிக் காட்டும் வகையில் தொழில் துறை அரங்கு தோற்றமளித்தது. அழகோவியமாகத் திகழும் செம்பினால் செய்யப்பட்ட உருவச்சிலைகள் வண்ணவிரிப்புகள், கம்பளங்கள்—அழகான பத்தமடைப் பாய்கள்—இயந்திரங்கள்—இப்படி பல்வேறு பொருள்கள்



எல்லாமே பார்வையாளர்களின் சிந்தனைக்கும் கண்களுக்கும் விருந்தாக அமைந்திருந்தன. கடந்த காலத்திலிருந்து, அதாவது சென்னப்ப நாயக்கர் சென்னை நகரினைத் தோற்றுவித்ததிலிருந்து—1635-லிருந்து இன்று வரையில், நமது மாநிலத்தில் ஏற்பட்டுள்ள தொழில் வாணிபத்தின் வளர்ச்சியானது படங்களாலும், கவர்ச்சிச்சித்திரங்களாலும் மிகவும் தெளிவான முறையில் விளக்கப்பட்டிருந்தன. தனியார் நிறுவனங்கள் தயாரித்திருந்த பொருள்களும் அரங்கில் வைக்கப்பட்டிருந்தன. அத்துடன் அரசுக்குச் சொந்தமான சிறு தொழில் நிறுவனத்தின் பல்வேறு பகுதிகளில் தயாராகும் பொருள்களும் அரங்கினை அலங்கரித்தன. கைத்தறிப் பிரிவினரும் அழகானதொரு அரங்கினை ஏற்பாடு செய்திருந்தனர். இதற்கடுத்தாற்போல் அமைந்திருந்தது விலங்கின வளர்ப்புத் துறையாகும். கால்நடைகள் கோழி வளர்ப்பு பற்றிய நவீன கால முறைகள் விளக்கிக் காட்டப்பட்டிருந்ததுடன், விலங்கினச் செல்வத்தைப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய அவசியம் மிக நல்ல முறையில் வலியுறுத்திக் காட்டப்பட்டிருந்தது. இவைகள் அத்தனையும் படங்கள் மூலமாக, மிக அழகாகவும், தெளிவாகவும், மனதில் பதியும்படியாகவும் விளக்கிக் காண்பிக்கப்பட்டிருந்தன. அடுத்தது, மீனளத்துறை. அவ்வரங்கினைப்பார்க்கும் ஒவ்வொருவரும் இந்த மாநிலத்தில் மீன்போன்ற கடல் செல்வங்களின் செழிப்பு, அந்தச் செல்வத்தை அடைய பயன்படுத்தப்படும் விசைப்படகுகள் பற்றியெல்லாம் மிகவும் தெளிவாக அறிந்து கொள்ளமுடியும். கடல் முத்துக்கள் போன்ற பல்வேறு கடலில் கிடைக்கும் பொருள்களை விற்கும் அரங்குகளை எப்பொழுதும் மக்கள் மொய்த்துக் கொண்டேயிருந்தனர். விற்பனைக்குச் சொல்லவும் வேண்டுமா?

அடுத்துள்ள மின்சாரப் பகுதியில், மாநிலத்தில் உள்ள மின்விசை நிலையங்களின் மாதிரி அமைப்புகள் காட்சி அளித்துக்கொண்டிருந்தன.

நீர்ப்பாசனப் பிரிவில் மாநிலத்தில் உள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள், அழகாகவும் இயற்கையாகவும், காட்சி அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்தன. கடைசியாக, செய்தித்துறை அரங்கு அமைந்திருந்தது. தமிழகத்தின் பழம்பெருமைகளும் கலாச்சாரச் சிறப்புகளும், இவ்வரங்கினில் மிக அழகான முறையில் விளக்கப்பட்டிருந்தன.

**இலட்சக் கணக்கான மக்களின் பாராட்டு**

உலகத் தொழில் கண்காட்சியினைப் பார்க்க வந்த இலட்சக்கணக்கான மக்களும், கண்காட்சியில் பங்கேற்றிருந்த மிகச் சிறந்த அரங்குகளில் "தமிழக அரங்கு" எல்லோரும் தவறாமல் கண்டுகளிக்க வேண்டிய சிறப்பான ஒன்றாகும் என்று பாராட்டியிருப்பர் என்பதில் ஐயமில்லை. கண்காட்சியைப் பார்க்க வந்த பிரமுகர்கள் அத்தனைபேரும் கண்டு பாராட்டிய அரங்குகளில் தமிழக அரங்கு முன்நின்றது எனலாம். பல இலட்சக்கணக்கான மக்கள் பொருட்காட்சியினைக் கண்டுகளித்தனர். மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள், வெளிநாட்டுப் பிரமுகர்கள், தொழில் அதிபர்கள், வியாபாரிகள், மாணவர்கள் என்று சமுதாயத்தின் பல்வேறுபட்ட துறையினர் கண்காட்சியினைக் கண்டுகளித்தனர்.

தமிழக மக்களுக்கு, தமிழ்நாடு அரங்கு பெருமை அளிக்கும் ஒன்றாகும். தமிழகத்தின் வெளியிலிருந்து வந்தவர்களுக்கோ, எப்படி அரங்கு அமைக்கவேண்டும் என்பதற்கு அது ஓர் எடுத்துக்காட்டு. வெளிநாட்டுக்காரர்களுக்கோ, அது நாட்டின் முன்னேற்றத்தை எடுத்துக்காட்டும் கண்ணாடி.

—o—

# சீரிய பணியாற்றும் நகராட்சிகள்

## சேலம் நகராட்சி

1. சேலம் மாநகராட்சி ஒரு பேருந்து வண்டி நிலையம் நடத்தி வருகிறது. பேருந்து வண்டி நிலையத்தில் 8 அறைகள் கொண்ட விடுதி இருந்தது. நகரம் வெகு விரைவாக முன்னேறி வருவதாலும் பேருந்து வண்டி நிலையத்தில் பொது மக்களின் போக்குவரத்து அதிகரித்து வளர்வதாலும் மக்களின் நன்மையை கருதி நகராட்சி மேலும் 14 அறைகள் மேல் மாடியில் நல்ல வசதிகளுடன் கட்டியுள்ளது. இந்த அறைகள் உந்து வண்டி நிலையத்திலேயே இருப்பதால் சுற்றுப்பயணக்காரர்களுக்கு மிகவும் பயனுள்ளதாயுள்ளது.

2. சேலம் நகராட்சியின் ஒரு பயணர் விடுதி (கிருஷ்ண ராஜேந்திர சத்திரம்) ஏற்கனவே சேலம் மார்கெட் ரயில்வே ஸ்டேஷன் அருகில் இருந்து வருகிறது. இது பழமையானதாக உள்ளது. ஆகவே நவீன வசதியுடன் ஒரு பயணர் விடுதியை நகராட்சி கட்ட விரும்பியது. அவ்வாறே ஹஸ்தம் பட்டியில் நகராட்சிக்கு சொந்தமான நிலத்தில் ரூ. 99,000 செலவில் நவீன வசதிகளுடன் கூடிய புதியதாக ஒரு பயணர் விடுதியை கட்டி முடித்தது. இந்தப் பயணர் விடுதி மைய அரசின் சுற்றுலா, விமானப் போக்குவரத்து அமைச்சர் திரு. கரன்சிங் அவர்களால் 29-12-1967-ம் தேதி திறந்து வைக்கப்பட்டது. இது நான்கு அறைகளைக் கொண்ட மேல்மாடிக் கட்டிடம். உல்லாச பயணிகள் இதை மிகவும் விரும்பும வகையில் அமைந்துள்ளது.

## ஆம்பூர் நகராட்சி

ஆம்பூர் நகராட்சியினால், நிறைவேற்றப்பட்டுள்ள, நிறைவேற்றப்படவிருக்கும் திட்டங்களின் விவரம்.—1. ஆம்பூர் நகர சலவைத் தொழிலாளர்களின் உபயோகத்திற்காக 14,500 ரூபாய் செலவில் பாலாற்றங்கரை ஓரம் ஒரு சலவைத்துறை (Dhobi khana) கட்டப்பட்டு 24-12-67-ம் தேதியன்று மாண்புமிகு தமிழக சட்டமன்ற அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

ஆம்பூர் நகரில் பிராட் பஜார் என்னும் பகுதி வியாபார முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மக்களின் வசதியை முன்னிட்டு ரூபாய் 32,000 மதிப்பீட்டில் 30 கடைகள் கட்டி வாடகைக்குவிட திட்டமிடப்பட்டு, வேலை நடைபெற்று வருகிறது. இவ்வேலை முடியும் தறுவாயில் இருக்கிறது.

இந்நகரின் நீண்ட நாளைய தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் ரூபாய் 40 லட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டது. 8-5-1967-ம் தேதிய 790 எண்ணுள்ள பொது நலத்துறை அரசினர் ஆணையில் அக்குடிநீர் திட்டத்திற்கு அங்கீகாரம் அளித்து ரூபாய் 40 லட்சம் நகராட்சிக்கு கடனாக வழங்க ஒப்புக் கொள்ளப்பட்டது. 13-12-67-ம் நாளன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு அண்ணாதுரை அவர்களால் அக்குடிநீர் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

## விழுப்புரம் நகராட்சி

1919-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதி தோற்றுவிக்கப்பட்ட இந்நகராட்சி தற்பொழுது இரண்டாந்தர நகராட்சியாக திகழ்கின்றது.

இந்நகராட்சி, பேருந்து நிலையமொன்றை நல்ல முறையில் பேணி வருகின்றது. அண்மைக் காலத்தில் இந்நகர், வணிகம், தொழில்துறை ஆகியவைகளில் வளர்ச்சி பெற்று வருகின்ற காரணத்தால், வெளிநகரங்களிலிருந்து, வருவோர், போவோர்களின் எண்ணிக்கை மிகுந்து அவர்களுக்கு வசதியான தங்கும் அறைகள் தேவை ஏற்பட்டு வருகின்றது. இத்தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் தனியார் தங்கும் வாடகை அறை விடுதிகள் சில இருப்பினும், நகர் மையத்தில் அமைந்துள்ள நகராட்சி பேருந்து நிலையத்தில் தங்கும் அறைகள் கட்டி, வாடகைக்கு விட்டால் நகராட்சியின் பொருளாதார வசதியை பெருக்க உதவும், அத்துடன் பயணிகளுக்கு வசதியாக இருக்கும் என இந்நகராட்சி மன்றம் எண்ணி தங்கும் வாடகை அறைகள் கட்ட முடிவெடுத்தது.

மொத்தம் ஏழு அறைகளைக் கொண்ட இப்பேருந்து நிலைய தங்கும் அறைகள் ரூபாய் 20,870 செலவில் கட்டி முடிக்கப்பட்டது.

இப்பேருந்து நிலைய தங்கும் அறைகள் கொண்ட விடுதி, 11-9-1967-ல் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணாதுரை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தமிழக முதலமைச்சர் நகராட்சியின் முயற்சியினைப் பாராட்டி, பேருந்து நிலையங்களில் இத்தகு அறைகள் அமைப்பது குறிப்பாக பயணிகளுக்கு மிக்க வசதியாய் இருக்குமெனக்கூறி இம்மாதிரி நகராட்சியின் வருவாயைப் பெருக்க வேண்டியதின் அவசியத்தையும் வலியுறுத்தினர்.

தவிர பயணிகளுக்கு வசதியாக பேருந்து நிலையத்தில் குளிக்கும் அறைகள், தேவையான வசதிகளுடன் கட்டப்பட்டு வருகின்றன.

இந்நகராட்சி மன்றம் பயணர் விடுதி யொன்றினை நல்ல முறையில் நடத்தி வருகின்றது. இவ்வகையில் முதல் முயற்சியாக இந்நகராட்சி இந்த பயணர் விடுதி யிடத்தில் நெடுதூரம் பிரயாணம் செய்யும் பயணிகள் சிறிது நேரம் இளைப்பாறி உணவருந்திச் செல்ல வசதி யாக சிறிது நேர இளைப்பாறும் விடுதி (Rest A while shed) ஒன்று கட்டப்பட்டு, குறைந்த வாடகையை வசூ லித்து வருகிறது. இது பயணிகளின் கவனத்தைப் பெ ரிதும் ஈர்க்கும் வகையிலும், முக்கிய வசதியாகவும் இருந்து வருகிறது.

## கோவில்பட்டி நகராட்சி

இந் நகரம் 1967-ம் ஆண்டு எப்ரல் மாதம் முதல் தேதி முதல் ஊராட்சியிலிருந்து நகராட்சியாக மாற்றப் பட்டது. நகராட்சியின் முக்கிய பணிகளான நகரத் தண்ணீர்த் திட்டம், சுகாதார வசதி, சாலை வசதி, கல்வி வசதி, பொது அறிவு வசதிகள் மற்றும் பிரயாண வசதிகளைச் இந் நகராட்சி மேற்கொண்டு செய்து வருகிறது.

### குடிதண்ணீர் வசதி

எவ்வித நிரந்தர பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி திட்டமும் இல்லையாகையால், அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு சுமார் 80 லட்ச ரூபாய் செலவாகுமென எதிர்பார்க்கப்படும் நிரந்தரத் திட்டத்தின் பரிசீலனை வேலைகளுக்கு இந் நகராட்சி ரூ. 27,500 செலுத்தியது. பொதுச் சுகாதாரப் பொறியியல் துறையினரால் ஆரம்ப வேலைகள், திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அரசு ஒப்புதலுக்கு அனுப்பப்படவுள்ளது.

இந் நகராட்சி யோசனைப்படி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறையினரால் இடைக்காலக் குடிதண்ணீர் நிவாரணத் திட்டம் ஒன்று இந் நகராட்சிக்கு தயாரிக்கப் பட்டது. அத் திட்டச் செலவின் முழுத் தொகையான ரூ. 2,76,000 இந் நகராட்சி நிதியிலிருந்து பொதுச் சுகாதாரப் பொறியியல் துறையினருக்கு செலுத்தப்பட்டு மேற்படி துறையினரால் அவ் வேலையில் முதல் கட்டம் துவங்கப்பட்டுவிட்டது. இதற்கிடையில் இந் நகராட்சி ரூ. 18,651 செலவில் 20 கிணறுகளை ஏற்படுத்தியுள்ளது. நகரில் தண்ணீர் விநியோக வசதிக்காக இரண்டு டிராக்டர்கள் & டிரெய்லர்களுடன் ரூ. 37,325 செலவிலும் இரண்டு டேங்கர் டிரெய்லர்கள் ரூ. 22,120 செலவிலும் வாங்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இந் நகராட்சி பராமரிப்பிலுள்ள 34 கிணறுகள் ரூ, 27,796 செலவில் ஆழப்படுத்தி பராமரிப்புச் செய்யப்பட்டுள்ளது. 93 குழாய்க் கிணறுகளில், 23 கிணறுகள் தானேயங்கும் மோட்டார்களாக ஆக்கப்பட்டுள்ளதையும், பராமரித்து வருகிறது. ரூ. 15,200 செலவில் ஏழு இரும்பு டேங்குகள் நகரின் முக்கிய இடங்களில் நிறுவப்பட்டு தண்ணீர் சேமிக்க உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. ரூ. 7,516 செலவில் இரண்டு டீசல் என்ஜின்கள் வாங்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. நகரில் கடுமையான தண்ணீர் பஞ்சம் நிலவிய காலத்தில் தூத்துக்குடித் துறைமுகத் திட்ட லாரி, தீயணைப்புத் துறை லாரிகள் வாடகை முறையில் ரூ. 5,630 செலவில் நகரில் தண்ணீர் விநியோகம் செய்ய ஏற்பாடுகள் செய்யப் பட்டன.

### சுகாதார வசதி

இந் நகரின் சுகாதார வசதியை முன்னிட்டு ரூ. 41,895 செலவில் ஒரு புதிய லாரி வாங்கப்பட்டு உபயோக படுத்தப்பட்டு வருகிறது. கழிவு குப்பைகளை உரமாக்க 3 சதுர ஏக்கர் நிலம் ரூ 1,143 செலவில் வாங்கப்பட்டு குழிகள் வெட்டப்பட்டு வருடத்திற்கு சுமார் 1,500 மெட்ரிக் டன் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்படுகிறது. கட்டாய அம்மை தடுப்பு ஊசி போடும் முறை நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மலேரியா ஒழிப்புத் திட்டமும் நடைபெற்று வருகிறது. அதற்கென ஊழியர்கள் தனித்தனியாக உள்ளனர். பாதாள சாக்கடைத் திட்டம் இந் நகராட்சியில் இல்லையெனினும் கட்டுமான சாக்கடைகளை ரூ. 26,220 செலவில் பராமரிப்பு செய்யப்பட்டது. மேலும் இந் நகராட்சி மூலம் ஒரு தாய் சேய், நல விடுதி நிறுவி அதனைப் பராமரித்து வருகிறது. மேலும் மூன்று விடுதிகள் விரைவில் திறக்கப்பட உள்ளன. நகரில் தேங்கியுள்ள சாக்கடை தண்ணீரை வெளியேற்ற உறிஞ்சு பம்பு ஒன்று டிராக்டருடன் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### கல்வி வசதி

ஊராட்சி ஒன்றியத்தினால் ஓர் உயர் ஆதாரப் பள்ளிக் கூடமும், ஓர் ஆதாரப் பள்ளியும், பத்து செகண்டரி கிரேடு, மூன்று ஹையர் கிரேடு ஆசிரியர்களுடன் இந் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டது. இப்போது புதிதாக 3 இடங்களில் நகராட்சி மூலமாக பள்ளிகூடம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இப்போது 24 ஹையர் கிரேடு ஆசிரியர்களும், 8 செகண்டரி கிரேடு ஆசிரியர்களும் பணியாற்றி வருகின் றன்ர், பள்ளிக்கூடங்களுக்கு கூடுதல் இடவசதி மின்சார இணைப்பு வகைகளுக்காக ரூ. 14,900 செலவிடப் பட்டுள்ளது. மேலும் வருடாந்திர பராமரிப்பாக ரூ. 1,069 செலவழிக்கப்பட்டுள்ளது. மேலும், சுமார் ரூ. 75,000 செலவில் கட்டிடங்கள் நகராட்சி உயர் ஆதாரப் பள்ளியில் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எல்லா பள்ளிகளிலும் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. வருடாவருடம் நகராட்சிப் பள்ளிக்கூட ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் புத்தகம் கொடுக்கப்பட்டு வருகிறது.

—:o:—

# இகழ்ச்சி புகழ்ச்சியாயிற்று!

அது ஒரு சிறிய கிராமம். காடுகளால் சூழப்பட்ட அக்கிராமம் பசுமையான தோற்றத்துடன் விளங்குகிறது. 1955-ம் ஆண்டு வரை, அக்கிராமம் உலகத்தோடு எவ்வித தொடர்பும் இல்லாமலேயே இருந்தது. 1956-ம் ஆண்டில் இவ்வூர் வாசிகள் நாட்டில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியைக் கண்டு விழிப்புற்று செயல்படத் தொடங்கினர். இக்கிராமத்தின் பெயர் ஷான்சுனியா. இது ஒரிசா மாநிலத்திலுள்ளது.

கிராமத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல விரும்பிய அம்மக்கள், முதலில் குடிநீர் பிரச்னைக்கு ஒரு தீர்வுகாண விரும்பினர். அதற்கென அரசை அணுகியதில், அரசும் ஒரு குளம் வெட்டிக் கொள்வதற்கு மானியம் வழங்க, அனுமதி வழங்கியது. ஆனால் அதற்கு முதலில் நன் கொடை வசூலிக்க வேண்டுமே! எனவே அவர்கள் நன்கொடை வசூலிப்பதில் மும்முரமாக ஈடுபடலாயினர்.

### இசை தந்த நன்கொடைகள்

ஆரம்ப காலங்களில் இவர்களின் நேர்மையான உழைப்பிற்கு பல தடைகள் இருந்தன. வயது முதிர்ந்த கிராம மக்களில் பலர், கிணறு தோண்டுவதற்கு பணம் எங்கிருக்கிறது என்று வினவினர். ''நாம் முதலில் நம்முடைய நன்கொடைகளை சேகரித்த பின்புதான், அரசிடமிருந்து மானியம் கேட்க முடியும்'' என்று இளைஞர்கள் கூறினர். நன்கொடை வசூலிப்பது அவர்களுக்கு மிகவும் சிரமமாக இருந்தது. எனினும் அவர்கள் மனம் தளர்ந்து விடாமல், முயற்சி செய்தவண்ணமிருந்தனர். இசைக் கருவிகள் கொண்டு பாட்டுப் பாடியே பல இடங்களிலும் நன் கொடைகளை வசூலித்தனர்.

இதன் பின் அவர்கள் குடிநீருக்கு கிணறு தோண்டினர். வெகு ஆழமாகத் தோண்டிய பின்னரே அவர்களுக்கு சுத்தமான நல்ல குடி தண்ணீர் கிடைத்தது. இந்த கிராம மக்களின் ஆர்வமிக்க பணி அந்த வட்டாரத்துணை அதிகாரியின் கவனத்தைக் கவர்ந்தது. ஆனால் அவர் இக்கிராமத்திற்கு வருவதற்கு கார் வண்டி போகக்கூடிய சாலைகள் இல்லாததால், அவர் நடந்தே வந்து இவர்களின் முயற்சியை நேரில் வந்து பார்வையிட்டார்.

கூட்டுறவு முறையினால் அரிய சாதனைகளைச் சாதிக்க முடியும் என்பதை இப்பொழுதுதான் அவர்கள் உணர்ந்தனர். அவர்களின் சாதனை மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுத்துள்ளது. அவர்கள் தங்களுடைய கிராமத்தை சிறந்த முறையில் விளங்கச் செய்வதற்கு தற்போதுள்ள ஆர்வமும் ஊக்கமும் குறைந்து விடாமல் இருக்கும்படி பல பயனுள்ள பணிகளைச் செய்து வந்தனர். அவர்களுக்கு அடுத்துத் தோன்றிய பிரச்னை பள்ளிக்கூடக் கட்டிடம் கட்டவேண்டும் என்பதாகும். பள்ளிக்கூட கட்டிடம் கட்டுவதற்கு நிதி வசூலிப்பது மிகவும் சிரமமானதாக இருந்தது. ஆனாலும் அவர்கள் அனைவரையும் நேரில் சென்று நிதியுதவி கேட்டதனால், மக்களும் தாராளமாக இதற்கு உதவி செய்தனர். மக்கள் அளித்த நிதியுதவியோடு அரசின் மானியத்தையும் கொண்டு பள்ளிக் கட்டிடம் கட்டி முடிக்கப்பெற்றது. கட்டிடம் முடிந்தவுடன் எந்த ஆசிரியர் இந்த பள்ளியை நடத்துவது என்ற கேள்வி எழுந்தது. உடனே அந்தக் கிராமத்து இளைஞர்களில் ஒருவர் இந்த வேலையை ஊதியம் ஒன்றும் இல்லாமல் தானே செய்ய முன் வருவதாகக் கூறினார். சமுதாய வளர்ச்சி அதிகாரிகள் இந்தப் பள்ளிக்கூடத்தை அங்கீகரித்து ஆசிரியர்களை நியமிக்கும் காலம் வரை அதாவது ஓராண்டு காலம் வரை—அந்தக் கிராமத்து இளைஞரே பாடம் கற்பித்து வந்தார்.

ஷான்சுனியா கிராமத்து மக்களில் பெரும் பகுதியினர் மூட நம்பிக்கை கொண்ட விவசாயிகளாக இருந்ததால், அவர்கள் பரம்பரையாக பின்பற்றி வந்த சாகுபடியையே செய்து வந்தனர். அவர்கள் நவீன விவசாய முறைகளைப் பின்பற்றும்படி செய்வது கிராம சேவகர்களுக்கு மிகவும் சிரமமான பணியாக இருந்தது. அவர்களுக்கு நவீன முறையில் வரிசையாக நாற்று நடுவது, ரசாயன உரங்களை இடுதல் கலவையுரக்குழி வெட்டுதல் போன்றவை கூட தெரியாமல் இருந்தன. தற்போதைய விவசாய முறைகளைப் பின்பற்றும்படி அவர்களிடம் சொன்னால், அவர்கள் விவசாயத்திற்கு அதிகமாக செலவழிப்பதைப் பற்றி கேலி செய்தனர். திரு சடபதி என்பவர் நவீன விவசாய முறைகளை பின்பற்றியதினால், அக்கிராம மக்களின் இகழ்ச்சிக்கு உட்பட்டார். ஆனால் இவரைப் பழித்துக் கூறியவர்கள், இவர் அதிகமாக நெல் அறுவடை செய்ததைக் கண்ட பின்னர் தங்களின் பழிச் சொல்லை நிறுத்தினர். ஆனாலும் கொஞ்ச காலம்தான் இந்த நிலை நீடித்தது.

அவர்களில் ஒருவரான திரு பிஸ்வால் என்பவர் நவீன முறையில் அதிக விளைச்சல் கொடுக்கும் வகையைச் சேர்ந்த உருளைக்கிழங்கு முள்ளங்கி, முட்டைக் கோஸ் ஆகியவற்றைச் சாப்பிட்டு பெரும்பான்மையான கிராம மக்கள் வயிற்று வலியால் துன்புறப் போகிறார்கள் என்று கேலியாகக் கூறிவந்தார். இதன் நன்மையைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டுமேயல்லாது உடனே இதைஎல்லோரும் பயிரிடக்கூடாதுஎன்றும் குறிப்பிட்டார். பெரும்பான்மை மக்களின் ஆர்வம் இந்த வகைப் பயிர் முறையை ஆதரித்ததனால் திரு பிஸ்வாலும் அவரைப் போன்றவர்

களின் மூடநம்பிக்கையும் வெகு நாட்கள் நிலைக்கவில்லை. அவர்கள் பேசிய இகழ்ச்சிச் சொற்களெல்லாம் நாளடைவில் புகழ்ச்சியாயின.

இக்கிராம மக்கள் கூட்டுறவு முறைப் படி செயல் ஆற்றுவதற்கு தாங் களாவே முன் வந்தனர். மாநில அரசு தேர்ந்தெடுத்துக் கூறிய உயர் விளைச்சல் விதைகளை உபயோகிக்கத் தொடங்கினர். காய்கறிகளைப் பயிர் செய்து நல்ல வருமானம் அடைந் தனர். குளத்திற்கு பக்கத்திலிருந்த நிலங்கள் தரிசாக காட்சி தராமல் இருக்க பழங்கள் தரும் மரங்களையும் பூச்செடிகளையும் பயிரிட்டு பசுமையான தோற்றத்தை ஏற்படுத்தினர்.

**வானொலிச் செய்தி, சாலை அமைக்க உதவியது.**

இவர்களின் தற்போதைய முன் னேற்றமெல்லாம் ஓர் ஆரம்பம் என்றே கூறவேண்டும். இந்தக் கிராம மக்கள் ஒரு நாள் மாலையில் கட்டாக் வானொலி நிலையத்திலிருந்து ஒலி பரப்பாகிய அகில இந்திய வானொலி நிகழ்ச்சியைக் கவனமாக கேட்டுக் கொண்டிருந்தனர். ஒரு குறிப்பிட்ட கிராமத்தில், மக்களின் கூட்டு முயற்சியினால் எவ்வாறு ஒரு சாலை அமைக்கப்பட்டது என்பதைப் பற்றிஅன்றைய நிகழ்ச்சியில்விவரித்துக் கூறப்பட்டது. இதைக் கேட்டுக் கொண் டிருந்த அக்கிராமத்து இளைஞர்கள் நாமும் சாலை அமைப்போம் என்று கூறினார்கள். எந்தக் காரியத்திற்கும் வழக்கமாக தடைசொல்லிக் கொண் டிருப்பவர்கள், இதற்கும், தடை சொன்னார்கள். ‘‘நாம் ஏன் கார், வண்டி, சைக்கிள், வைத்திருப் பவர்களின் நன்மைக்காக சாலை அமைக்கவேண்டும்?’’ என்று வாதம் செய்தனர். இதனுடன் சாலை அமைப் பதில் இன்னொரு தடையும் ஏற்பட்டது. மக்கள் தங்களுடைய நிலத்தையும் உழைப்பையும் இனமாகக் கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டபோது, குழப்பமே ஏற்பட்டுவிட்டது. இந்திய உழவர்கள் உயிரைக் கொடுத்தாலும் கொடுப்பார்களே தவிர, தங்கள் நிலத் தைக் கொடுக்கமாட்டார்கள் என்று சொல்லப்படுவதுண்டு. இந்திய விவ சாயிகள் நிலத்தின் மேல் அதிக பற்று உள்ளவர்கள் என்பதை அறிந்த கிராமத்து இளைஞர்கள் தங்கள் முயற்சியை கைவிட்டுவிடாமல் பாடுபட்டு வந்தனர். சீனப்படையெடுப் பின் போது அமைக்கப்பட்ட, கிராமத் தொண்டர் படை, அதனுடைய உழைப் பைத் தந்து, சாலை அமைப்பில் மிகுந்த கவனம் செலுத்தியது. அத் தருணத்தில் மக்களின் ஒத்துழைப் பையும் அத்தொண்டர் படை பெற முடிந்தது.

தேசீய கீதத்துடன் சாலை அமைக் கும் வேலை ஆரம்பமாயிற்று. நல்ல முறையில் ஆரம்பித்தது போலவே, சாலை அமைப்பு வேலை, நன்றாக முடிவு பெற்றது. இக்கிராம மக்கள் தங்களின் சாதனையைப் பற்றிய விபரங் களை சாலையின் ஆரம்பத்தில் பெயர் பலகையில் எழுதி வைத்துள்ளனர். அவர்களுக்கு இந்த முயற்சி சிறிய செயலாகத் தோன்றவில்லை. கூட்டுறவு முயற்சியின் பயனாக ஏற்பட்ட நினைவுச் சின்னம் என்றே அவர்கள் இச்செயலைக் கருதுகின்றனர். இந்தச் சாதனை அக்கிராம மக்களுக்கு புதிய தாக ஏற்படுத்தப்பட்ட ‘கோனாரக்’ கோயில் போலவே காட்சியளித்தது.

## கோழிகளுக்கு

உலக உணவுத் திட்டத்தின்கீழ் இந்தியாவிற்கு ரூ. 5 லட்சம் மதிப்புள்ள தானியங்கள் கிடைக்க விருக்கிறது.

இந்திய அரசிற்கும், அனைத்து நாடுகள் அவையின், உணவு, வேளாண்மை நிறுவனத்திற்கும் அண்மையில் ஏற்பட்டுள்ள ஓர் உடன்பாட்டின் விளைவே இந்த உதவியாகும்.

இந்த தானிய உதவியைப் பயன்படுத்தி, கோழிப் பண்ணை களை விருத்தி செய்யவும், அவற் றின் உணவில் புரதச்சத்தை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்நிறுவனம் ஐந்தாண்டு களில் வினியோகிக்கவிருக்கும் 50,000 டன் சோளத்தை நம் நாட்டு சோளத்தோடு கலந்து எல்லாச் சத்துக்களும் கலந்த சம உணவாக தயாரிக்கப்பட்டு, அவை கோழிப் பண்ணைகள் வைத்திருப்போருக்கு விலைக்கு விற்கப்படும்: இந்த முறையில் லாபமோ, நஷ்டமோ, இல்லாத வாறு, பண்ணைகளின் உரிமை யாளர்களுக்கு இத்திவனம்அளிக் கப்படும்.

## சம உணவு

## கால்நடைகளுக்கு அகத்திக் கீரை

ஒரு வரிசையில் நடப்பட்ட 40 அல்லது 50 அகத்தி மரங்கள் கால் நடைகளுக்கு ஒரு நாளைக்கு தேவையான பசுமையான கால் நடை தீவனங்களை ஆண்டு முழு தும் கொடுக்கிறது. அகத்தி மரம் ஆண்டு முழுதும் கால் நடை தீவனங்களை தருவதால் விவசாயிகள் அனைவரும் பயி ரிட்டு பலன் அடையலாம். அகத்தி சத்துள்ள கால்நடை தீவனமாக இருப்பதை விவசாயிகள் அறிந் திருந்தும், இதை ஒரு சில விவ சாயிகள்தான் கால்நடைகளின் உணவுக்கென பயிரிடுகிறார்கள்.

வட இந்தியாவில் கால் நடை தீவனத்திற்காக பயிரிடப்படும் ஒரு வகைச் செடியைக் காட் டிலும், அகத்தியில் புரத சத்து அதிகமிருக்கிறது. அகத்தியில் வைட்டமின் ஏ என்ற உயிர் சத்தும் மலிந்திருக்கிறது. ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று கிலோ அகத்திக்கீரை ஒரு கால்நடைக்கு போதுமானது. இதைவிட அதிகமாக அகத்திக் கீரை உணவாகக் கொடுத்தல் விரும்பத்தக்கதல்ல.

# சிறந்த ஊராட்சி

திரு சாந்தன் சிங் என்பவர் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பாங்கிலி ஊராட்சி ஒன்றியத்தில் கிராம சேவக்காக பணியாற்றுகிருர். இவர் எளிமைத் தோற்றமுடைய ஓர் இளைஞர்தான். பணியாற்றும் பகுதியிலுள்ள மக்கள் செழிப்புடனும் வளத்துடனும் வாழ்வதையே தன்னுடைய மகிழ்ச்சியாகக் கருதுகிருர். ஒரு கிராம சேவக் தன்னுடைய பணியில் சிறந்து விளங்க வேண்டுமானல், அவர் தன்னுடைய கடமையில் பற்றுள்ளவராக விளங்க வேண்டும். திரு சாந்தன் சிங் அவர்கள் இத்தகைய கடமைப் பற்றும் சேவை மனப்பான்மையும் நிரம்பப் பெற்றவராக இருக்கிருர். இவருடைய இதயம் எப்பொழுதும் அப்பகுதி மக்களின் முன்னேற்றத்தையும், அவர்களின் செழிப்பான வாழ்க்கையையும் பற்றிய சிந்தனையிலேயே இருக்கிறது. அவருடைய ஒளி பொருந்திய கண்கள் அவரின் ஆர்வத்தையும் விருப்பத்தையும் புலப்படுத்துகின்றன.

இவருடைய அயராத உழைப்பும், கடமைப் பற்றும் பாங்கிலி ஊராட்சி மக்களை விழிப்படையச் செய்துள்ளன. கிராம மக்கள் தங்களது சோம்பல் தன்மையிலிருந்தும், செயல் அற்ற நிலையிலிருந்தும் விழிப்புற்று பொருளாதார வளர்ச்சியில் தங்களின் கவனத்தைச் செலுத்தத் தொடங்கியுள்ளனர்.

### கிராம சேவக்தான் காரணம்.

இராஜஸ்தான் மாநில அளவில் நடைபெற்ற போட்டியில் திரு சாந்தன் சிங் சிறந்த கிராம சேவக்காகவும், அவர் பணியாற்றிய பாங்கிலி கிராமமே சிறந்த ஊராட்சியாகவும் பாராட்டப் பெற்றுள்ளன. இவருக்கு கிடைத்த பாராட்டைக் குறிப்பிட்டு இவருக்கு வாழ்த்துக் கூறியபோது இவர் அதை அடக்கத்துடன் ஏற்றுக்கொண்டார். இந்த ஊராட்சித் தலைவர், இவரைப் பற்றி பெருமைகொள்வதோடு; இக்கிராமத்திலுள்ள மூவாயிரம் மக்களின் வளமான வாழ்வுக்கு இந்த கிராம சேவக் தான் காரணமாக இருந்தார். என்றும் கூறுகிருர். ஆனல், கிராம சேவக்கோ தான் ஒன்றும் செயற்கரிய செயல்களை செய்யவில்லை, என்றும், இந்த நிலைமைக்கு காரணமாக அமைந்தவர்கள் விவசாயிகளே என்றும் பதிலுரைத்தார். விவசாயிகள் தங்களது ஆலோசனையின்படி, திறம்பட உழைத்ததன் விளைவே, தற்போதைய வளத்திற்கு காரணம் என்று மேலும் தெரிவித்தார்.

பாங்கிலி ஊராட்சி எல்லா வகையிலும் மிகவும் பிற்பட்ட பகுதியாக இருக்கிறது. இங்கு வாழ்கின்ற மக்களில் பெரும் பகுதியினர் விவசாயிகள். இவர்கள் பழமையான விவசாய முறைகளைப் பின்பற்றி விவசாயம் செய்வதால், இரண்டு வேளைச் சாப்பாட்டிற்கே மிகவும் சிரமப்படுகிருர்கள். 1961-ம் ஆண்டில் திரு சாந்தன் சிங்கை கிராம சேவக்காக இக்கிராமத்தில் பணியாற்ற நியமித்த பின் பழைய நிலைமைகள் வெகுவாக மறையத் தொடங்கின.

### லேன்மேன் விவசாயியானர்

அவருடைய எண்ணங்களுக்கு துணை செய்யும் முறையில் மறு ஆண்டிலேயே குஜராத் மாநிலத்திலுள்ள பாரோடா மாவட்டத்திலிருந்து இரண்டு விவசாயக் குடும்பங்கள் பாங்கிலி கிராமத்திற்கு பிழைப்பிற்காக குடியேறின. அவர்களை கிராம சேவக் முதலாவதாக சந்தித்து நவீன விவசாய முறைகளைக் கடைப்பிடித்து விவசாயம் செய்யும்படிக் கேட்டுக் கொண்டார். இந்த விவசாயிகளும் இவரின் ஆலோசனைகளுக் கேற்ப நவீன விவசாய முறைகளைப் பின்பற்றினர்கள். அதன்பிறகுதான் பாங்கிலி கிராம மக்களும் நவீன விவசாய முறைகளைப் பின்பற்றி விவசாயம் செய்யத் தலைப்பட்டனர். நீர்ப்பாசன வசதியில்லாமல் பெரும்பான்மை நிலங்கள் இருந்தன. இதனல் இக்கிராமத்திலுள்ள 8,403 ஏக்கரில் 5928 ஏக்கரில்தான் சாகுபடி செய்ய முடிந்தது. இதில் மூன்றில் இரண்டு பங்கு நிலங்களுக்குத்தான் பாசன வசதி கிடைத்தது. சென்ற ஆண்டு

# சிறந்த கிராம சேவக்

பெய்த மழையினால் அணைக்கட்டுகளில் அதிகமாக நீர் வந்து நிரம்பப் பெற்றது. இதனால் கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்து பாசனத்திற்கு அதிகமாக நீர் இறைக்க முடிந்தது. நீர்ப்பாசனத்திற்கு குழாய்க்கிணறுகள் பல ஏற்படுத்தப்பட்டதினால், பாங்கிலி கிராமத்தில் முன்னால் இருந்ததைவிட இரண்டு மடங்கு பாசன வசதி தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. மிகக் குறைந்த ஆழத்தில் தண்ணீர் இருப்பதை இக்கிராம மக்கள் கண்டு பிடித்தனர். அதனால் 1,000 சதுர கெஜ நிலத்தில் ஆறு கிணறுகள் தோண்டினார்கள் இவற்றிலிருந்து ஏராளமான நீர் குறைந்த ஆழத்திலிருந்தே கிடைத்தன. இக் கிராம மக்கள் தண்ணீரைப் பணம் போல் கருதுகின்றனர். வாய்க்கால் மூலமாக பாசனம் செய்வது இக்கிராம மக்களை வெகுவாகக் கவர்ந்திருக்கிறது. குஜராத் மாநிலத்திலிருந்து இக் கிராமத்தில் குடி புகுந்தவரான திரு சன்வார்பாய் அடுத்த காரிப் பருவத்திற்குள் எல்லா வாய்க்கால்களையும் முழுமையாக கட்டி முடித்துவிடுவதாக உறுதி கொண்டுள்ளார்.

இவர் மின் விசை ஆயத்தில் லேன் மேனாகப் பணியாற்றியவர். ஐந்து ஆண்டுகளுக்கு முன் இப் பதவியை விட்டு விலகி, அக்கிராமத்தில் உழவராக குடியேறியவர். இவரிடம் "நீங்கள் ஏன் அரசாங்க வேலையை விட்டு, விவசாயத்தில் ஈடுபட்டீர்கள்?" என்று கேட்கையில், "இதில் சுதந்திரத்திற்கும் அடிமை தன்மைக்கும் நிரம்ப வேறுபாடுண்டு" என்று குறிப்பிட்டார். மேலும் இவர், இளைஞர்கள் அனைவரும் அரசாங்க வேலையை விரும்பிச் சென்றால், அனைவருக்கும் வேலை கொடுக்க முடியுமா என்றும் கேட்டார். இவரோடு சேர்ந்து வந்து இக்கிராமத்தில் குடியேறியவரான திரு தயாபாய் என்பவர் தமது மணற்பாங்கான நிலத்தின் பாசன வசதிக்காக ஒரு மைல் நீளமுள்ள சிமெண்ட் குழாய் ஏற்படுத்தியிருக்கிறார்.

### அதிக அளவில் உரம்

இக்கிராம மக்கள் ரசாயன உர உபயோகங்களை நன்கு உணர்ந்து அவற்றை அதிக அளவில் பயன்படுத்தி வருகிறார்கள். இவர்களின் தேவைக்கு வேண்டிய ரசாயன உரங்கள் சென்ற ஆண்டில் இவர்களுக்கு கிடைக்கவில்லை. அதனால் இவர்கள் கலவை உரங்களையும். தொழு உரங்களையும் பயன்படுத்தி, தங்களது தேவையைப் பூர்த்தி செய்துகொண்டனர். இவர்கள் யூரியா என்ற உரத்தையும் தங்களின் வயல்களுக்கு பயன்படுத்துகிறார்கள்.

இந்தப் பகுதிகளில் பருத்தி அதிகமாக உற்பத்தியாகிறது. பாங்கிலி கிராம மக்கள் இந்த ஆண்டு 700 ஏக்கர் நிலத்தில் பருத்தி சாகுபடி செய்திருக்கிறார்கள். இவர்கள் ரசாயன உரங்களையும் பூச்சி மருந்துகளையும் பயன்படுத்தி வருவதால் மிகுந்த அளவில் பருத்தி விளைச்சல் இந்த ஆண்டில் கிடைக்கும் என்று நம்புகின்றனர். தங்கள் நிலத்தை சீர்திருத்தும் வேலைக்காகவும் அவற்றின் நீர்ப்பாசனத்திற்காகவும் வாங்கிய கடனை இந்த ஆண்டு பருத்தி மகசூலில் திருப்பிச் செலுத்திவிடுவோம் என்று உறுதியாகக் கூறுகிறார்கள்—இந்த விவசாயிகள்; இங்குள்ள விவசாயிகளின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு கிராம சேவக்கான திரு சாந்தன்சிங்கின் தளரா உழைப்பும், விவசாயிகளை அபிவிருத்தி திட்டங்களில் ஈடுபடும்படி தூண்டியதுமே முக்கிய காரணங்களாக அமைவன. இந்த கிராம சேவக் ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் உதவியோடு, ஊராட்சிகளின் பல்வேறுபட்ட வளர்ச்சித் திட்டங்களின் வளர்ச்சிக்கு பல குழுக்களை அமைத்தார். இந்தக் குழுக்கள் ஒவ்வொன்றும் பயிரிடுதல், பயிரைப் பாதுகாத்தல், ரசாயன உரங்களை விநியோகித்தல் போன்ற வேலைகளை தனித்தனியே கவனித்துக்கொண்டன. இவ்வாறு பருத்திச்செடிகளின் பாதுகாப்பிற்காகவும் மூன்று பேர் கொண்ட துணைக்குழு ஏற்படுத்தப்பட்டது. இந்தக்குழு பருத்தி வளர்ச்சியில் ஆர்வம் காட்டி அதிக உற்பத்திக்கு வழி கோலியது.

### நீர், மண் சோதனைகள்

இங்குள்ள 100 ஏக்கர் நிலங்களுக்கு வரப்புகள் ஏற்படுத்தப்பட்டன. இவை பாசன வசதிக்கும், மண் அரிப்பை தடுப்பதற்கும் பயன்படுகின்றன. இக் கிராமத்திலுள்ள நிலங்களின் விலை அதிகரித்துக்கொண்டே போவதால், இவர்கள் மண் பாதுகாப்பிற்காக பல முறைகளைக் கையாண்டு வருகின்றனர். கிராமவாசிகள் அனைவரும் நவீன அறிவியல் முறைகளைப் பின்பற்றி சாகுபடி செய்வதால் தங்களது நிலத்திற்கு எந்த வகை ரசாயன உரம் பெரும் பயனைக் கொடுக்கும் என்று ஆராய்ச்சி செய்வதற்காக 287 மாதிரி மண் வகைகளை பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பியுள்ளனர். இதே போன்று நீரிலும் சோதனை செய்வதற்காக 130 வகைகளை சோதனைக்கு அனுப்பியுள்ளனர்.

திரு சர்தார் சிங் என்ற ஆசிரியர் தனது வேலையை விட்டுவிட்டு, விவசாயத்தை தனது தொழிலாக்கிக் கொண்டார். ரசாயன உரங்களுக்காகவும், பயிர் பாதுகாப்பிற்காகவும் பொறுக்கு விதைகளுக்காகவும் செலவழித்துள்ள பணம், நல்ல பயன் கொடுக்கும் மூலதனங்கள் என்று விவசாயிகள் தற்போது கருதுவதாக திரு சர்தார்சிங் கூறுகிறார். "கண்ணியமுள்ள ஆசிரியர் தொழிலை விட்டுவிட்டு நீங்கள் ஏன் கடின உடல் உழைப்பு செய்ய வேண்டிய விவசாயத்தை மேற்கொண்டீர்கள்?" என்று சர்தார் சிங்கை கேட்டபோது இவர் தனக்கு இந்த வாழ்க்கையில் தான் மகிழ்ச்சியிருக்கிறது என்றும் இதை தாழ்வாக நினைக்கவில்லை என்றும் குறிப்பிட்டார். இப்பகுதிவாழ் விவசாயிகள் பொருளாதார வளர்ச்சியுற்று சிறந்து விளங்குவதுதான் தமது குறிக்கோள் என்று இவர் மேலும் கூறினார்.

# புதுவாழ்வு - புது சூழ்நிலை

ஜோத்பூர் நகரப் பகுதியிலிருந்து ஆறு மைல் தூரத்தில் மாண்டூர் என்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற கோட்டையின் அழிந்த பகுதிகள் காணப்படுகின்றன. ஜோத்பூருக்கு வரும் உல்லாசப் பயணிகள் பார்க்கவேண்டிய இடங்களில் மாண்டூர் தனியிடத்தைப் பெறுவதோடு, இது இந்தியாவில் சிறந்த கவர்ச்சி மிகுந்த தோட்டங்களும் இயற்கை அழகு மிகுந்த பகுதிகளும் நிறைந்த இடமாக விளங்குகின்றன. மேலும் ஜோத்பூர் ஊராட்சி மன்றத்தின் தலைமையிடம் சமீப காலமாக மாண்டூரில் இருந்து வருவதோடு இந்த ஊராட்சி மன்றம் சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் சிறந்த பணியாற்றி வருவதாக புகழ்மாலை சூட்டப்பட்டுள்ளது. ஜோத்பூர் ஊராட்சி மன்றம் 1959-ம் ஆண்டில்தான் ஏற்படுத்தப்பட்டது. இந்தப் பகுதியின் முக்கிய உணவுப் பொருட்களான சோளம், கோதுமை, கம்பு ஆகியவை இங்கு விளைவிக்கப்படுகின்றன.

விவசாய வளர்ச்சியில் இந்த ஊராட்சி மன்றம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்திருக்கிறது. இந்த ஊராட்சி மன்றம் தொடங்கிய நாட்களில் இங்கிருந்த மொத்த சாகுபடி நிலம் 3,631 ஏக்கர் மட்டுமே. ஆனால் இப்பொழுது இது 4,000 ஏக்கர் வரை உயர்ந்துள்ளது. விவசாயத்தைப் பெருக்குவதற்கு ரசாயன உரங்கள் வினியோகிக்கப்படுகின்றன. இந்த ஊராட்சி மன்றம் 1958—59-ம் ஆண்டில் நான்கு டன் ரசாயன உரம் மட்டுமே விவசாயிகளுக்கு வினியோகித்தது. ஆனால் இது 1966-67-ஆம் ஆண்டில் 125 டன்னாக உயர்ந்தது.

ஜோத்பூர் நகரின் காய்கறித் தேவைகளை மாண்டூர் ஊராட்சி மன்றம் நிறைவேற்றி வருகிறது. விவசாயிகளின் வேளாண்மைச் செலவினங்களுக்கு இந்த ஊராட்சி மன்றம் உதவி செய்வதோடு, விவசாயிகளின் பயிர்களை, பூச்சி மற்றும் இதர நோய்களிலிருந்து பாதுகாப்பதற்கும் மன்றம் உதவி செய்து வருகிறது. தவிர 620 ஏக்கர் நிலங்களுக்கு சென்ற ஆண்டு பயிர் பாதுகாப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. விவசாயிகளின் நன்மையைக் கருதி பல கிராமங்களில் விவசாயக் கண்காட்சிகளை இந்த ஊராட்சி மன்றம் ஏற்படுத்தி வருகிறது. சென்ற ஆண்டு ஒரு கிராமத்தில் கோதுமை பயிரைப் பற்றி ஒரு கண்காட்சி ஏற்படுத்தி, அதன் வாயிலாக கோதுமை பயிர் செய்யும் விவசாய நுணுக்கங்கள் விளக்கிக் காட்டப்பட்டன.

இந்த ஊராட்சியின் முன்னோடித் திட்டங்களில், கால் நடை வளர்ப்பிற்கு தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. ஒவ்வொரு ஊராட்சிக்கும் இரண்டு பொலி காளைகள் கொடுக்கப்பட்டுள்ளன. நூறு பசுக்களுக்கு ஒரு பொலி காளை கொடுக்கும் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. 26 இடங்களில் செம்மறி ஆடு வளர்ப்பு நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளதோடு செம்மறி ஆட்டு இனங்களில் 64 வகை வினியோகம் செய்யப்பட்டிருக்கின்றன. இது தவிர முர்ரா இனத்தைச் சேர்ந்த ஐந்து எருமை மாடுகளையும் இந்த ஊராட்சி வினியோகித்துள்ளது. மேலும் 66 கோழிப் பண்ணைகளை ஏற்படுத்தியிருப்பதோடு கால் நடைகளுக்கு தடுப்பு ஊசிகளும் போட்டு அவற்றின் வளர்ச்சிக்கு ஆவன செய்யப்பட்டுள்ளது. கால் நடை பராமரிப்பைப் பற்றி விளம்பரம் செய்வதற்காக, அகில இந்திய கால்நடை கண்காட்சிக்கு இந்த ஊராட்சி மன்றம் ஏற்பாடு செய்தது. இந்தக் கண்காட்சிக்கு பஞ்சாப், உத்திர பிரதேசங்களிலிருந்தும் கால் நடைகளைக் கொண்டு வந்திருந்தார்கள். இந்தக் கண்காட்சியில் மொத்தம் 5,108 கால் நடைகள் பங்கெடுத்துக்கொண்டன.

மக்கள் சமூக பொருளாதார நிலைகளில் முன்னேற வேண்டுமானால், கூட்டுறவு முறையினால்தான் விரைவில் முன்னேற முடியும் என்பதை ஜோத்பூர் ஊராட்சி தெளிவாக அறிந்துள்ளது. இதனுடைய ஊக்கத்தினாலும், உதவியினாலும், தற்போது பல்வேறுபட்ட கூட்டுறவுச் சங்கங்களில் 93 நிறுவனங்கள் பணியாற்றி வருகின்றன. இந்த ஊராட்சி மன்றம் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான பணம் கடனாக கொடுத்திருக்கிறது. மாண்டூர் பகுதிகளில் மக்களின்

அறியாமையைப் போக்குவதிலும் இந்த ஊராட்சி மிகவும் வெற்றி பெற்றிருக்கிறது. முதியோர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்களுக்கு கல்வி அறிவு கொடுத்து வருகிறது. இதனுல் இப்பகுதியில் வசிக்கும் சிறுவர், சிறுமியர்கள் பெருமளவில் கல்வி கற்று தங்களது அறியாமையைப் போக்கிக்கொண்டுள்ளனர். மேலும் இந்த ஊராட்சி மன்றப் பள்ளிகளில் விளையாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து, விளையாட்டையும் பாடத்திட்டத்தில் சேர்த்திருக்கிறது. இதனுல் ஏழு இடங்களில் பெரிய விளையாட்டு நிலையங்கள் ஏற்பட்டுள்ளது. சிறப்புத் தகுதிகளோடு விளங்கும் விவசாயிகளுக்கும் மாணவர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டிலும் பரிசு வழங்கும் திட்டம் ஒன்று ஏற்பட்டுள்ளது. கிராம ஊராட்சிகள் அனைத்தும் சாலை வசதிகளால் இணைக்கப்படவேண்டுமென்று, இந்தச் சமிதி பேராவல் கொண்டிருக்கிறது. இத் திட்டப்படி தற்போது பதினாறு கிராம ஊராட்சிகள் சாலைகளால் இணைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த ஊராட்சி எல்லா வளர்ச்சி வேலைகளிலும் சிறந்து விளங்குவதற்கு இதில் வேலை செய்யும் எல்லா அலுவலர்களின் ஊக்கமும் ஆர்வமுமே யாகும். அனைவரும் பாராட்டும் அளவிற்கு இவ்வூராட்சி முன்னேறியிருக்கிறதென்றுல் அதற்கு முக்கிய காரணங்களாக இருந்த திரு தௌலத் ராம் சௌத்ரியை குறிப்பிடாமல் இருக்க முடியாது. திரு ராம் மற்றும் அவரோடு பணியாற்றிய அலுவலர்களையும் ஜோத்பூர் ஊராட்சி மறக்க முடியாது. இவர்கள்தான் இப்பகுதி மக்களுக்கு புது வாழ்வும், புதுச் சூழ்நிலையும் ஏற்படுத்தியவர்கள். வருங்காலச் சந்ததியினர் இவர்களை நன்றியோடும் மதிப்போடும் தங்கள் நினைவில் வைத்துக்கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

# சோள மாவு ஆலை

வேளாண்மை தொழில் வளர்ச்சி கார்பரேசன் இந்தியாவின் முதல் சோள மாவு ஆலையை மகாராஷ்டிர மாநிலத்தில் ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது. இந்த இயந்திரத்தினுல் சோளத்தை மாவாக்கவும், சோள ரவா, சோளத் தவிடு முதலியவற்றை உற்பத்தி செய்யவும் முடியும். சோளத்திலுள்ள எண்ணெய்ச் சத்துக்களை தனியேப் பிரித்து, உயர்ந்த ரகத்தைச் சேர்ந்த உணவிற்கு பயன்படும் எண்ணெய் தயாரிக்கப்படவிருக்கிறது. சோளத்திலிருந்து செய்யப்படும் மாவு, ரவா, முதலியவை கோதுமையிலிருந்து செய்யப்படும் உப உணவுப் பொருட்களுக்கு மாற்றுப் பண்டங்களாக அல்லது அதையொத்த தன்மையுடையதாக இருக்கும்.

பூனுவிற்கு அருகில் நிறுவப்பட இருக்கிற இருபது லட்சம் ரூபாய் மதிப்புள்ள இத்தொழிற்சாலை, ஒரு நாளில் 100 டன் சோளத்தை மாற்றுப் பண்டங்களாக தயாரிக்கும் உற்பத்தித் திறன் உள்ளதாக இருக்கும். மனித ஆற்றலைப் பயன்படுத்தி கோதுமையை மாவாக (ஆட்டாவாக) மாற்றுவதற்கு, ஒரு கிலோவிற்கு 10 பைசா ஆகிறது. ஆனுல் இந்த இயந்திரத்தினுல் அதே பொருட்களை தயாரிப்பதற்கு ஒரு கிலோவிற்கு 3½ பைசா மட்டுமே செலவு ஆகிறது.

ஒட்டுச் சோளப் பயிர் சுமாரான வளமுள்ள நிலங்களில்கூட பயிர் செய்ய இயலுவதால், சோளத்தின் உற்பத்தியானது ஓர் ஏக்கரில் விளையும் கோதுமை உற்பத்தியைக் காட்டிலும் அதிகமாகவே இருப்பதால், சோளம் அரைக்கும் இயந்திரங்களை வளர்ச்சி செய்வது நாட்டில் தனி முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. 1965-66-ல் 40,000 ஏக்கரில் பயிர் செய்யப்பட்ட வீரிய ஒட்டுச் சோளத்தை, அடுத்த ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளில் 4,00,000 ஏக்கரில் பயிரிட மகாராஷ்டிர அரசு முயற்சி செய்து வருவதாகத் தெரிகிறது.

அந்த சிறுவன் சில ஆண்டுகளாக பிறரது பண்ணைகளிலேயே வேலை செய்து வந்தான். ஆண்டுகள் உருண்டன ; சிறுவன் இளைஞனானான். அப்போதும் அவன் வயல்களிலேயே உழைத்த வண்ணமிருந்தான். ஆனால் ஒரு சிறு மாற்றம். .. அப்போது குத்தகைக்கு விவசாயம் செய்தான். 1952-ம் ஆண்டு பிறந்தது. அவன் வாழ்க்கையிலும் ஒரு புதிய ஒளி உதயமாயிற்று. குத்தகைக்கு விவசாயம் செய்த அதே நிலங்களை—34 ஏக்கர்—அவன் விலைக்கு வாங்கிவிட்டான். அந்த உழவன் திரு துக்காராம் ஹரி பாடில்'..

# ஓயாத உழைப்பு

திரு துக்காராம் ஹரி பாடில், மகா ராஷ்டிர மாநிலத்திலுள்ள புல்தாணா மாவட்டத்தைச் சார்ந்தவர். தலாதா என்னும் கிராமத்திலே அண்மையில் ஒரு பழத் தோட்டத்தை ஏற்படுத்தியுள்ளார். அதில் மத்திய உள்துறை அமைச்சர் திரு சவான் ஒரு திராட்சைக் கொடியை நாட்டி, திரு பாடிலை வெகுவாகப் பாராட்டினார்.

**உழைக்கப் பிறந்தவர் பாடில்....**

தமது சாதனைகளுக்கெல்லாம் இறைவனின் கருணைதான் காரணம் என்கிறார். தெய்வ பக்தியுள்ள திரு பாடில்—இரண்டு இலட்ச ரூபாய் மதிப்பிற்கு பண்ணையைப் பெற்ற இவர்—எளிமையான உடையணிந்து, இனிமையாக உறவாடுபவர். எப்போதும் வயல்களில் வேலை செய்த வண்ணமிருப்பார்.

திரு பாடில் தொடக்கத்தில், 34 ஏக்கர் நிலத்தை வாங்கி, அதன் வளர்ச்சிக்காகத் தமது சேமிப்பு அனைத்தையும் செலவழித்தார். மண் அரிப்பை தடுப்பதற்காக வரப்புகள் கட்டினார். மறு ஆண்டே பாசனத்திற்காக கிணறு தோண்டினார். தமது நிலத்தில் ஏழு ஏக்கரை பாசனத்திற்கு கொண்டு வந்து, பல வேறு பயிர்களைச் சாகுபடி செய்தார். நல்ல பாசன வசதியிருந்ததால் மிகு விளைச்சலைப் பெற்றார் விரைவிலேயே மின் வசதி அவர் கிராமத்திற்கு கிடைத்துவிட்டதால், மின்சார மோட்டார் ஒன்றை விலைக்கு வாங்கி, அதன் வாயிலாக நிலையான பாசனத்திற்கு வழி செய்து விட்டார். இதனால் அமோக விளைச்சல் ஏற்பட்டு, மிகுந்த ஆதாயம் அவருக்குக் கிடைத்தது. இவர் தன்னுடைய நிலத்தில் பொதுவாக கோதுமை, சோளம், மிளகாய் ஆகியவற்றை சாகுபடி செய்தார். தவிர, தமது நிலத்தோடு சேர்ந்திருந்த இன்னொரு 8 ஏக்கர் நிலத்தையும் விலைக்கு வாங்கினார். இவர் அதை வாங்கும் போது அந்நிலம் தரிசாகவே இருந்தது. தனது பழைய நிலங்களை முன்பு சீர்திருத்தியது போன்றே இதையும் செம்மைப்படுத்தி, இதில் ஒரு கிணற்றை தோண்டியதோடன்றி ஓர் ஆயில் எஞ்சினையும் பொருத்தி விட்டார். பருத்தி, வேர்க்கடலை, மிளகாய் ஆகிய வர்த்தகப் பயிர்களை இந்நிலத்தில் பயிரிட்டார். தமது மேற்பார்வையில் பண்ணை இருக்க வேண்டுமென்பதற்காக, ஒரு வீட்டையும், கால்நடை கொட்டகை ஒன்றையும் தனது பண்ணையிலேயே அமைத்துக் கொண்டார். பெருகிவரும் தமது வருவாயிலிருந்து மேலும் ஒரு மின் சார மோட்டார் வாங்கினார்.

வாழைத் தோட்டம் போட வேண்டுமென திட்டமிட்டு, அதன் பாசனத்திற்கென மேலும் ஒரு கிணறு வெட்டினார். இதனால் இவர் முதன் முறையாக கூட்டுறவு வங்கியில் கடன் பெற வேண்டியதாயிற்று. ஆனாலும் கடனை திருப்பிச் செலுத்திவிட்டார்.

வேளாண்மை வளர்ச்சி நிறுவனம் அனுமதித்த ரூ. 7,000த்தை வைத்துக்கொண்டு திராட்சை சாகுபடி செய்யத் தொடங்கினார். முதல் ஆண்டு இரு ஏக்கரில் திராட்சை சாகுபடி செய்தார். மறு ஆண்டில் மேலும் ஒரு ஏக்கரை திராட்சை சாகுபடியின் கீழ் கொண்டு வந்தார். இவ்வாறு திராட்சை சாகுபடிக்கு ரூ. 50 ஆயிரம் முதலீடு செய்துள்ளார். தமது தோட்டத்தில் பல்வேறு திராட்சை இனங்களைச் சாகுபடி செய்வது மட்டுமின்றி, இவர் பழத் தோட்டங்களில் ஆரஞ்சு, எலுமிச்சை முதலிய பழங்களும் உற்பத்தி செய்யப் படுகின்றன.

**வளமான வாழ்வு**

இவர் தமது நிலத்திலேயே இருபதுக்கு மேற்பட்ட உரக்குழிகளையும், ஓர் ஆழமான உரக்கிடங்கையும் அமைத்தார். இந்த உரக்கிடங்குகளில், பண்ணையிலிருந்து கிடைக்கும் எல்லா கழிவுப் பொருட்களையும் போடுவதால் அது கலவையுரமாக மாறிவிடுகிறது. இதன் வாயிலாக 200 வண்டி உரங்கள் கிடைக்கின்றன. இதோடு ஒவ்வொரு ஆண்டும் சுமாராக எட்டு டன் அமோனியம் சல்பேட், ஐந்து டன் சூப்பர் பாஸ்பேட், மூன்று டன் நைட்ரோ பாஸ்பேட், இரண்டு அல்லது மூன்று டன் ரசாயன உரங்களான யூரியா முதலியவற்றை தமது நிலத்திற்கு இடுகிறார்.

"உங்களுக்கு ஆண்டொன்றிற்கு எவ்வளவு இலாபம் கிடைக்கிறது

என்று கேட்டபோது இவர் தலையை தாழ்த்திக் கொண்டு, "எனக்கு வரவிற்கும் செலவிற்கும் சரியாகப் போய்விடுகிறது" என்று கூறுகிறார்.

இவருக்குச் சொந்தமாக நான்கு கிணறுகள், ஒரு மின்சார மோட்டார், ஓர் ஆயில் என்ஜின் ஆகியவை பண்ணையிலிருக்கின்றன. இரண்டு மாடி வீடுகள் இருப்பதோடு, கிராமத்திலும் இவருக்கு ஒரு வீடு இருக்கிறது. அதன் மதிப்பு ரூபாய் 25,000 ஆகும். இவை தவிர, இவருக்கு ஒரு எருமை, மூன்று பசுக்கள், ஏழு எருதுகள் ஆகியவை உள்ளன.

### ஆண்டிற்கு ரூ. 50 ஆயிரம் வருவாய்

நான்கு குழந்தைகளுக்கு தந்தையான திரு பாடிலின் மூத்தமகன் கோபால், தந்தைக்கு பெரும் உதவியாக இருக்கும் பொருட்டு, பள்ளிப் படிப்பை விட்டு தந்தையோடு இருக்கிறார். இவரது இரண்டாவது மகன் ஏகாநாத், விவசாயக் கல்லூரியில் பட்டம் பெற்று, விவசாய மேற்பார்வையாளராக, ஆசல்கான் பண்ணையில் வேலை செய்கிறார். இவரது மூன்றாவது மகன், கல்லூரியிலும் நான்காவது மகன் பள்ளியிலும் படித்து வருகின்றனர். திரு பாட்டில் தன் மக்களைப் பற்றிக் கூறும் போது "என்னுடைய வயல்கள் எவ்வாறு நல்ல, வருமானம் கொடுக்கிறதோ அதே போன்று என் மக்களும் எனக்கு நல்ல புகழைக் கொடுப்பார்கள், என் மக்கள்தான் என்னுடைய மூலதனங்கள்" என்று பெருமையாகக் கூறுகிறார். இவருடைய பண்ணையிலிருந்து இவருக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ. 50 ஆயிரம் நிகர வருவாய் கிடைக்கிறது.

# கிராம மனித சக்தித் திட்டம்— ஓர் ஆய்வு


திட்ட மதிப்பீடு நிறுவனம், மனித சக்தித் திட்டங்கள் பற்றிய மதிப்பீட்டு அறிக்கையில், மனித சக்தித் திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் பகுதிகள், வேலை இல்லாதவர்கள், போதுமான வேலை வசதி இல்லாதவர்கள் இருக்கும் பகுதிகள் எவை என்று ஆய்வு செய்து அறிந்து, அப்பகுதிகளில் இத்திட்டத்தை நிறைவேற்றவேண்டும். என்று குறிப்பிடுகிறது. மேலும் இந்த அறிக்கையின்படி, முழுவதும் வேலையில்லாத காலங்கள், போதுமான வேலையில்லாத காலங்கள் பற்றிய விவரங்களை குறிப்பிட்டுக் கூறினால், அந்த காலங்களுக்கு ஏற்ப மனித சக்தித் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று குறிப்பிடுகிறது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் பகுதிகளில் ஒரு பெரிய மனித சக்தித் திட்டத்தை வகுக்கவேண்டும். இவ்வாறு வகுக்கப்படும் பெரிய மனித சக்தித் திட்டத்தினால், சிறு சிறு, பொறியியல் நுட்ப அனுமதி வாங்கும் பிரச்னை நீங்குவதோடு, மனித சக்தித் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் மற்ற திட்டங்களையும் இணைத்து நிறைவேற்றலாம். இவ்வாறு ஏற்படுத்தப்படும் பெரிய மனித சக்தித் திட்டம் மாவட்ட அளவில் இருக்க வேண்டும். மாவட்ட அளவில் இருந்தால் தான் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் இதை விரிவு படுத்த வசதி ஏற்படும்.

திட்டங்களை நிறைவேற்றுதல், மேற்பார்வையிடுதல் போன்ற காரியங்களில், ஊராட்சிகள் அதிகமாக ஒத்துழைப்புத் தருகிறது என்பது பல திட்டங்கள் நிறைவேற்றியிருப்பதன் மூலம் தெரியவருகிறது, திட்டமிடுதலில் ஊராட்சிகளின் பங்கும், ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கும் திட்டங்களும் நான்கு மாநிலங்களில் தாம் அதிக அளவில் நடைபெறுகிறது. என்று அறிக்கை கூறுகிறது. குஜராத், மகாராஷ்டிர, ஒரிசா, ஆகிய மாநிலங்களில் இப்படிப்பட்ட கூட்டுறவு முறை ஏற்படுத்தப்படவில்லை. பஞ்சாப், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தும், இவற்றின் மூலம் எந்தக் கிராம வேலைத் திட்டமும் மேற்கொள்ளப்படவில்லை. இத்திட்டப் பகுதிகளில் வேலை வாய்ப்புகளை சீராக ஏற்படுத்த வேண்டுமானால், தற்போதுள்ள நிர்வாக மற்றும், அவற்றை நிறைவேற்றும்முறைகளைப் போதிய அளவு மாற்றி அமைக்க வேண்டுமென்று இந்தஅறிக்கை பரிந்துரைத்துள்ளது. இவ்வாறான பெரிய திட்டங்களை திட்டுவதிலும், அவற்றை நிறைவேற்றுவதிலும் ஊராட்சி நிறுவனங்களின் பங்கு அதிகமாக இருக்கவேண்டும். குறிப்பாக இந்த திட்டத்தில் பங்கு கொள்ளாத ஊராட்சிகள், இதில் அதிக கவனம் செலுத்தவேண்டும். ஊராட்சி அளவில் இப்படிப்பட்ட தீவிரபங்கு இருக்குமானால், இத்திட்டத்திற்குவேண்டிய வழி முறைகளும் ஊக்கமும், மேற்பார்வையும் உறுதியாகக் கிடைக்கும் என்று அறிக்கை வலியுறுத்துகிறது.



41

# தக்காளிப் பயிரில் மிகு விளைச்சல் அடைய



பெரிய, பெரிய தக்காளிப் பழங்கள் பார்ப்பதற்கு கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. அவற்றில் ஒரு தனிக் கவர்ச்சி இருப்பதோடன்றி, அவற்றிற்கு நல்ல விலையும் கிடைக்கக்கூடும். அதனால் வருவாயும் பெருகும்.

ஓர் எளிய முறையைப் பின்பற்றி தக்காளிச் செடிகளைப் பயிர் செய்வதனால், இவ்வித பெரிய அளவிலான தக்காளிகளைப் பெற்று, பெரிதும் பயனடையலாம்.

செடியிலுள்ள முக்கியத் தண்டை மட்டும் செழிப்புடன் வளரவிட்டு, அதன் கிளைகளை கிள்ளி எறிந்து விட்டால், மண்ணிலிருந்து கிடைக்கும் எல்லா சக்திகளையும் அத்தண்டே பெற்று, தக்காளிகளை பெருமளவில் தரும். இம் முறையில் செடியின் இலைகளுக்கு சிறிதளவே சக்தி விரயமாவதால் பெருமளவு சக்தி, பழங்களின் உற்பத்திக்கே பயன்படுகிறது.

இவ்வாறு பயிர் செய்வதால், தக்காளிகள் அதிக எடையுடன் காணப்படும். எனவே, அந்த சுமையை தண்டுகளால் தாங்கிக்கொள்வது எளிதன்று. அதற்காக, ஆறு அடி நீளமுள்ள மரக்கம்பை பூமியில் நட்டு அதனுடன் செடியை கட்டி விடவேண்டும்.

சாதாரண முறையில் பயிர் செய்யப்பட்டு கிடைக்கப்பெறும் தக்காளிகளை விட இவ்வித தக்காளிகள் மிக நன்றாக இருக்கும். ஏனெனில், சாதாரண முறையில் பயிர் செய்வதால், செடிக்கு போதிய சூரிய ஒளி கிடைப்பதில்லை. இதோடன்றி செடியின் கிளைகளும் பூமியைத் தொடுவதால், சில பழங்கள் நாசமாகிவிடவும் கூடும்.

தக்காளிப் பயிர்காலம் நெருங்குகிறது. அதிக தக்காளிகளைப் பயிர் செய்து, பெருமளவில் இலாபம் அடையுங்கள்.

—From "(Intensive Agriculture)"

---

"பஞ்சாயத்து ராஜ்" "இன்டென்சிவ் அக்ரிகல்சர்" இதழ்களிலிருந்து இடம் பெறுபவை :
பக்கங்கள் : 38 முதல் 46 வரை.
Articles reproduced from 'Panchayati Raj' on pages : 36 to 45 and from "Intensive Agriculture" Page 46

கிராம நலம் பகுதி-2
GRAMANALAM PART-2

# ஊராட்சி அரசிதழ்
# PANCHAYAT GAZETTE

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள் விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

———o———

## ஊராட்சிகளின் ஆய்வு, மேற்பார்வை அதிகாரிகளாக ஊராட்சி வளர்ச்சி அதிகாரிகள், நியமனம்—ஆணையிடப்படுகிறது.

## Act—Madras Panchayats Act 1958—Extension officers of Panchayats—Appointment as inspecting and superintending officers of panchayats in their respective jurisdiction—Ordered.

1958-ஆம் ஆண்டு தமிழக ஊராட்சிச் சட்டத்தின் (தமிழகச் சட்டம் 35/1958) பிரிவு 144-ல் உள்ள உட்பிரிவு (1)-ல் வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பயன் படுத்தி, வருவாய்க் கோட்ட அதிகாரிகள் மற்றும் கோட்ட ஊராட்சி அதிகாரிகள் ஆகியோருடன், வளர்ச்சி அதிகாரிகளை (ஊராட்சிகள்) யும் அவர்களது அலுவல் வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் ஆய்வு, மற்றும் கண்கா ணிப்பு அதிகாரிகளாக (Inspecting and Superintending officers) தமிழக ஆளுநர் அவர்கள் நியமிக்கிறார்.

[கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1968-ஆம் ஆண்டு பிப்ரவரி 26-ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 377-ன் சுருக்கம்]

✦ ✦

## உள்ளாட்சி நிறுவனங்கள்—தமிழில் பெயர்ப் பலகைகளை அமைப்பதற்கு விளக்க ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Local Bodies—Display of name boards in Tamil—Instructions—Issued.

நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகரியங்கள் மற்றும் இவற்றின் அதிகாரத்திற்குட்பட்ட நிறுவனங்களின், பெயர்ப்பலகைகள் தமிழில் இருக்க வேண்டுமென்று, 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் நாளிட்ட கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் அரசு ஆணை எண் 1352-ல் ஆணைகள் பிறப்பிக்கப் பட்டன. சிறுபான்மை மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் அதிகமிருக்கும் இடங்களில், பெயர்ப் பலகைகளை அந்த மொழியிலும் எழுதினால், அவர்கள் இந்த நிறுவனங்களை எளிதில் அறிந்துகொள்வதற்கு உதவியாக இருக்கும் என்று யோசனை கூறப்பட்டுள்ளது.

இந்த யோசனையை அரசு ஏற்றுக்கொண்டு அதற் கேற்ப, சிறுபான்மை மொழியைப் பேசும் மக்கள் சிறிதளவு மேம்பட்ட பகுதிகளிலுள்ள உள்ளாட்சி நிறுவனங்கள், மற்றும் அவற்றின் அதிகாரத்திற் குட்பட்ட நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளை தமிழில் எழுதுவதோடு அந்தப் பகுதியில் பேசப்படுகின்ற சிறு பான்மை மொழியையும் சேர்த்து பெயர்ப்பலகைகள் எழுதப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கிறது.

[கிராம வளர்ச்சி உள்ளாட்சித்துறையின் 1968-ஆம் ஆண்டு பிப்ரவரி 19-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 298-ன் சுருக்கம்.]

## சீரணி—1967-ம் ஆண்டில் சீரணித் திட்டத்தை நிறைவேற்றுதல்—விளக்க ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Prosperity Brigade—Implementation of Scheme in 1967—68—Procedure to be followed—Detailed instructions—Issued.

1967–68-ஆம் ஆண்டிற்குரிய நிதி நிலை அறிக்கையை தமிழக சட்ட மன்றத்தில் முதலமைச்சர் சமர்ப்பிக்கையில் கீழ்க்கண்டவாறு கூறினார்:—

தமது உழைப்பினை மனமுவந்து ஈந்திட பலப்பல ஆயிரவர் முன் வந்திடின், சமூகம் பெற்றிடக் கூடிய பயன், பெருமைதரத்தக்கதாக அமையும். 'எனக்காகவும் என் குடும்பத்துக்காகவும் செலவிட்டது போக, மிஞ்சியதில் ஒரு மணி நேரமாகிலும், நாட்டின் பொது நன்மைக்காகச் செலவிடுவேன்" என்ற உறுதி கொண்ட சில ஆயிரவர் தமது உழைப்புச் செல்வத்தைத் தந்திடின், சமூக மேம்பாடு வளர்ந்திடுவது உறுதி, இந்த ஆர்வம் கொண்டார், பல்லாயிரவர் உளர் என்ற நம்பிக்கையுடன், துவக்க கட்டமாக, மாவட்டத்துக்கு ஆயிரம் பேர் கொண்ட ஒரு சீரணியை அமைத்திடும் திட்டத்தை மேற்கொள்ள, அரசு முடிவு செய்திருக்கிறது.

2. இதுபோன்று தாமாகவே முன் வந்து செயல்படும் நிறுவனங்கள் பல்வேறு நாடுகளில் எவ்விதம் செயல்படுகிறது என்பதை அறியவும், அதன்பின் தமிழகத்தின் சமூக, பொருளாதார சூழ்நிலைகளுக்கேற்ப சீரணிப்படையை எவ்வாறு தொடங்கலாம் என்பன பற்றி ஒரு விபரமான திட்டத்தைக் கொடுப்பதற்காக, சீரணிப் படைக்கென ஒரு தனி அதிகாரி நியமிக்கப்பட்டார். தமிழகத்தில் சீரணிப்படையை அமைப்பது பற்றிய விளக்கமான திட்டத்தை அவர் சமர்ப்பித்துள்ளார்.

3 .. .. .. .. ..

4. சீரணி தனி அதிகாரியினுடைய பணிகள் தனித் தன்மை கொண்டதாக இருப்பதால், அவர் மாநில முழுவதிலும் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் ஓர் அதிகாரியாக இருப்பார். அவரது கடமைகளை நிறைவேற்றுவதற்கு (அவரின் முழுக் கட்டுப்பாட்டின்கீழ், ஓர் ஊர்தி (Vehicle) கொடுக்கப்படும். தமிழக அரசு தலைமைச் செயலகத் தளவில் பல திட்டங்களை உருவாக்க வேண்டியிருப்பதால், அவருக்கு கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையில் உதவிச் செயலாளரின் (தன் பதவியின் காரணமாக) பதவி அளிக்கப்படும்.

5. சீரணி செம்மையாக செயல்படுவதற்கு, மாநில நிர்வாக அமைப்பின் உதவி பெருமளவில் அதற்கு கிடைக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்களும், துறைத் தலைவர்களும், சீரணிக்கு அவசியத் தேவைகளான தொழில் நுட்ப நிர்வாக சம்பந்தமான அறிவுரைகள் கொடுத்திட வேண்டும். பொதுப் பணித்துறை அதிகாரிகளால் அளிக்கப்படும் தொழில் நுட்ப உதவிகள் மற்றும் இதர உதவிகளுக்கு எந்தவிதமான 'செண்டேஜ்' கட்டணமும் விதிக்கக் கூடாது.

6. தேவையான விளம்பர அட்டைகள், அடையாளச் சீட்டுகள் போன்றவற்றை அச்சிட்டு வினியோகிக்கும் பணியை தமிழக எழுது பொருள் அச்சக இயக்குநர் கவனிக்க வேண்டும்.

7. 1967—68 ஆம் ஆண்டில் இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்படும் செலவுகளை சரிக்கட்ட ரூ. 10,00,000 (ரூபாய் பத்து லட்சம்)க்கு அரசு அனுமதியளிக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர் உதவியாளர்களும் (ஊராட்சி வளர்ச்சி) தனி அதிகாரியும் உணவு போன்ற கட்டணங்களுக்கு ஆகும் செலவுகளைச் சரிக்கட்டுவதற்கு, தங்கள் மாவட்டங்களுக்கும் சென்னை மாநகருக்கும் ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து தேவைப்படும் பணத்தை, ஒரு சமயத்தில் ரூபாய் 3000-க்கு மேற்படாமல் முன் பணமாக எடுத்துக்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகிறது. இந்த முன் பணத்தை செலவழித்தது பற்றிய விவரமான செலவு அறிக்கையை இரசீதுகளோடு காட்டி, முதலில் வாங்கிய பணத்திற்கு கணக்கு காட்டி சரி செய்தபின்பு தான் இரண்டாவது முறை முன் பணம் பெற முடியும்.

* * * * * * *

8. சீரணி தனி அதிகாரி தமது அலுவலக வேலையை நிறைவேற்றுவதற்கு, உதவியாக இருக்கும் பொருட்டு பொதுவாக வைக்கப்பட்டிருக்கும் ஊர்திகளிலிருந்து ஓர் ஊர்தி (Jeep) கொடுக்கப்படும்.

9. உள்ளாட்சி நிதிகளின் ஆய்வாளர் (Examiner of Local Funds) சீரணிப் படையின் கணக்குகளை தணிக்கை செய்வார்.

10, 1967-ஆம் ஆண்டு ஜூலை முதல் நாளிலிருந்தே இந்த ஆணை அமுலுக்கு வந்ததாக கருதப்பட வேண்டும்.

* * * * * *

**[கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1968 பிப்ரவரி 16 ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 279 ன் சுருக்கம்.]**

## பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியத்திற்கு அலுவலர்கள் நியமனம்—ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Establishment—West Coimbatore Development District—Pollachi Development Block—Bifurcation into Town Panchayat, Development Blocks—Sanction of staff for Pollachi South Panchayat Union—Orders—Issued.

மேற்கு கோயம்புத்தூர் வளர்ச்சி மாவட்டத்திலுள்ள பொள்ளாட்சி ஊராட்சி ஒன்றியத்தை, வடக்கு பொள்ளாட்சி, தெற்கு பொள்ளாட்சி ஊராட்சி ஒன்றியங்கள் எனப் பிரித்து அந்த இரண்டு ஊராட்சி ஒன்றியங் களுக்கும் ஊராட்சி ஒன்றியக் குழுக்களை 2—10—1966 முதல் ஏற்படுத்துவதற்கான அறிவிப்பு ஒன்றையும் வெளியிட்டு கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 22—8—1966 நாளிட்ட அரசு ஆணை எண் 2026, மற்றும் 30—9—1966 அரசு ஆணை எண் 2320 ஆகிய வற்றில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. பொள்ளாட்சி வட்டாரத்தில் தற்போது பணிபுரியும் அலுவலர்கள் பொள்ளாட்சி வடக்கு வளர்ச்சி வட்டாரத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளப்படவேண்டும்.

பொள்ளாட்சி (தெற்கு) வளர்ச்சி வட்டாரத்திற்கு, கீழ்க் காணும் தற்காலிக அலுவலர்களை அவர்கள் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து 29—2—1968 வரை, அல்லது அவர்கள் தேவைப்படும் காலம் வரை, (இதில் எது முன்னால் ஏற்படுகிறதோ அதுவரை) நியமித்துக்கொள்வதற்கு அரசு இப்போது அனுமதியளிக்கிறது:—

வட்டார வளர்ச்சி அதிகாரி
ரூ. (250-15-400)—1

வளர்ச்சி அதிகாரி (விவசாயம்)
ரூ. (200-10-250-15-400)—1

வளர்ச்சி அதிகாரி (கால்நடை பராமரிப்பு)
ரூ. (225-10-275-15-425)—1

வளர்ச்சி அதிகாரி (கூட்டுறவு)
ரூ. (200-5-240-10-270)—1

வளர்ச்சி அதிகாரி (ஊராட்சிகள்)
ரூ. (140-5-220)—1

வளர்ச்சி அதிகாரி (கல்வி)
ரூ. (125-5-200-10-250)—1

கிராம சேவக்குகள் (முதல் நிலை)
ரூ. (125-5-175)—3

கிராம சேவக்குகள் (இரண்டாம் நிலை)
ரூ. (90-4-110-3-140)—7

(பட்டதாரிகள் ரூ. 102-லிருந்து தொடங்க வேண்டும்)

கிர்வாகி .. ரூ. (150-5-200)—1

கணக்கர் ரூ. (125-5-175)-ம் தனிச் சம்பளமாக ரூ. 15-ம்)—1

உதவியாளர்கள்
ரூ. (125-5-175)—2

ஊர்தி ஓட்டி
ரூ. (70-1-80)—1

3. மேற்காணும் பத்தி இரண்டில் குறிப்பிட்ட பதவி களுக்கு நியமிக்கப்படுவோர் அப் பதவிக்கு நேரில் விவரிக்கப்பட்டுள்ள விகிதப்படி ஊதியம் பெறவும், நடைமுறை விதிகளுக்கு ஏற்ப அகவிலைப்படி மற்றும் இதர படிகளையும் பெறுவதற்கு தகுதியுடையவராக அரசின் அனுமதியை எதிர்நோக்கி, சில அலுவலர்களை நியமித்துள்ள கிராம வளர்ச்சி இயக்குநரின் நடவடிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

4. பொதுப்பணித் துறையிலிருந்து நியமிக்கப்படும் ஊராட்சி பொறி இயலாளர் ஊராட்சி ஒன்றிய நிதியி லிருந்து ஊதியம் அளிக்கப்படும் இதர ஊழியர்கள் பற்றியும் முறையே பொதுப்பணித் துறை, கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையால் தனியே ஆணைகள் பிறப்பிக்கப் படும்.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 210-ன் சுருக்கம்.)

---

# தமிழகத்தில் நகராட்சி மன்றங்கள் தேர்தல்—ஆகஸ்ட் மாதம் தொடங்கும்

**"சென்னை மாநகராட்சித் தேர்தல் 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் நடைபெறும். மற்ற நகராட்சி மன்றங்களின் தேர்தல், மூன்று கட்டங்களாக நடைபெறும். 1968-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் கடைசி வாரம் முதல் அக்டோபர் மாதம் முதல் வாரம் வரை இந்தத் தேர்தல் நடைபெறும்.**

## நகர கலவையுரத்திட்டம்—1966-67-க்குரிய பரிசுத் திட்டம்—நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கு சுழற்கேடயம்

## Agriculture—Food production—Urban Compost Scheme—Best work in compost making—Competition for 1966-67—Award of rolling shields to Municipalities and Town Panchayats—Approved.

நகர கலவையுரத் திட்டத்தின் (Urban Compost Scheme) 1966–67-ஆம் ஆண்டிலே சிறந்த முறையில் பணியாற்றியுள்ள நகராட்சிகளுக்கு பெரிய சுழற் கேடயமும் பேரூராட்சிகளுக்கு சிறிய சுழற் கேடயமும் பரிசளிப்பது பற்றி விவசாய இயக்குநர் கூறியுள்ள யோசனையை அரசு ஏற்றுக்கொள்கிறது. அதற்கேற்ப கீழ்க்காணும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு சுழற் கேடயம் வழங்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(அ) நகராட்சிகள்—

| | |
|---|---|
| சிறப்புத் தரம், தேர்வுத் தரம். (Special and Selection grade). | மதுரை. |
| முதல் தரம் | திண்டுக்கல் (மதுரை மாவட்டம்) |
| இரண்டாம் தரம். | போடிநாயக்கனூர் (மதுரை மாவட்டம்). |
| மூன்றும் தரம். | திண்டிவனம் (தென்னார்க்காடு மாவட்டம்). |

(ஆ) பேரூராட்சிகள் (மாவட்ட வாரியாக வெற்றி பெற்றவர்கள்).

| | |
|---|---|
| தென்னார்க்காடு | நெல்லிக்குப்பம். |
| வடஆர்க்காடு | தாரபடவேடு. |
| தஞ்சாவூர் | சீர்காழி. |
| திருச்சிராப்பள்ளி | அரியலூர். |
| தர்மபுரி | ஓசூர். |
| கோயம்புத்தூர் | காங்கேயம். |
| மதுரை | சின்னமனூர். |
| திருநெல்வேலி | வாசுதேவநல்லூர். |

2. மாவட்டத்தின் தலைமையிடத்திலாவது, அல்லது மாவட்டத்திலேயே வேறோர் இடத்திலாவது ஒரு சிறப்பான விழாவிற்கு ஏற்பாடு செய்து அவ்விழாவில் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு கேடயங்களை பரிசளிக்குமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கேடயங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்களே பரிசாக அளிக்கலாம். அல்லது உயர்தர அதிகாரிகள் அல்லது ஒரு அமைச்சரைக்கொண்டு கேடயங்களை பரிசளிக்க விழாவிற்கு ஏற்பாடு செய்யலாம். பரிசளிப்பதற்குரிய கேடயங்களை விவசாய இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பி வைப்பார்.

(விவசாயதுறையின் 1967-ம் ஆண்டு நவம்பர் 4-ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 3070-ன் சுருக்கம்.)

✦ ✦ ✦

## ஊராட்சி ஒன்றியங்களில் "ஜீப்" வண்டிகளுக்கு பெட்ரோல் உச்ச வரம்பு—விளக்க ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Community Development Programme—Jeeps in Blocks—Normal consumption of petrol—ceiling fixed—Excess consumption—Ratification by Collectors—Instructions—Issued.

சமவெளிப் பிரதேசங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் ஒரு ஜீப் வண்டிக்கு மூன்று மாத காலத்திற்கு 900 லிட்டர் பெட்ரோலும், மலைப் பிரதேசங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள், மூன்று மாத காலத்திற்கு ஒரு "ஜீப்" வண்டிக்கு 1,100 லிட்டர் பெட்ரோலும் உபயோகப்படுத்தலாம் என்று உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டு கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1965-ஆம் ஆண்டு நவம்பர் 5-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2374-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் பெட்ரோலை உபயோகப் படுத்தியது பற்றிய ஒரு பருவ அறிக்கையை அவர்களிடமிருந்து பெற்று அதை மூன்று மாதங்களுக்கொரு முறை பரிசீலிக்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணையிடப்பட்டது. இந்த ஆணைகளை மதிக்காதிருக்கும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படியும், அதிக அளவில் பெட்ரோலை உபயோகித்திருந்தால், அதற்கான விலையை அவர்களிடமிருந்து வசூல் செய்யும்படியும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மேலும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2. மேற்கண்ட அரசு ஆணையில் நிர்ணயித்த உச்ச வரம்பிற்கு அதிகமாக பெட்ரோல் செலவு செய்யப்பட்டிருப்பதை பரிசீலித்து, ஒப்புதல் அளிக்க (Ratify) மாவட்ட ஆட்சித்

தலைவர்களுக்கு அதிகாரமளிக்கலாம் என்று யோசனை கூறப்பட்டுள்ளது. உண்மையாக அலுவலக வேலைகளுக்கு மட்டுமே ஜீப் வண்டிகள் பயன் படுத்தப்பட்டதால்தான் அதிக பெட்ரோல் செலவு செய்யப்பட்டிருக் கிறது என்றும், பெட்ரோல் தவறாக பயன்படுத்தப்படவில்லை என்ற அள விற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திருப்தியடைந்த பின்னர், அவ்வாறு அதிகமாக செலவழிந்த பெட்ரோ லுக்கு ஒப்புதல் அளிக்கலாம் என்று அரசு, ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. சாதாரண நிலையில், இந்த உச்ச வரம்பை மீறி பெட்ரோலைச் செலவழிக்கக் கூடாது என்று கடுமையான விளக்க ஆணைகளை அவர்களுக்கு பிறப்பிக்க வேண்டும். இந்த உச்ச வரம்பிற்கும் அதிகமாக பெட்ரோல் செலவு செய் திருந்து, அதுபற்றிய அவர்களின் விளக்கங்கள் திருப்திகரமாக இல்லா விடில், அவர்களிடமிருந்து அதற்கான தொகைகள் வசூலிக்கப்படும் என்றும், அவர்களை அறியச் செய்ய வேண்டும். அதிகமான பெட்ரோலைச் செலவழித்த தற்கு ஒப்புதல் அளிக்க வேண்டிய கோரிக்கைகளை மூன்றுவது மாதம் முடிந்த உடனேயே ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சமர்ப்பிக்கவேண்டும். இதில் கால தாமதம் ஏற்படுவது கடுமையான நடவடிக்கை எடுக்க காரணமாக அமையும்.

3. இந்தக் குறிப்பாணையில் அடங்கி யுள்ளவற்றை கோட்டாட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் அனைவரும் அறியும்படி செய்யவேண்டுமென்று கிராம வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண். 16648-ன் சுருக்கம்.)

**1965-ம் ஆண்டு தமிழக பொதுக் கட்டிடங்கள் (உரிமம் வழங்குதல்) சட்டம்— சிலவகைக் கட்டி டங்களுக்கு சட்டத்தினின்று விலக்கு அளித்தல்—திருத்தம் - வெளியிடப்படுகிறது.**

## Act—Madras Public Buildings (Licensing) Act, 1965—Exemption of Certain Categories of Buildings from the Provisions of the Act for the Period of three years—Inclusion in notification issued G.O. Ms. No. 2083 R.D. and L.A., dated 30-8-1966, Amendment—issued.

1965-ம் ஆண்டு தமிழக பொதுக் கட்டிடங்கள் (உரிமம் வழங்குதல்) சட்டத்திலிருந்து [Madras Public Buildings (Licensing) Act, 1965] சிலவகை கட்டிடங்களுக்கு விலக்கு அளித்து, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித்துறை யின் 30—8—1966 அரசு ஆணை எண் 2083 மற்றும் அதேத் துறையின் 22—11—1966 நாளிட்ட அரசு ஆணை எண் 2680 ஆகியவற்றில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. அரசு கவனமாக பரிசீலனை செய்தபின், முதற் கட்ட மாக, 1—4—1966 முதல், மூன்றாண்டுகளுக்கு கல்வி பயிலும் இடங்களில் அமைந்துள்ள கட்டிடங்களுக்கு விலக்கு அளிக்க முடிவு செய்துள்ளது.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 31—1—1968 நாளிட்ட அரசு ஆணை எண் 145-ன் சுருக்கம்)

**"ஊராட்சி" என்ற தலைப்பிலே, உயர்நிலைப் பள்ளிகளில் கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்துதல்—ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.**

## Essay and debating competitions on subject of "Panchayati Raj" in High schools during 1967—68—Conduct of—Orders—Issued.

உயர்நிலைப் பள்ளிகளிலும், உயர் இடைநிலைப் பள்ளி களிலும் ஊராட்சி பற்றி கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்துவதற்கு, மாநில அரசுகள் தகுந்த நடவடிக்கை கள் மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசின் உணவு, விவசாயம், சமுதாய வளர்ச்சி, கூட்டுறவு அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

2. இம்மாநிலத்தில், இத் திட்டத்தை இந்த ஆண்டும் நிறைவேற்றுவது என்று, தகுந்த பரிசீலனைக்குப் பின், அரசு முடிவு செய்துள்ளது. இத் திட்டத்திற்குரிய விவரங்களும், விளக்க ஆணைகளும் முந்தைய ஆண்டு களில் பிறப்பிக்கப்பட்டதுபோல இருக்கும். போட்டிகளுக் குறிய பொருள்கள் பின்கண்டவாறு அமையும்.

கட்டுரை—

(1) ஊராட்சியும் மக்கள் பங்கும்
(2) கிராமங்களில் மனித சக்தித் திட்டம்
(3) ஊராட்சி மற்றும் வேளாண்மை, கால்நடை வளர்ப்பு. மீன் வளம் ஆகியவை உட்பட்ட உற்பத்தித் திட்டம்.

பேச்சுப் போட்டி—

(1) கிராம வளர்ச்சித் துறையின் சாதனைகள்.
(2) ஊராட்சி முழு வெற்றியடைவதற்கு உங்களின் கருத்துக்கள்.
(3) ஊராட்சியும் உங்கள் திட்டமும்.

(கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1968 பிப்ரவரி மாதம் 26-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 379-ன் சுருக்கம்.)

## மருத்துவத் துறை, பொதுச் சுகாதாரத் துறைகளை ஒன்றாக இணைத்து, சுகாதாரப் பணிகள்—குடும்பக் கட்டுப்பாடு துறை என்ற ஒரே துறையை அமைத்தல்.

## Establishment—Integration of Medical and Public Health Departments—

மருத்துவத் துறையும், பொதுச் சுகாதாரத் துறையும் ஒன்றாக இணைக்கப்பட்டு, சுகாதாரப் பணிகள் இயக்குநர் அலுவலகம்(Directorate of Health Services) என்ற புதுத் துறை ஏற்படுத்தப்படும் என்று, சுகாதாரத் துறையின் 1966-ஆம் ஆண்டு எப்ரல் 27-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 740-ல் அரசு ஆணைகள் பிறப்பித்தது. தற்போது, சுகாதாரப் பணிகள், குடும்பக் கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம் (Directorate of Health Services and Family Planning)என்ற ஒரு புதிய இயக்குநர் அலுவலகம் உடனே அமைக்கப்பட்டு, அந்த புதிய துறைக்கு ஒரு இயக்குநர் நியமிக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

[சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு துறையின் 1968 பிப்ரவரி 20-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 299-ன் சுருக்கம்]

## சென்னையிலுள்ள அரும்பாக்கத்தில் 100 படுக்கைகள் கொண்ட இந்திய முறை மருத்துவ மனை கட்டுவதற்கு அனுமதி.

## Indian Systems of Medicine—Construction of a 100-bedded Hospital at Arumbakkam Farm, Madras—Sanctioned

சென்னையிலுள்ள அரும்பாக்கத்தில் இருக்கும் இந்திய வைத்திய மூலிகைப் பண்ணையில் (Arumbakkam herbal farm of Indian Medicine) 100 படுக்கைகள் கொண்ட இந்திய முறை வைத்திய மருத்துவ மனையை ரூ. 8·18 லட்சம் மதிப்பளவில் கட்டுவதற்கு அரசு அனுமதி யளிக்கிறது.

[பொதுப்பணித் துறையின் 1968-ம் ஆண்டு பிப்ரவரி 28-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 411-ன் சுருக்கம்]

## இந்த இதழில்...


| | பக்கம். |
|---|---|
| தமிழால் முடியும் .. .. .. | 2 |
| கூட்டுறவு வளர்ச்சி—ஓர் ஆய்வுரை .. .. | 5 |
| மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்துவோம் .. .. .. | 8 |
| "வினை நலம் வேண்டிய எல்லாம் தரும்" .. | 11 |
| மது விலக்கு (சிறு கதை) .. .. | 16 |
| உலக தொழில் வர்த்தக பொருட் காட்சியில் தமிழக அரங்கு .. .. .. | 33 |


## அடுத்த இதழில்...

தமிழக ஆளுநர் மாளிகையிலே—பேட்டி

எழுத்தாளர் கார்க்கி—அகிலன் (சிறப்புக் கட்டுரை).

கால்நடைகளின் சுகாதாரம்—டாக்டர் மந்திர மூர்த்தி.

அனைத்திந்திய மது விலக்கு மாநாடு—தொகுப்பு.

கூட்டுறவு இயக்கம் எட்டுச் சுரைக்காயா?—திரு வி. கே. சி. நடராஜன், ஐ. ஏ. எஸ்., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்.


ஆசிரியக் குழுத் தலைவர் :
திரு T. A. S. பாலகிருஷ்ணன், I.A.S.

வெளியிடுபவர் : திரு வி. நடராஜன், ஐ. ஏ. எஸ்.
ஆசிரியர் : திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development, Madras-9. Chairman of the Editorial Committee: Thiru T. A. S. Balakrishnan, I.A.S.,
Wrapper printed at Vadapalani Press, Madras-26.

*With the best compliments of :*

MADRAS CEMENTS LIMITED
RAMCO BRAND PORTLAND CEMENT

# MADRAS CEMENTS LIMITED

(MANUFACTURERS OF PORTLAND CEMENT)

*Regd. Office* :
"Ramamandiram"
RAJAPALAIYAM

*Factory* :
Ramasamyraja Nagar
TULUKKAPATTI, R. S.

*ALWAYS INSIST ON*

**RAMCO BRAND "GOPURAM MARK" PORTLAND CEMENT**

*FOR QUALITY*

A UNIT OF "RAMCO" GROUP, RAJAPALAIYAM

## அண்மையில் சென்னை நகரில் நடந்த நிகழ்ச்சிகள் குறித்து

# நீதி விசாரணை

### சாட்சியமளிக்க முன் வருமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள்

தமிழக அரசு பஸ் போக்குவரத்துத் துறையில் சில ஊழியர்களுக்கும், மாணவர்களுக்குமிடையே சென்னை நகரில் சில பகுதிகளில் 1968-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 25, 26-ஆம் நாட்களில் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றி விசாரிக்க மாவட்ட செஷன்ஸ் நீதிபதி திரு பி. எஸ். சோமசுந்தரம், நீதி விசாரணைக் கமிஷன் நீதிபதியாகத் தமிழக அரசினரால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்த விசாரணை, இந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும், அவைகள் நடப்பதற்கு ஏதுவான காரணங்கள், சூழ்நிலைகள் பற்றியும் விசாரிக்கும், பகிரங்க விசாரணையாக நடைபெறும். இந்நிகழ்ச்சிகள் பற்றி நேரடியாகத் தெரிந்திருந்து, சாட்சியமளிக்க விரும்புவோர் அனைவரும் சாட்சியமளிக்க முன் வரும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். சாட்சியமளிக்க விரும்புபவர்கள் கீழ்க்காணும் விவரங்களை, பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதி, எண்-2, அரசாங்க மாளிகைத் தோட்டம், சென்னை-2 என்ற முகவரியில் உள்ள விசாரணைக் கமிஷன் அலுவலகத்துக்கு, 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ஆம் தேதிக்குள் எழுத்து மூலம் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்:—

1. பெயர் :
2. முகவரி :
3. தொழில் அல்லது பதவி :
4. எந்த குறிப்பிட்ட நிகழ்ச்சி பற்றிய சாட்சியம் என்ற விவரம் :

விசாரணை 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ஆம் நாள், மேற்குறிப்பிட்ட அலுவலகத்தில் தொடங்கி, முடியும்வரை தொடர்ந்து நடைபெறும். இக்கமிஷன் முன்பு உண்மையான சாட்சியமளிப்பவர்களுக்கு சிவில், கிரிமினல் நடவடிக்கையிலிருந்து மேலே குறிப்பிட்ட சட்டத்தின் 6-ஆவது பிரிவில் கண்டுள்ளபடி பாதுகாப்பு அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

REGD. No. M. 7277

© தமிழ்நாடு அரசாங்கம் 1968


# இராமநாதபுரம் ஜில்லா கூட்டுறவு சப்ளை அண்டு மார்க்கெட்டிங் சொசைடி லிட்.,

க்யு. 816, மதுரை-1.

தலைமை அலுவலகம்:

**156, வக்கீல் புதுத் தெரு, மதுரை-1.**

பொது மக்களின் எல்லாத் தேவைப்பொருள்களுக்கும்

மாவட்ட மொத்த விநியோகஸ்தர்கள்.

## "ராம்கோ"

கலப்பு உர தயாரிப்பாளர்கள்

வி. வி. இராமசாமி, எம்.பி.,
தலைவர்.

ஆர். எஸ். எட்வர்டு,
காரியதரிசி.